# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி ரு | பிரஜோற்பத்தி ௵ மார்கழி௴ | பகுதி ௧௨

30 SEP 1932

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 305 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ” |
| செங்குந்த சமூகத்தைப் பற்றிய குறிப்புக்கள் | 309 |
| மாதர் பகுதி:—மாதரும் மனை வாழ்வும் | 317 |
| செங்குந்த யாத்திரைவாசி | 319 |
| இலகு வைத்தியம் | 322 |
| விகடத் துணுக்குகள் | 323 |
| விருந்தோம்பல் | 324 |
| காந்தியார் படலம் | 325 |
| வர்த்தமானம் | 329 |
| திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A. | 330 |
| திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., B.L. | 331 |
| கிளர்ச்சி | 333 |


காரியாலயம்:—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நான்காவது பொதுக் கூட்டம்

1931-ம் ஞு டிசம்பர் மீ 26உ சனிக்கிழமை சென்னை மயிலாப்பூரில் நம்மவர் மூன்ருவது மகாநாடு கூடும்போது நடைபெறும்.

### கிளைச்சங்கங்களுக்கு அறிக்கை

1. பொதுக் கூட்டத்துக்கு அனுப்பும் பழைய பிரதிநிதிகளின் காலவரையரை முடிந்துவிட்டபடியால் புதிதாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் பெயர்களைத் தலைச் சங்கத்துக்குக் கூடிய சீக்கிரம் தெரிவிக்க ஒவ்வொரு கிளைச் சங்கமும் வேண்டிக்கொள்ளப் பெறுகின்றது.

2. அதற்குள் கட்டண பாக்கிகளையும் செலுத்திவிடவேண்டும்.

3. இதுவரை தலைச்சங்கத்தோடு இணைக்கப்பெருத சங்கங்கள் அதற்குரிய கட்டணத்தை ஷை தேதிக்குள் அனுப்பி இணைக்கப்படுவதற்கு மனு செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் புது மனு செய்துகொள்ளும் சங்கங்களும் தலைச்சங்கத்துப் பொதுக் கூட்டத்துக்குத் தாங்கள் தேர்ந்தெடுத்தனுப்பும் பிரதிநிதிகளின் பெயர்களைக் கூடிய சீக்கிரம் தெரியப்படுத்தவேண்டும்.

4. பொதுக் கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்புவோர் அத் தீர்மானங்களின் நகல்களையும் முன்னதாகவே அனுப்பிவைக்க வேண்டும்.

### பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சிமுறை

1. நிகழும் ஆண்டின் அறிக்கைப் பத்திரத்தினை அங்கீகரித்தல்.

2. நிருவாக சபையின் அங்கத்தினர்களையும் உத்தியோகஸ்தர்களையும் தேர்ந்தெடுத்தல்.

3. பிரேரேபிக்கப்பெறும் தீர்மானங்களுக்கு முடிவு கூறல்.

4. புதிய பட்டதாரிகளுக்கு வாழ்த்துக் கூறல்.

வருக வருக! திரண்டு வருக!!

## தென்னிந்திய செங்குந்தர் மூன்ருவது மகாநாடு

சென்னை நகரம் அழகிய காட்சிகளோடு திகழும் காலம் இதுவே. ரெயில்வே சார்ஜுகளெல்லாம் குறைந்திருக்கும் காலமும் இதுவே. குறைந்த செலவில் சென்னை நகர அலங்காரங்களைக் கண்டு ஆனந்திக்கவும், பல ஊர்களிலிருந்து வரும் ஆயிரக்கணக்கான சகோதரர்களைக் கண்டு அளாவளாவவும் நீங்கள் விரும்பினுல் இந்தச் சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.




# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர்:—ம. சண்முகசுந்தா முதலியார், எம். ஏ.,

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

…ாகுதி—௫] பிரஜோற்பத்தி ஞு மார்கழி மீ [பகுதி—கஉ


337 SEP 193?

### கடவுள் வணக்கம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபத மளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. (திருவாசகம்)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மூன்ருவது மகாநாடு

மூன்ருவது மாகாநாட்டினைச் சென்னைத் திருமயிலாப்பூரில் கூட்டுவதற்கான முயற்சி வெகு மும்முரமாக நடந்துகொண்டு வருகிறது. மாகாநாட்டுத் தினம் டிசம்பர் 26-ஆந் தேதி சனிக்கிழமை யென்பதும் தீர்மான மாய்விட்டது. இது கிறிஸ்துமஸ் விடுமுறையில் வருவதால் எல்லா ரெயில்வே கம்பெனிக்காரர்களும் ரிடர்ன் டிக்கட்டு கொடுத்துவரும் அனுகூலத்தினைக் கைப்பற்றிப் பெருந் திரளான பிரதிநிதிகள் மகாநாட்டுக்கு விஜயஞ் செய்வார்களென எதிர்பார்க்கிறோம். சென்னைப் பட்டணம் கேளிக்கைகளும் விநோதங்களும் களியாட்டங்களும் பொருட்காட்சிகளும் மலிந்து வெகு அழகாக இருக்கும் காலமும் அதுவேயாகும். ஆகவே, சென்னையை இது வரைக் காணாத அன்பர்களும் மற்றையோரும் அச்சமயம் இங்கு வருவதால் இன்பமுறுவார்களென்றே நினைக்கிறோம்.

ஆகவே, கிளைச்சங்கத் தலைவர்களும், அமைச்சர்களும், கிராமப் பிரமுகர்களும் ஆங்காங்கே கூட்டங்கள் கூடிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு பெருங் கூட்டமாக மகாநாட்டுக்கு வருமாறு வேண்டிக்கொள்கிறோம். கிராமப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெருதவர்களும் செங்குந்தர் என்னும் தமது சொந்த ஹோதாவில் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக வரலாம். ஆகவே எந்தச் செங்குந்தரும் வரத் தயங்க வேண்டியதில்லை. துரைத்தனத்துக்குத் தலை நகரமாகிய சென்னையில் இம்மகாநாடு கூடுவதால், இதற்கு எவ்வளவு அதிகமாகப் பிரதிநிதிகள் பல இடங்களிலிருந்தும் திரண்டு வருகிருர்களோ அவ்வளவுக்கும் நமது சமூகத்தைப்பற்றித் துரைத்தனத்தாருக்கும், சென்னைவாசிகளுக்கும், கனதனவான்களுக்கும், தினசரிப் பத்திரிகாசிரியர்களுக்கும் நன்மதிப் புண்டாகும் என்பதை அன்பர்கள் உணர்ந்து, எவ்வளவு சொந்த அலுவல்கள் இருந்தபோதிலும் அவற்றை யெல்லாம் சிறிது தள்ளிவைத்து இம் மகாநாட்டுக்குப் பெருந்திரளாக வந்து சேருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரதிநிதிகள் கட்டணம் முதலிய விவரங்களும், வரவேற்புத் தலைவர்கள், மகாநாட்டுத் தலைவர்கள், திறப்பவர், கொடியுயர்த்துபவர் முதலியோரது பெயர்களும் மகாநாட்டு

தலைவர்களது சரித்திரங்களும் வேறு இடங்களில் பிரசுரித்துள்ளோம்.

## கல்வி நிதி

சமயம் வாய்க்கும்போதெல்லாம் நமது கல்விநிதிக்கு மூலதனம் திரட்டிவைப்பது அதன் பாதுகாப்பாளரின் பெருங் கடமையாகும். சென்ற மகாநாட்டின்போதும் இந்நோக்கத்தினைக் கொண்டே அதன் பாதுகாப்பாளர் தாமே அதற்கு நன்கொடை யளித்ததோடு மகாநாட்டுக்கு வந்திருந்த இதர கனவான்கள் சிலரிடமிருந்தும் நன்கொடைக்குக் கையொப்பங்கள் வாங்கினர். ஆயினும், அச்சமயம் வாக்களித்த தொகையின் பெரும் பகுதி இன்னும் நிதியில் சேராதிருப்பது விசனிக்கத்தக்கதே. இம் மகாநாட்டிற்காகச் சென்னைக்கு வரும் சமயமாவது கையொப்பமிட்ட கனவான்கள் தாங்கள் வாக்களித்துள்ள தொகைகளைக் கொண்டுவந்து கல்விநிதியின் அமைச்சர்களிடம் செலுத்துமாறு வேண்டிக்கொள்ளுகிறோம். நிதியின் தருமம் அனைத்தும் அதன் வட்டி வருவாயைக் கொண்டே நடைபெறவேண்டி யிருப்பதால், எவ்வளவுக் கெவ்வளவு நிதியின் மூலதனம் அதிகமாகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் தரும வாய்ப்பும் அகன்று வரும் என்பதை அன்பர்களுக்குக் கூறவேண்டியதில்லை.

மேலும், சென்ற மகாநாட்டின்போது கல்விநிதிக்குப் பணம் கேட்பார்களென்று எதிர்பார்க்காததால் பல அன்பர்கள் கையில் பணம் கொண்டுவரவில்லையே யென்று வருந்தினார்கள். அத்தகைய அபிமானிகள் இச்சமயம் பணம் கொண்டுவந்து தமது அவாவினைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். இத்தகைய பெருஞ் சந்தர்ப்பங்களிலேதான் ஷை தர்ம காரியங்கள் செவ்வனே நடைபெறுதற்கான உதவியும் உற்சாகமும் பெறவேண்டியிருப்பதால், நமது கல்விநிதிக்குப் பண முதவ எவரும் பின்வாங்க மாட்டார்களென்றே நம்புகின்றோம். எவ்வளவு சிறு தொகையாயினும் இயன்றதை ஒவ்வொருவரும் கல்வி நிதிக்கு உதவுவதென்னும் கொள்கையோடு முன்வருவார்களானால், பல துளி பெருவெள்ள மெனத் திரண்ட மூலதனம் நமது கல்விநிதிக்குக் குவிந்துவிடும்.

## 'மித்திரன்'

நமது 'மித்திர'னுக்கு இம் மாதத்தோடு ஐந்தாவதாண்டு முடிகின்றது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர வேண்டியவன் இவ் வருஷம் உடையின் சொலிப்புக் குன்றியும் உண்டி சுருங்கியும் வந்துகொண்டிருக்கிறான். ஆயினும், அவன் நம்மக்களுக்கு ஊட்டிவரும் விஷய உணவு மட்டும் சுவையும் சத்தும் செறிந்து நாளுக்கு நாள் ருசிகரமாகவும் புஷ்டியுள்ளதாகவும் மாறிக்கொண்டு வருகின்றது. இதற்கான சிரமமனைத்தையும் தாமே ஏற்றுக்கொண்டு, மிகச் சிறந்த குலாபிமானத்தோடும், உண்மை யார்வத்தோடும், திறமையோடும் பாடுபட்டு வரும் நமது துணையாசிரியருக்கு எமது நன்றியும், 'மித்திரன்' சந்தாநேயர்களது நன்றியும் உரியவையாகுக. அவரது முயற்சியால் அடுத்த ஆண்டில் நமது 'மித்திரன்' முன்னினும் பன்மடங்கு பிரகாசத்துடன் ஒளிர்வான் என நம்புகின்றோம்.

## சில குட்டித் தொல்லைகள்

ஆயினும், 'மித்திர'னை நடத்துவோர்க்குக் கவலையும் மனக்கஷ்டமும் இல்லாமலில்லை. சந்தா பாக்கி நிற்பதால், அச்சுக் கூலி, காகிதச் செலவு, தபாற்செலவு, சிப்பந்திகள் சம்பளம் முதலியவற்றை மாதம் மாதம் எவ்விதம் முட்டின்றித் தாங்குவதென்பது அப்போதைக் கப்போது பெருங் கவலையாக இருக்கின்றது. இதைப்பற்றிப் பன்முறையும் 'மித்திர'னில் எழுதியுள்ளோம். சில சமயங்களில் இவ்விதம் அடிக்கடி எழுத நேர்வதால் எமக்கும் எமது துணைவர்களுக்கும் மனச்சலிப்பு ஏற்படுவதும் உண்டு. இதோடு, சில குட்டித் தொந்தரவுகளும் சில்லரைத் தொல்லைகளும் எதிர்பாராத விதமாகச் சில சமயங்களில் தோன்றுகின்றன. உபகாரச் சம்பளத்துக்கு மனு போட்டு உதவி மறுக்கப்பெற்ற ஒருவர் தமக்கு உதவிசெய்யாவிட்டால் நன்கொடை வாக்களித்துள்ளவர்க் கெல்லாம் அவற்றை யனுப்பாம லிருக்குமாறு எழுதிவிடுவதாகவும், தமக்குத் தெரிந்த சந்தாநேயர்களை யெல்லாம் பத்திரிகையை வாங்காம லிருக்கச் சொல்லித் தடுக்கப்போவதாகவும், சங்கத்துக்கும் பத்திரிகைக்கும் விரோதமாக எதிர்ப் பிரசாரம் செய்யப் போவதாகவும் பயமுறுத்திச் சில தபால் அம்புகள் விட்டுக்கொண்டிருப்பார். 'மித்திர'னில் போடவேண்டுமென்று ஒரு வியாசத்தை யெழுதி யனுப்பிய சந்தாதாரர் ஒருவர், அவ் வியாசத்தை 'மித்திர'னில் வெளியிடாது தள்ளி



விட்டோமானால் 'அவருடையதை யேன் போட்டீர்கள்? இவருடையதை யேன் போட்டீர்கள்? இதில் என்ன இருக்கிறது? அதில் என்ன இருக்கிறது? என்னுடையது எவ்விதத்தில் தாழ்ந்துவிட்டது? அடுத்த 'மித்திர'னில் அதைப் போடாவிட்டால் எனக்கு வரும் 'மித்திர'னைத் திருப்பி யனுப்பிவிடுவேன், எனது கிராமத்தார் அனைவரையும் திருப்பி அனுப்பச் சொல்லுவேன்' என்று வெகுண் டெழுதுவார். தமது பிரதாபங்களைத் தாமே நேரிலோ தமது அபிமானிகளைக் கொண்டோ எழுதி அனுப்பிவிட்டவர் ஒருவர், அது மித்திரனில் வரவில்லையாயின், ஊரில் உள்ளவர்கள் இல்லாதவர்கள் கையொப்பங்களையெல்லாம் இட்டு ஒரு நீண்ட மிரட்டல் மகஜர் தயார் செய்து எம்மைத் தாக்குவார். இவ்வித உறுமல்களும் மிரட்டல் புரட்டல்களும் ஒரு புறம் எமது மனதைக் கஷ்டப்படுத்துகின்றன. அஞ்ஞான இருளில் ஆழ்ந்து கிடக்கும் நமது மக்களிடையே இந்தச் சுயநலப் பேய்கள் எவ்வளவு விஷமம் செய்யலாமோ எனக் கவலையுறவேண்டி யிருக்கிறது. 'குயவனுக்குப் பல பகல் சூளை, தடியனுக்கு ஒரு நொடி வேலை' என்னும் உலக வழக்குப்படி நெடுநாளைய உண்மை உழைப்பால் ஏற்பட்டுள்ள குலமுன்னேற்றக் கட்டடத்துக்கு இவர்கள் சுரங்கம் வைக்க முயற்சிக்க நினைப்பது மிகவும் அற்பத்தனமேயாயினும், இவர்களையும் நம்பும் நிலைமையில் எத்தனை பாமர ஜனங்கள் நம்மவருள் இருக்கின்றனர் என்பதை உன்னுந்தோறும் எமது மனம் நோகின்றது. ஆயினும், உண்மை உழைப்புக்கும் நல்ல செயல்களுக்கும் முட்டுக்கட்டைகளாக நன்றியின்மையும் தூற்றல் மொழிகளும் தோன்றுவது இயற்கை என்பதை நித்திய அனுபவத்தில் உணர்ந்து அவற்றைப் பொருட்படுத்தக் கூடாது என்னும் தீர்மானத்துடன் குலச் சேவையில் இறங்கியுள்ள எமக்கும் எமது தோழர்களுக்கும் இவற்றால் யாதொரு தீமையுமுண்டாகாது. மற்றையோர் ஏமாறுதிருக்க வேண்டுமென்பதே எமது கவலை. ஆகவே, எவரேனும் மேற்குறிப்பிட்டபடி நமது மித்திரனையோ, சங்கத்தையோ, கல்வி நிதியையோ தூற்ற முற்படுவார்களாயின், அது விஷயமாக நேரில் எமக்கோ மேற்படி ஸ்தாபனங்களின் அமைச்சர்களுக்கோ எழுதி உண்மையினை அறிந்துகொண்டு, பிறகு அத் தூற்றல்களை மதிக்கவேண்டிய விதத்தில் மதிக்குமாறு அன்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

13-12-31 அன்று திருவாளர் சு. குழந்தைவேல் முதலியார் தலைமையில் நடந்த நிருவாக சபைக் கூட்டத்தில்—

(1) ஷை சங்கத்தின் வருடாந்தர அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது;

(2) கிளைச்சங்கங்களின் ஜாபிதா அங்கீகரிக்கப்பட்டது;

(3) 12-5-31 முதல் 30-11-31 வரையுள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன;

(4) திருவாளர் சு. குழந்தைவேல் முதலியார் அவர்கள் மூன்றாவது சமூக மகாநாட்டுக்கு வரவேற்புச்சபைத் தலைவராகவும், திருவாளர் V. ரத்தின முதலியார், BA., B.L. அவர்கள் மூன்றாவது வாலிபர் மகாநாட்டுக்கு வரவேற்புச்சபைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்;

(5) சங்கத்தின் உத்தியோகஸ்தர்களது டிசம்பர் மாதத்துச் சம்பளம் மகாநாட்டு வரவேற்புச் சபையின் நிதியினின்றும் கொடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது;

(6) 1930-ஆம் ௵ டிசம்பர் மாத முதற்கொண்டு 1931-ஆம் ௵ மே மாதம் முடிய ஆகும் 6 மாதங்கட்கும் திருவாளர் தி. அ. சண்முக முதலியார், திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய இருவரது சம்பளங்களையும் கொடுக்கும்படி இரண்டாவது மகாநாட்டு வரவேற்புச் சபையினை வேண்டிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது;

(7) திருவாளர் S. திருநாவுக்கரசு முதலியாரை 1932-ஆம் ௵ ஜனவரி மாத முதல் தேதியிலிருந்து பிரசாரத்துக்காகவும் சந்தா வசூலுக்காகவும் நியமிக்க வேண்டுமெனவும், வேலை செய்யும் காலத்திற்கு மட்டும் அவருக்கு மாதம் ரூ. 20 வீதம் சம்பளம் கொடுக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது;

S. K. M. முருகைய முதலியார், அமைச்சர்.

## செங்குந்தர் கல்வி நிதி

13-12-31 அன்று நடந்த ஷை நிதியின் நிருவாக சபைக் கூட்டத்தில்—

M. ரத்னத்திற்கு (5-வது வகுப்பு, மிடில் ஸ்கூல், மதுரை) அனுமதிக்கப்பட்ட உபகாரச் சம்பளமாகிய 6 ரூபாய் 8 ரூபாயாகவும்,

C. பாலசுப்பிரமணியத்துக்கு (5-வது வகுப்பு, பி. எஸ். ஹைஸ்கூல், மயிலாப்பூர்) அனுமதிக்கப்பட்ட 12 ரூபாய் 24 ரூபாயாகவும்,

P. சம்பந்தனுக்கு (4-வது வகுப்பு, பி. எஸ். ஹைஸ்கூல், மயிலாப்பூர்) அனுமதிக்கப்பட்ட 12 ரூபாய் 24 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டன.

C. K. ருக்மணிக்கு (பிரபரேடரி வகுப்பு, ஐஸ் ஹௌஸ் ஹாஸ்டல், சென்னை) இவ்வருஷத்துக்கு ரூ. 25-ம்,

M. R. பெருமாளுக்கு (IV ஆனர்ஸ் வகுப்பு, ஸெண்ட் ஜோசப்ஸ் காலேஜ், திருச்சி) இவ்வருஷத்துக்கு ரூ. 25-ம் அனுமதிக்கப்பட்டன.

தீர்த்தா முதலியாருக்கு (வித்வான் வகுப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) 10 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கித்தர அனுமதிக்கப்பட்டது.

திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார், M. A., L. T., திருவாளர் மா. பா. கந்தசாமி முதலியார், B. A., B. E., திருவாளர் வீ. ரத்தின முதலியார், B. A., B. L. ஆகிய மூவருமடங்கிய உட்சபை மாணவரது கல்வி அபிவிருத்தி முதலியவற்றில் திருப்தி யடைந்து அனுமதித்த பின்னரே ஒவ்வொரு மாணவருக்கும் உபகாரச் சம்பளம் அளிக்கப்பட வேண்டுமெனவும்,

கல்வி நிதித் தொகையினைப் பெருக்குவதற்காக, சமீபத்தில் நடைபெற விருக்கும் நம்மவர் மூன்றாவது மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் குலாபிமானமிக்க செங்குந்தச் செல்வர்களிடமிருந்து நன்கொடையும் உண்டிப் பணமும் வசூலிக்கவேண்டு மெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மா. பா. கந்தசாமி முதலியார், அமைச்சர்.

## தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாடு

### தேர்தல்களில் வெற்றி

சென்னை மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்கள் மகாநாட்டினைத் திறந்துவைக்கச் சம்மதித்துள்ளார்.

திருவாளர். தி. க. ச. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் சில அசந்தர்ப்பங்கள் காரணமாகக் கொடியேற்று விழா வாற்றச் சம்மதியாததால் அப் பணியினைத் தலைச்சங்க அமைச்சர் திருவாளர் S. K. M. முருகைய முதலியார் அவர்கள் ஆற்றுவார்கள்.

மகாநாட்டு அலுவல்களின் மிகுதியைக் குறித்து, வழக்கப்படி இரு மகாநாடுகளுக்கும் தனித்தனியே இரு வரவேற்புச் சபைத் தலைவர்கள் இருப்பது அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டதால் தலைச்சங்கத்தின் உபதலைவர் திருவாளர். சு. குழந்தைவேல் முதலியார் அவர்கள் சமூக மகாநாட்டுக்கு வரவேற்புச் சபைத் தலைவராகவும், திருவாளர். வீ. ரத்தின முதலியார் B. A., B. L., அவர்கள் வாலிபர் மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் நகர சபைக்குத் திரு. ம. தசாமிநாத முதலியாரவர்கள் தலைவராகவும், திருவாரூர் நகர சபைக்குத் திருவாளர் தி. நா. சபாபதி முதலியாரவர்கள் உப தலைவராகவும், சைதாப்பேட்டை நகர சபைக்குத் திருவாளர் S. சடையப்ப முதலியாரவர்கள் உபதலைவராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சேலம் நகரசபைத் தேர்தலில் 25-வது வார்டுக்குத் திருவாளர். S. R. அர்த்தனாரி முதலியார் அவர்கள் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றி மாலை சூடியுள்ள நங்குலப் பெரியார்களனைவர்க்கும் நமது பெருமகிழ்ச்சியையும், நல்லுரையையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். (ப—ர்.)

---

### தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த தர்ம வைத்தியசாலை அதிர்ஷ்டச் சீட்டு

இச்சீட்டு தேவகோட்டையிலுள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்ய உதவும் நிதியின் பொருட்டுப் பொதுஜன சேவையில் பேரூக்கமுடைய திரு. S.P.V.P. வாலசுப்பிரமணிய முதலியார் அவர்களால் நடத்தப்படுகிறது. குறைவற்ற செல்வமாவது நோயற்ற வாழ்வே யென்ப துணர்ந்த பெரியார்கள் அப் பெருவாழ்வினை மக்களுக்கு அளிக்கும் பொதுநல நோக்கத்துடன் நடைபெறும் இச் சீட்டுக்கு மகிழ்வுடன் கைங்கரியம் செய்ய முன் வந்து இதனை ஆதரிப்பரென நம்புகிறோம். (ப—ர்.)



# Notes on the Sengunthars

*(Sent to the superintendent, Census operations)*

**Name, Title, Language, Religion:** The *Sengundar* community is known also as the *Kaikola* Community. When and why these names have been applied to it are explained in the accompanying historical sketch.

The only title by which members of this community are distinguished all over this Presidency from others is *Mudaliar*. (The origin of this title is explained in the historical sketch.)

Being mainly confined to the Tamil Country they speak the Tamil tongue without exception. But Sengundars or Kaikolars in the Chittore district speak also Telugu, because of their contact with other Telugu speaking people. Yet even these Telugu speaking Sengundars have Tamilians for their family priests.

Sengundars are mainly Saivites, but a very few converts to Vaishnavism are found in the Chingleput, North Arcot and Tanjore Districts only. Residence in the vicinity of Vaishnavite centres of culture accounts for this conversion. In the Tinnevelly District there are some Sengunda converts to Christianity, whose conversion cannot be traced to earlier than the middle of the 9th century.

**Dispersion:** The Sengundar community dispersed all over the Tamil districts of the Presidency in a more or less degree. Chittore is the only Telugu district where they are found in appreciable numbers. The more ancient settlements of this community are to be found in the Tanjore, South Arcot, Chingleput and North Arcot Districts. Subsequently, expansion took two directions, West and South, that is, towards the cotton growing districts of Coimbatore and Tinnevelly. The inscriptions in the temples of the Tinnevelly districts refer to this colonisation as having taken place in the early part of the 16th century.

## செங்குந்த சமூகத்தைப்பற்றிய குறிப்புக்கள்

### ஜன சங்கியை கணிக்கும் இலாகா தலைவருக்கு ஆசிரியர் அனுப்பியவை

பெயர், பட்டம், பாஷை, மதம்:—செங்குந்த சமூகம் கைக்கோள குலமெனவும் வழங்கப்படும். இப் பெயர்கள் அதற்கு எப்பொழுது எக்காரணத்தால் வாய்த்தன என்பது இதனோடு வரும் சரித்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இந்த இராஜதானி முழுமையும் முதலியார் என்னும் பட்டமே இக் குலத்தினரை மற்ற குலத்தினரினின்றும் பிரித்துக் காட்டுகிறது. (இப் பட்டம் ஏற்பட்ட விதமும் சரித்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.)

பெரும்பாலும் தமிழ் நாட்டிலேயே வாழ்கின்றமையால், இவர்கள் வேறுபாடின்றித் தமிழ் மொழியையே பேசுகிறார்கள். ஆனால் சித்தூர் ஜில்லாவிலுள்ள செங்குந்தர் அல்லது கைக்கோளர், தெலுங்கு பேசும் வேறு ஜாதியாருடன் தமக்குள்ள தொடர்பு காரணமாகத் தெலுங்கும் பேசுகிறார்கள். ஆயினும், தெலுங்கு பேசும் இவர்களுங்கூடத் தமிழரையே தங்கள் குடும்பக் குருக்கள்மாராகக் கொண்டுள்ளனர்.

செங்குந்தர் பெரும்பாலும் சைவர்களே. ஆனால், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களில் மட்டும் வைணவத்திற்கு மாறியோர் சிற்சிலர் காணப்படுகின்றனர். வைணவ சம்பிரதாயங்கள் திகழும் ஸ்தானங்களுக்கு அருகாமையில் வாழ்வதே இம் மதமாறுபாட்டுக்குக் காரணமாகும். திருநெல்வேலி ஜில்லாவில் கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய செங்குந்தர் சிலர் இருக்கின்றனர். அவர்கள் 19-ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்துக்கு முன் அதைத் தழுவி யிருப்பரெனக் கூற ஆதாரங்க ளில்லை.

பரவுதல்:—செங்குந்த சமூகம் இந்த ராஜதானியிலுள்ள தமிழ் ஜில்லாக்கள் முழுதும் அதிகமாகவோ குறைவாகவோ பரவியுள்ளது. தெலுங்கு ஜில்லாக்களில் சித்தூ ரொன்றில்தான் சுமாரான தொகையினர் காணப்படுகின்றனர். இச் சமூகத்தின் மிகப் பழமையான ஸ்தானங்கள் தஞ்சாவூர், தென்னாற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களில் காணப்படுகின்றன. அவற்றிற் கடுத்தாற்போல் மேற்கு தெற்கு ஆகிய இரண்டு திக்குக்களில், அதாவது பருத்தி பயிர் செய்யும் கோயம்புத்தூர் திருநெல்வேலி ஜில்லாக்கள் பக்கமாக, இவர்கள் பரவினார்கள். திருநெல்வேலி ஜில்லா ஆலயங்களிலுள்ள சாஸனங்கள் இந்தக் குடியேற்றம் 16-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் ஏற்பட்டதாகக் குறிப்பிடுகின்றன.

French settlements like Karaikal and Pondicherry were originally peopled by members of this community, as was the case with the early settlements of the English East India Company on the Coromandel Coast, like Madras and Fort St. David. Even to the present day the descendants of these early settlers continue to live there pursuing the trade and industry that drew their ancestors to these places.

A spirit of enterprise has never been lacking among members of this community, and they have voyaged beyond to Ceylon, Burma, Straits Settlements, the Federated Malay States, South Africa and even British Guiana, not mainly in the capacity of indentured labourers, but in that of independent traders and adventurers. A good many have settled permanently in these places, though none of them have cut asunder their local ties in India, which they keep visiting as often as possible.

158904

**Departure from accepted custom** had not been noticed to any appreciable extent. Of late, however, owing to the incessant propaganda of the communal journal 'Sengunda Mitran' the most popular communal journal, in South India with a circulation of 5,000, and the community's provincial Sangam, *The South Indian Sengunda Mahajana Sangam* which has nearly 100 Branches all over the Presidency, a tendency to reform is seen to take rapid strides, as evidenced by resolutions passed by recent provincial, district or local conferences of members of the community. Many of these resolutions have been accepted unanimously and some of the leading lights of the community are setting the example of giving effect to them. Before long, it is hoped the idea of socical reform will take root. Though interdining among members of the community in various localities has always been the accepted rule, intermarriage was confined to a few neighbouring villages, evidently for purpose of convenience and economy. A recent resolution passed by the community's conference reiterated by the same organisation at two different places and times

சோழமண்டலக் கரையிலுள்ள சென்னை, செயின்ட் டேவிட் கோட்டை முதலிய இங்கிலீஷ் கிழக்கிந்தியா கம்பெனி ஸ்தாபனங்களிற் போலவே காரைக்கால், புதுச்சேரி முதலிய பிரெஞ்சு ஸ்தாபனங்களிலும் முதலில் இக் குலத்தவர் நிலைத்தனர். இவ்வாறு ஆதியில் குடியேறியவர்களது வமிசத்தினர் அங்குத் தங்கள் மூதாதைகளை வரவழைத்த தொழில்களையும் வியாபாரங்களையும் செய்துகொண்டு இன்றும் இவ்விடங்களில் வாழ்கிறார்கள்.

எதிலும் தயங்காது தைரியமாக முன்னேறித் தலையிடும் தீரகுணம் இக் குலத்தினரிடை என்றும் குறைந்திருந்ததில்லை. அது காரணமாக இவர்கள் வெகு தூரத்திலுள்ள இலங்கை, பர்மா, ஸ்ட்ரெய்ட்ஸ் ஸ்தாபனங்கள், ஐக்கிய மலேய நாடுகள், தென்னாபிரிகா இவைகளுக்கும் பிரிட்டிஷ் கயானுவுக்குங்கூட வேலைக் கழைக்கப்பட்ட தொழிலாளராக மட்டுமன்றித் தங்கள் சொந்தப் பொறுப்பில் வியாபாரிகளாகவும் வாழ்க்கை தேடுவோராகவும் பிரயாணம் செய்துள்ளார்கள். அத்தகையோரிற் பெருந் தொகையினர், இந்தியாவிலுள்ள தங்கள் சுதேச சம்பந்தங்களை விட்டுவிடாது, கூடுமான போதெல்லாம் வந்து செல்வதால் அவற்றைப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறார்களாயினும், அவ்விடங்களிலேயே சாசுவதமாக நிலைத்துவிட்டார்கள்.

பண்டை வழக்கங்களினின்று விலகுதலானது ஒரு பெருஞ் சம்பவமாகக் கருதக்கூடிய அளவு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. ஆயினும் இக் காலத்தில், இச் சமூகத்தினரின் மாகாண, ஜில்லா, உள்ளூர் மகாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் காட்டுவதுபோல, தென்னிந்தியாவிலேயே சமூக சஞ்சிகைகளுள் ஆதரவு மிகுந்து பிரசித்தி பெற்றுள்ளதும், 5,000 சந்தாதாரரை யுடையதுமான செங்குந்த மித்திரன் என்னும் இச் சமூகத்தின் பத்திரிகை, இராஜதானி முழுமையும் 100-க்கு மேற்பட்ட கிளைச்சங்கங்களை யுடைய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்னும் இச் சமூகத்தின் மாகாணச் சங்கம் இவற்றின் தளரா உழைப்பாலும், பிரசாரத்தாலும் ஆசார சீர்திருத்தம் மிகத் துரிதமாகவே நடைபெற்று வருகின்றது. இத் தீர்மானங்களிற் பல ஏகமனதாக ஏற்கப்பட்டுள்ளதோடு, இக்குலத் தீபங்களாயுள்ள தலைவர்கள் சிலர் அவற்றைச் செய்கையிற் கையாண்டு வழி காட்டியும் வருகிறார்கள். இன்னும் சின்னாட்களில் பழக்க வழக்கச் சீர்திருத்தங்கள் வேரூன்றுமென எதிர்பார்க்கப்படுகிறது. இச் சமூகத்தினரிடை சமபந்தி போஜனம் எல்லாப் பாகங்களிலும் எப்பொழுதும் சாதாரணமாக வழக்கத்திலிருந்திருக்கிறதாயினும், சௌகரியத்தையும் பொருட் சிக்கனத்தையும் கருதி விவாகம் மட்டும் அடுத்தாற்போலுள்ள சில கிராமங்களுக்குள்ளேயே கட்டுப்பட்டிருந்தது. சில நாட்களுக்கு முன் இச்சமூக மகாநாட்டிற் தீர்மானிக்கப்பட்டு, வேறிரண்டு இடங்களிலும் வேறிரண்டு சமயங்களிலும் அதே கூட்-



and supported and acted upon in various villages, has sanctioned wholesale intermarriages without limitation or reserve among all the members of the community. Extravagant expenditure in marriages, betrothals and other ceremonies and conventional dinners etc. are getting rapidly reduced, thanks to the efforts made by the educated members of the community through the community's journal and Sangams. Public opinion is getting to be shaped in these respects on progressive lines.

At a conference of the community held in 1929, there was a strong opposition to widow remarriage but the conference of 1931 accorded unanimous support to the remarriage of issueless widows.

As this community generally performs post puberty marriages it remains unaffected by the Sarda Act.

The Self Respect Movement has not taught anything new to this community as it has been following from time immemorial the accredited principles of the movement, excepting its attack upon the temples and festivals. This Community had never had brahmin priests. Priests born of the community interdining and intermarrying with it had always officiated first. Some of these priests showed of late a separatist tendency, and attempted to form themselves into a superior group calling themselves *Desikars*, avoiding interdining and intermarriage in the community; but the sense of self respect of the community rose high and threatened boycott if the priests persisted in their separatist tendency. Generally speaking, the priest group is gradually losing its hold.

The other aspect of the self respect movement finds no support among the generality of this community. They are as *loyal and devoted* as ever to their temples and temple festivals and pride themselves upon their being an intence religious community. Educated and thoughtful members of the community, however, are trying their best to check extravagance in this direction.

டத்தால் மீண்டும் மீண்டும் ஆமோதிக்கப்பட்டு, பல கிராமங்களிலும் ஆதரிக்கப்பட்டுக் கையாளப்படுவதான தீர்மானமொன்று இச் சமூகத்தினர் அனைவரும் எந்தக் கட்டுப்பாடும் தடையுமின்றி ஒருவர்க்கொருவர் ஒற்றுமை விவாகம் செய்துகொள்ள அனுமதித்துள்ளது. இச் சமூகத்தின் சஞ்சிகை, சங்கம் இவற்றின் வாயிலாக இச் சமூகத்தின் அறிஞர்கள் எடுத்துவரும் தீவிர முயற்சி காரணமாகத் திருமணங்கள், விவாக நிச்சயம், முதலிய சடங்குகளிலும் விருந்துகளிலும் வீணான பணவிரயம் துரிதமாகக் குறைக்கப்பட்டு வருகிறது. இந்தத் துறைகளில் ஜனங்களது அபிப்பிராயமும் முன்னேறிக்கொண்டே இருக்கிறது.

1929-இல் நடைபெற்ற மகாநாட்டில் விதவா விவாகம் மிகப் பலமாகக் கண்டிக்கப்பட்டது; 1931-ம் வருஷ மகாநாட்டிலோ, சந்ததியற்ற விதவைகள் மறுமணம் செய்துகொள்வது ஏகமனதாக ஆதரிக்கப்பட்டது.

சாதாரணமாகவே பக்குவ மடைந்த பின் பெண்களுக்கு மணஞ் செய்வது இச் சமூக வழக்கமானமையால், சார்தா சட்டத்தினால் இதில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை.

சுயமரியாதை யியக்கத்தின் கொள்கைகளுள் கோயில்களையும் திருவிழாக்களையும் தாக்குவது தவிர, மற்றவற்றை இச் சமூகம் பண்டு தொட்டே கையாண்டு வந்திருப்பதால் அவ் வியக்கம் புதிதாக ஒன்றையும் இதற்குக் கற்பித்துவிடவில்லை. இச் சமூகம் பிராமணப் புரோகிதர்களை என்றும் வைத்திருந்ததில்லை. இச் சமூகத்திலேயே பிறந்து இதனுடன் சமபந்தி போஜனம் விவாகம் ஆகிய சம்பந்தங்கள் வைத்துக்கொண்டுள்ள குருக்கள்மாரே முதலில் எப்பொழுதும் சடங்குகளைச் செய்திருக்கின்றார்கள். இக் குருக்கள்மாரிற் சிலர் பிற்காலத்தில் ஒரு தனிப்பட்ட உணர்ச்சியுடன் இச் சமூகத்தினருடன் போஜனம் செய்வதையும் விவாகக் கலப்புக் கொள்வதையும் ஒழித்துத் தங்களைத் தேசிகர்கள் எனக் கூறிக்கொண்டு ஒரு உயர்ந்த கூட்டத்தாராக்கிக்கொள்ள முயன்றனர். ஆனால் இச் சமூகத்தின் சுயமரியாதை புணர்ச்சி உயர்ந்து, இக் குருக்கள்மார் தனியாக விலகி நிற்பதை விடாதிருப்பாராயின், அவர்களை விலக்கித் தள்ளுவதாகப் பயமுறுத்திற்று. பொதுவில் புரோகிதக் கூட்டம் சிறிது சிறிதாக ஆதரவை இழந்துகொண்டே வருகிறது.

சுயமரியாதை யியக்கத்தின் மற்றொரு தன்மை இச் சமூகத்தின் பொது மக்களால் ஆதரிக்கப்படவில்லை. இவர்கள் எப்பொழுதும் போலவே தங்களது ஆலயங்களிலும் திருவிழாக்களிலும் அபிமானங் கொண்டிருப்பதுடன் தாங்கள் ஆழ்ந்த மதப்பற்றுடையவரென்பதையும் பாராட்டிக் கொள்கின்றனர். ஆனால், இச் சமூகத்திலுள்ள படிப்பாளிகளும், அறிஞர்களும் இத் துறையில் பண விரயத்தைக் கூடியவரை தடுக்கப் பாடுபட்டு

**Diet:** Vegetarian diet of the early centuries was gradually replaced by a nonvegetarian diet, but now the tendency is again towards a vegetarian diet.

In the matter of dress and diet this community is keeping abreast of the changing and progressive fashions of the time.

**Purdah:** There had been no purdah in this community at any time in its history.

**Joint Family:** Agricultural communities may find it somewhat difficult to break up the joint family; it may even be necessary to them; but in an industrial and artisan community like this, every individual will be compelled to be self reliant sooner or later in his life and the proportion of divided families is decidedly on the increase.

Frequent dispersion cannot take place because the nature of the industry to which a large majority of the community stick on require group effort in certain stages which will be impossible to gain in the event of dispersion or isolation.

**Communal Discipline** in this community is confined mainly to communal morality, prestige and religious obligations, and it has never attempted to prohibit any occupation on the score that it will entail degradation of caste.

**Other means of livelihood:** The educated few in villages have taken to the teaching profession while the well to do adopt agriculture or trade or both. The majority are weavers, who are still sticking to the looms in spite of the pitiful depresssion of prices and wages everywhere. There is no tendency, however, to form subcastes under any circumstance.

உணவு: ஆதி நூற்றாண்டுகளில் வழக்கத்திலிருந்த மரக்கறி யுணவு நாளடைவில் மாமிச உணவாக மாறிற்றாயினும், இப்பொழுது மறுபடியும் மரக்கறி யுணவுக்கே இச் சமூகத்தினர் திரும்பப் பார்க்கிறார்கள்.

உணவிலும் உடையிலும் காலத்திற் கேற்ப மாறிக்கொண்டும் மேன்மை யடைந்துகொண்டும் வரும் முறைகளை இச் சமூகம் அனுஷ்டித்தே வருகிறது.

பர்டா: இச் சமூகத்தின் சரித்திரத்திலேயே எந்தக் காலத்திலும் இது பர்டாவை (முகமூடி) உபயோகித்ததில்லை.

கூட்டுக் குடும்பம்: உழவு செய்யும் சமூகங்களுக்குக் கூட்டுக் குடும்பத்தைப் பிரிப்பது கஷ்டமா யிருக்கலாம்; அவற்றிற்கு அது அவசியமாயு மிருக்கலாம். ஆனால், திறமையான கைத்தொழிலையுடைய இது போன்றதொரு சமூகத்தில் ஒவ்வொருவனும் தனது வாழ்க்கையில் சீக்கிரத்திலோ நாள் கழித்தோ தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வது கட்டாயமாகும். ஆகவே, பிரிவுபட்ட குடும்பங்களின் அளவு நிச்சயமாக அதிக மாய்க் கொண்டே யிருக்கிறது.

ஆனால் அடிக்கடி பிரிவுபடுவது முடியாத காரியம். ஏனெனில், இச் சமூகத்திற் பெருந்தொகையினர் இன்னும் விடாது செய்துவரும் தொழிலானது சில அம்சங்களில் ஒரு கூட்டத்தின் ஒத்துழைப்பை வேண்டும் தன்மை யுடையதா யிருக்கிறது. பிரிவுபட்டுத் தனிமையாக நின்றால் அவ்வொத்துழைப்பு இயலாததாகிறது.

சமூகக் கட்டுப்பாடு இச் சமூகத்திற் பெரும்பாலும் சமூக ஒழுக்கம், கௌரவம், மதச் சம்பந்தமான கடமைகள் இவற்றைப் பற்றியதாக மட்டுமே யுள்ளது. குலப் பெருமை கெடும் என்பதுபற்றி இக் கட்டுப்பாடு எப்பொழுதும் எத்தொழிலையும் தடுக்க முயன்றதில்லை.

வேறு ஜீவனோபாயங்கள்: கிராமங்களிலுள்ள சொற்ப படிப்பாளிகள் உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டுள்ளார்கள். செல்வ முடையவர்கள் உழவையோ, வியாபாரத்தையோ, இரண்டையுமோ மேற்கொள்ளுகிறார்கள். பெரும்பாலானோர், எங்கும் ஏற்பட்டுள்ள விலைக் குறைவு, கூலிக் குறைவு முதலிய பரிதாபகரமான நிலையிலும்கூடக் கைத்தறிகளைக் கைவிடாதிருக்கும் நெசவாளர்களே. இவ்வா றிருப்பினும், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜாதிஉட்பிரிவுக ளுண்டாக்கிக்கொள்ள முயற்சி ஏற்படவில்லை.

## HISTORICAL SKETCH

**Name:** The Sengundar Community has an ancient and enviable history. Its original name was *Kaikkolar* (கைக்கோலர்) meaning those who have the lance in their hands, (கை=Hand, கோல்=Lance)). Its ancestors formed the main hereditary fighting force of the Great

## சரித்திர வரலாறு

பெயர்: செங்குந்த சமூகத்திற்குப் பிறர் போற்றும் பழைய சரித்திரம் உண்டு. ஆதியில் இச் சமூகத்தினர் பெயர், கையிலே கோலை அல்லது குந்தத்தை ஏந்தியவர் எனப் பொருள்படும் கைக்கோலர் என இருந்தது. இதன் முன்னோர் 10, 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் [illegible]



Chola Kings of the 10th, 11th and 12th centuries A. D., and are referred to in the inscriptions of the period as the 'Great *Kaikkola* army' (Kaikkolap perum padai—கைக்கோளப் பெரும் படை). They had made the victorious might of the Chola Kings felt all over the Southern Peninsula in those centuries. The military character of this community is amply borne out by the name Sengundar, which means "The Bearer of the Red Lance"(Sen-Red, Kundam-Lance), *i. e.* the lance stained with the blood of the enemy. One of the greatest poets of the Tamil Country, Ottakkoothar (ஒட்டக்கூத்தர்) by name, belonged to this community, and he had the unique privilege of distinguishing himself as the chief minister of three successive Chola Kings (1118-1176 A. D.), besides having been for a short period virtual ruler of the realm as Regent during the minority of Kulothunga II. This great poet sang the glories of this community in the immortal verse "Itti Ezhubadu" (ஈட்டி யெழுபது) 'seventy quartrains on the lance' and gave it the poetical title of *Sengundar*, which, along with 'Kaikkolar,' has ever since been the name by which it came to be distinguished from the other South Indian Communities. As hereditary members of the fighting force of the Chola Empire, they weilded considerable power and influence in the state as the ministers and officers of the King's household and as guardians of the famous temples built by the kings in those days. For this reason they were accustomed to be called 'Mudaliars' (Principal men), a title which their descendants have retained to the present day. Needless to say that as at that time the Saivite Cult was making rapid progress and capturing the imagination of the people owing to the great proselytizing activities of its propogators and devotees, the Sengundar community was without exception a saivite one; and being proud of their warlike traditions its members adopted the war-god Subramania as their Guardian Deity, with whom and whose legendary exploits subsequent tradition linked them up as his comrades and brothren. A relic of this legendary belief is still preserved in the Surasamharam (சூரசம்ஹாரம்) festival

யானதும் பரம்பரை வழியாக வந்ததுமான படையா யமைந்திருந்ததோடு, அக் காலத்திய சாஸனங்களிலும் கைக்கோளப் பெரும் படை எனக் குறிப்பிடப்பட் டிருக்கின்றனர். அவர்கள் அந்த நூற்றாண்டுகளில் சோழரது வெற்றி வன்மையைத் தென் தீபகற்ப முழுமையும் உணரச்செய்தார்கள். சிவந்த ஈட்டியை (செங் குந்தம்=சிவந்த ஈட்டி, அதாவது, இகலோரது இரத்தம் தோய்ந்த ஈட்டி) ஏந்தியவர் எனப் பொருள் தரும் செங்குந்தர் எனும் பெயரே இச் சமூகத்தின் போர்த்திறனை நன்கு விளக்கும். மிகப் பிரசித்தி பெற்ற தமிழ்நாட்டுக் கவிகளி லொருவரான ஒட்டக்கூத்தர் இச் சமூகத்தவர். அவர், தொடர்ச்சியாக வாண்ட மூன்று சோழ மன்னரது (கி. பி. 1118—1176) முதன் மந்திரியாக மிளிரும் மேன்மை பெற்றிருந்ததோடு, இரண்டாங் குலோத்துங்கனது இளம்பிராயத்தில் இராஜப் பிரதிநிதியாக இருந்து தாமே நாட்டைச் சீர்பெற ஆண்டும் வந்தார். இப்பெருங் கவிஞர் இச் சமூகத்தின் கீர்த்தியை என்றும் அழியாத ஈட்டி எழுபது (ஈட்டியைப் பற்றிய எழுபது பாடல்கள்) என்னும் நூலில் பாடி, இதற்குப் பாரயம் வாய்ந்த 'செங்குந்தர்' என்னும் பட்டத்தையும் வழங்கினார். இதுவும், கைக்கோளர் என்னும் பெயருமே அது முதல் இச் சமூகத்தைத் தென்னிந்தியாவிலுள்ள மற்றச் சமூகங்களினின்றும் பிரித்துக் காட்டுகின்றன. சோழ சாம்ராஜ்யத்தின் சைனியத்தில் பாரம்பரியமாகப் படை வீரரா யிருந்து, மந்திரி பிரதானிகளாகவும், அரசரது அரண்மனை உத்தியோகஸ்தராகவும், அக் காலத்திலே அரசர்களால் கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற ஆலயங்களின் நிர்வாகஸ்தராகவும் அவர்கள் அரசாங்கத்தில் நிறைந்த அதிகாரமும், செல்வாக்கும் பெற்றிருந்தார்கள். இந்தக் காரணம்பற்றி, அவர்களது வழி வந்தோர் இன்றும் வைத்துக் கொண்டிருக்கும் முதலியார் (முதன்மையானவர்) என்னும் பட்டத்தினால் அவர்கள் வழக்கமாக அழைக்கப்பட்டார்கள். அந்தச் சமயத்தில் சைவ மதமானது சமயாசாரியர்களும் பக்தர்களும் மக்களை அம் மதத்திற்குத் திருப்புவதற்காகச் செய்துவந்த பெரு முயற்சியின் காரணமாகத் துரிதமாகப் பரவி மக்களது மனதைப் பதித்து வந்தமையால், செங்குந்த சமூகத்தினர் வேறுபாடின்றிச் சைவ சமயத்தினராகவே யிருந்தனரெனக் கூறவேண்டா. தங்கள் போர்த்திறனைப் பற்றிய பழம் புகழைப் பாராட்டியதால் இச் சமூகத்தினர் போர்க் கடவுளாகிய சுப்ரமண்யப் பெருமானைத் தங்கள் குல தெய்வமாக ஏற்படுத்திக் கொண்டனர். அதை யொட்டி ஏற்பட்ட கதைகளும் வழக்கங்களும் இவர்களை அவரது துணைவர்களாகவும் சோதரர்களாகவும் அவருடைய பௌராணிக வீரச் செயல்களோடு சம்பந்தப்படுத்திவிட்டன. இந்தப் புராண சம்பந்தமான கொள்கையின் அம்சமொன்று, தென்னிந்தியாவிலுள்ள சுப்ரமண்யர் ஆலயங்களி லெல்லாம் நவம்பர் மாதத்தில் ஆறு தினங்கள் தொடர்ந்து கொண்டாடப்படும்

celebrated for six consecutive days in the month of November in all Subramania temples in South India, and in this festival the members of the Sengundar Community take a very active part. In fact, in many of the big temples of South India this festival is celebrated by members of this Community alone.

When the Chola Empire broke up, the Great Kaikkola Army had to be disbanded, and its members had, therefore, to settle down to some peaceful occupation or trade. Thus, the disbanded Warrior Battalions, accustomed to live and fight in cordial comradeship, settled down in large groups in the various villages of the Chola Kingdom, and took to weaving—an Industry in which such group comradeship could be utilised to the utmost advantage.

**A Democratic System of Clan Government:** In the days of the Vijayanagaram Empire, to preserve the homogeneity of this warrior clan, an admirably efficient system of Clan Government, based on the representative principle, was evolved, and the territory occupied by the entire clan was divided into 72 districts (Kilai nadugal கிளை நாடுகள் each comprising of a number of villages occupied by the members of this community alone. These 72 districts were grouped under four Major Districts (Thisai nadugal திசை நாடுகள்) in the midst of which, almost occupying a central position, lay the Capital or the 'Mahanadu' (மகாநாடு) at Conjeevaram. The 'Mahanadu' was the appellate authority, and had the privilege of presiding at all communal gatherings which were being summoned from time to time to settle disputes among the different villages, and to formulate the communal law. Such gatherings consisted of elected representatives of all the 72 districts. Each of the 4 major districts and the 72 minor districts also had the right to assemble representative communal gatherings for their respective areas to award decisions on local affairs. The unit of this system was the village, and each village was presided over by an elected headman. In short, the whole system was a regular hierarchy of representative ... This is the only community

அனுஷ்டிக்கப்படுகிறது. இந்தத் திருவிழாவில் செங்குந்த சமூகத்தினர் மிகவும் முதன்மையாக நிற்கின்றார்கள். உண்மையைக் கூறின், தென்னிந்தியாவிலுள்ள பெரிய ஆலயங்கள் பலவற்றில் இச் சமூகத்தினராலேயே இத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

சோழ சாம்ராஜ்யம் அழிந்தபொழுது கைக்கோளப் பெரும்படை கலைய நேர்ந்தது. ஆகையால் அப் படைவீரர்கள் ஏதாவதொரு நிம்மதியான தொழிலிலாவது வியாபாரத்திலாவது நிலைக்க வேண்டியதாயிற்று. இவ்விதமாக, ஒற்றுமையோடும் அன்போடும் வாழ்ந்தும் போர் செய்தும் பழகிய வீரர்கள் தங்கள் படை கலைந்தபோது சோழவரசாங்கத்திலுள்ள பல கிராமங்களிலும் கூட்டங்களாகத் தங்கி, அத்தகைய கூட்டங்களினால் உண்டாகும் நட்புரிமையினால் நன்கு நடைபெறக் கூடிய நெசவை மேற்கொண்டனர்.

ஜாதிக் குடியாட்சி முறை: விஜயநகர சாம்ராஜ்யத்தின் காலத்தில் இந்த வீரர் கூட்டத்தின் ஒற்றுமை கெடாதவாறு பிரதிநிதித்துவ தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதொரு சிறந்த சமூக ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் குடியேறிய பிரதேசம் 72 கிளை நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கிளை நாட்டிலும் இவர்கள் வாழ்ந்து வந்த சில கிராமங்கள் அடங்கும். 72 பிரிவுகளும் நான்கு திசை நாடுகளாகப் பகுக்கப்பட்டன. அவற்றிற்கிடையே ஏறக்குறைய மத்தியஸ்தானத்தில் தலைநகர் அல்லது மகாநாடு காஞ்சிபுரமாக ஏற்படுத்தப் பட்டது. பல கிராமங்களிலு மேற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும், சமூகச் சட்டங்களை உண்டாக்குவதற்கும் காலாகாலங்களில் கூட்டப்படும் எல்லாச் சமூகக் கூட்டங்களிலும் தலைமை வகிக்கும் பெருமை பெற்றிருந்ததோடு, எவ் விவகாரத்திலும் முடிவான அபிப்பிராயங் கூறும் அதிகாரத்தையும் 'மகாநாடு' உடையதா யிருந்தது. அத்தகைய கூட்டங்கள் 72 பிரிவுகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அடங்கியனவாம். 4 பெரும் பிரிவுகளிலும், 72 சிறு பிரிவுகளிலும் ஒவ் வொன்றிற்கும் தத்தமக்குரிய இடங்களில் ஏற்படும் விவகாரங்களில் தீர்ப்பளிக்கும் பொருட்டுப் பிரதிநிதிக் கூட்டங்கள் கூடும் சுதந்தரமும் உண்டு. இச் சமூக ஆட்சியின் அங்கங்கள் கிராமங்களாகும். ஒவ்வொரு கிராமத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கிராமப் பெரியதனக்காரர் தலைமை வகிப்பார். சுருக்கமாகக் கூறின், இந்த ஏற்பாடு முழுதும் பிரதிநிதிக் கூட்டங்கள் படிப்படியாக அமைந்த ஒரு பெருங் குடியரசின் தன்மையதாகும். கடந்த ஐந்தாறு நூற்றாண்டுகளாக மிகவும் ஒழுங்கும் சிறப்பு மமைந்த சுதந்தரச் சபைகளைக் கொண்டு அவற்றிற் பழக்கப்பட்ட சமூகம் தென்னிந்தியாவில் [illegible]



in South India which has been familar with democratic institutions of a highly organised and efficient type for the last five or six centuries. Relics of this system are even now existing in Sengundar villages, though the modern wave of nationalism is sweeping them to the background.

**Occupation:** Next to agriculture, weaving has been the most important industry in this Presidency, and the members of this community having adopted, prospered very well in it. Their skill and industry made the fabrics manufactured by them world-famous, and they were among the several attractions that had drawn the early European traders to the East. In fact, the expert skill of several of these weavers was so much in demand at the factory towns set up by the English and the French East India Companies on the Coromandel coast, that a large number of them were encouraged to colonise towns like Madras, Cuddalore and Pondicherry. The early prosperity of these towns and the companies owning them was in a large measure due to the industry, skill and good faith of these colonists of the Sengunda Community and their descendants. Quite in contrast with this past glory and prosperity, its present condition, both economic and political, is most disheartening, if not deplorable. The competition of Manchester for the past seven decades, and that of Japan since recently, have almost killed its handloom industry and the trades connected with it and brought abject poverty on hundreds of thousands of the community. The Reforms of 1919 have placed all available political power and influence in the hands of the landowning and mercantile communities, and have only tended to perpetuate the inequalities already existing between community and community in this caste-ridden land. In the present state of affairs artisan communties like the Sengunthars cannot aspire to have any representation either in the Imperial Legislative Assembly, the Provincial Legislative Council, or the local self-governing institutions. In consequence of this unequal distribution of power and influence, the interests of this

ஆட்சி முறையின் அம்சங்கள் தற்காலத்திய தேசிய அலையினால் புறம்பே தள்ளப்படுகின்றன வாயினும், அவைகள் செங்குந்தர் கிராமங்களில் இன்னும் வழக்கத்திலேயே யிருக்கின்றன.

தொழில்: விவசாயத்துக் கடுத்தபடி இந்த இராஜதானியில் நெசவே மிகவும்முக்கியமான தொழிலாக இருந்திருக்கிறது. இச் சமூகத்தினர் அதனை மேற்கொண்டதால் அதில் நல்ல வளன் எய்தினர். அவர்களது திறனும் உழைப்பும் அவர்கள் நெய்த துணிகளை உலகப் பிரசித்த மாக்கியதோடு ஐரோப்பிய வர்த்தகர்கள் கீழ் நாட்டுக்கு வருவதற்கு முக்கியமான காரணங்களுட் சிலவாயு மிருந்தன. சோழ மண்டலக் கரையில் ஆங்கில பிரெஞ்சு ஈஸ்டு இந்தியா கம்பெனியாரால் ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சாலைக ளமைந்த நகரங்களில் இந் நெசவுக்காரர் மிகப் பலரது பெருஞ் சிறப்பு வாய்ந்த திறமை மிகுதியும் அவசியமா யிருந்ததால், சென்னை, கூடலூர், புதுச்சேரி முதலிய பட்டணங்களில் குடியேறுமாறு இவர்களில் பெருந்தொகையினர் தூண்டப்பட்டனர். இந்தப் பட்டணங்களும் இவைகளைச் சொந்தமாகக் கொண்ட வியாபார ஸ்தாபனங்களும் துரிதமாக வளம் பெற்றமைக்குக் குடியேறின செங்குந்த சமூகத்தினரும் அவர்களது வழி வந்தவரும் கொண்டிருந்த கைத்தொழில், திறமை, நன்னம்பிக்கை ஆகியவையே பெருங் காரணமெனக் கூறலாம்.

இனி, இதன் பழம் புகழுக்கும் வளமைக்கும் நேர்முரணாக, அரசாங்க, பொருளாதார துறைகளில் இதன் தற்கால நிலை பரிதபிக்கத் தக்கதாயிராவிடினும் மிகவும் தாழ்ந்ததாகவே யிருக்கிறது. சென்ற 50 அல்லது 60 வருஷங்களாக இருந்து வரும் மான்செஸ்டர் நகரத்துப் போட்டியும், மிகச் சொற்ப காலத்துக்கு முன் ஏற்பட்ட ஜப்பான் தேசப் போட்டியும் அநேகமாக இதன் கைத்தறித் தொழிலையும் அதனோடு சம்பந்தப்பட்ட வியாபாரங்களையும் கொன்று இச் சமூகத்தினரில் நூறாயிரக் கணக்கானவரைக் கொடிய வறுமைக் காளாக்கின. 1919-ஆம் ஆண்டில் உண்டான சீர்திருத்தங்கள், அரசாங்க அதிகாரம் செல்வாக்கு முதலிய அனைத்தையும் நிலம் வைத்துள்ள சமூகங்களுக்கும் வியாபார சமூகங்களுக்குமே உரிமையாக்கின. ஜாதிக்கொடுமை நிறைந்த இந்நாட்டில் சமூகங்களிடையே முன்னமே யிருக்கும் ஏற்றத் தாழ்வுகளை அதிகப்படுத்தி நிலை நிறுத்தவே அவை உடன்பட்டன. விஷயம் இவ்வாறு இருக்கிறபடியால் இது போன்ற கைத்தொழிற் சமூகங்கள் இந்திய சட்டசபையிலேனும், மாகாண சட்டசபையிலேனும், உள்ளூர்ச் சுய அரசாட்சிச் சபைகளிலேனும் பிரதிநிதித்துவம் பெற அவாவுவ தியலாது. அதிகாரத்திலும் செல்வாக்கிலும் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வின் பயனாக இந்த ஏழ்மையான, பிரதிநிதித்துவமற்ற சமூகத்துக்குப் பொருளாதார அந்தஸ்து எவ்வளவு விருத்

poor and unrepresented community have become neglected, however valuable their economic importance may be.

To give only one illustration, while several villages peopled exclusively by members of this community, have no Taluk Board Schools to boast of, hamlets where only a few families of the rich and influential communities live, have free schools in their midst maintained out of the public funds. Even in selecting the sites of these schools, the convenience of the rich and the influential few only are attended to, much to the inconvenience of the poor and uninfluential many.

To add to its miserable plight the Congress Movement has totally crippled the industries and trades traditionally pursued by members of this community. The boycott of foreign piece goods and foreign yarn, and the spread of handspinning and khaddar weaving even among communities which had never taken to such industries till now, have heaped considerable misery on the members of this community, who have so deeply fallen into traditional and agelong ruts as to find it almost impossible to step out of them suddenly and take to newer walks and channels and brave competition with timely resourcefulness and flexible adaptability.

Madras, 7-11-31. M. Shanmukhasundara Mudaliar.

போதிலும் இதன் நலம் அசட்டை செய்யப்படுகிறது.

ஒரே ஒரு உதாரணமாக, இச் சமூகத்தினர் மாத்திரமே வசிக்கும் பெரிய கிராமங்களில் தாலுக்கா போர்டு பாடசாலைகளில்லாதிருக்கையில் செல்வமும் செல்வாக்குமுள்ள சமூகத்தினரில் சொற்பக் குடிகள் வசிக்கும் குக்கிராமங்களிலும் பொது நிதியின் பண உதவியைக் கொண்டு நடத்தப்படும் இலவசப் பாடசாலைகளிருக்கின்றன. இந்தப் பாடசாலைகளுக்கு இடங்கள் ஏற்படுத்துவதிலும் செல்வாக்கற்ற ஏழைக் குடிகளாகிய அநேகர் அசௌகரிய முறுமாறு செல்வமும் செல்வாக்கும் பெற்ற சொற்பத் தொகையினரது சௌகரியமே கவனிக்கப்படுகிறது.

போதாக் குறையாக, காங்கிரஸ் இயக்கம் இச் சமூகத்தினர் வழக்கமாகச் செய்துவந்த தொழில்களையும் வியாபாரங்களையும் அடியோடு பயப்படுத்தி, இதன் பரிகாரமான நிலையைப் பின்னுங் கேவலமாக்கி யுள்ளது. விதேசித் துணி, விதேசி நூல் இவற்றின் பகிஷ்காரமும், நூல் நூற்றலும் கதர் நெய்தலும் இதுவரை எக்காலத்தும் அத் தொழில்களைச் செய்தறியாத சமூகங்களிடையே பரவி வருவதும், தொன்றுதொட்டு வழக்கமாக வரும் பாதைகளில் ஆழ்ந்திருப்பதால் திடீரென்று அவற்றை விட்டு விலகிப் புதிய முறைகளையும் வழக்கங்களையும் கைக்கொண்டு காலத்துக் கேற்றபடி வழக்கங்களை மாற்றி யமைத்துக்கொள்ளும் சாமர்த்தியத்தோடு தைரியமாகப் போட்டியில் தலையிட இயலாது கஷ்டப்படும் இச் சமூகத்தினர் தலையில் கஷ்டங்களைக் குவித்துவிட்டன.

சென்னை : 7—11—31 ம. சண்முகசுந்தர முதலியார்.

## இதோர் வாய்த்தது ஏற்றதோர் சமயம்!

'எனது பாட்டனர் உலகப் பிரசித்தி பெற்ற பிரபுவா யிருந்தார்' என்று கூறிக்கொள்வதால் ஒரு பிச்சைக்காரனுக்கு மதிப்பு வந்துவிடாது. 'எனது பாட்டனருக்குப் பாட்டனர் அறிவே யுருவான ஆசாரியரா யிருந்தார்' என்று பாராட்டிக்கொள்வதால் ஒரு நிரக்ஷரகுக்ஷிக்குப் பெருமை கிடைத்துவிடாது. நமக்கு மதிப்பு வேண்டுமானால், நாம் சீர்பெற வேண்டுமானால், நம்மளவில் நாம் அதற்குரியவராகத் திகழ்தல் வேண்டும். பழம் புகழ் பேசி அதிலேயே பித்தேறி மயங்குவதெல்லாம் வீண் காலம் போக்குவதே. வீர சிகாமணிகள் வழி வந்தவர்களே! ஞான பிம்பங்களின் வழித் தோன்றல்களே! நமக்குச் சிறப்பு வேண்டுமாயின், ஒப்பற்ற வீரர்களும் அறிஞர்களும் அவதரித்த நமது குலத்திற்குரிய புகழை நாமும் சூட வேண்டுமாயின், அதற்கேற்ப உழைப்போமாக! பிளவுகளை விலக்கித் தள்ளுவோமாக! சகோதர வாஞ்சை யெனும் பட்டுக் கயிற்றினால் ஒருங்கே பிணைக்கப்படுவோமாக! நமது முன்னோரையும் நங்குலத் தீபங்களையும் பின்பற்றி முன்னேற்றக் கொடி ஏந்திப் பீடு நடை நடப்போமாக!.

சரியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது. மூன்றாவது மகாநாடும் நெருங்கிவிட்டது. சந்தர்ப்பத்தை வீணாக்காது அனைவரும் ஒன்று சேர்ந்து அரிய வழிகளை ஆயுதம் வாரீர்! நேரிய செயல்களை நாட்டுதும் வாரீர்!






## மாதரும் மனை வாழ்வும்

(மகாத்மா காந்தி)

நான் இங்கு எதற்காக வந்திருக்கிறேன்? எனது லக்ஷியங்களும் கொள்கைகளும் எவை? எத்தகைய இந்தியாவை நான் காண விரும்புகின்றேன்? நான் காணும் உண்மையை அப்படியே வெளியிடவே நான் இங்கு வந்துள்ளேன். ஏனெனில், சத்தியமே வாழ்க்கையின் திறவுகோல் என்பதே எனது கொள்கை. மற்றவையெல்லாம் அதனைச் சேர்ந்தவையே. சத்தியமே பிரதானமானது; அதுவே மூதலானது; அதுவே இறுதியானது. அதுவே என்றும் நிலைபெற்றிருப்பது.

எந்த விஷயத்திலும் சத்தியத்தை முதலில் நிறுத்தலாம். என்னைப் பொறுத்த மட்டில் நான் எப்பொழுதும் அதே மாதிரி செய்ய முயன்றிருக்கிறேன். எனது ராஜீய வாழ்க்கையில் பொய்க்கும், மோசடிகளுக்கும் இடமே கிடையாது. வஞ்சித்து எந்தக் காரியத்தையும் நான் ஜெயிக்க விரும்பவில்லை.

என்னைப்பற்றிப் பலர் பலவாறு வர்ணிப்பதை நான் பார்க்கிறேன். சிலர் என்னை "ரிஷி" என்கிறார்கள். சிலர் "விஷமக்காரன்" என்கிறார்கள். நான் ரிஷியு மல்ல, விஷமக்காரனு மல்ல. கடவுளுக்குப் பயந்து நடப்பவன் என்று தான் என்னை நான் சொல்ல முடியும்.

எனக்கெனத் தனியான தத்துவமும், தனிப்பட்ட வேலையும் உண்டு. தினந்தோறும் கொஞ்ச நேரமாவது நான் நூல் நூற்கிறேன். நூற்கும்போது நான் என் மனதைச் சிந்தையி லாழ்த்துகிறேன். எதை யெதையோ பற்றி யெல்லாம் நினைக்கிறேன். என்னுடைய கைராட்டினத்தை நன்கு அறியுங்கள். என்னால் உபதேசிக்க முடியாதவற்றை யெல்லாம் அது சொல்லும். பொறுமை, சாந்தம், தொழில் பழக்கம், எளிய வாழ்க்கை முதலிய நற்குணங்களை ராட்டினம் போதிக்கின்றது. இந்தச் சர்க்கா இந்தியப் பட்டினியின் சின்னமாகும்.

எனது அரைத்துணியைப்பற்றிப் பத்திரிகைகளெல்லாம் கேலி செய்கின்றன. "என் அந்த மாதிரி கட்டிக்கொண் டிருக்கிறீர்கள்?" என்று பலர் என்னைக் கேட்கிறார்கள். சிலருக்கு அது பிடிக்கவே யில்லை. சிலர் அதை "அநாகரிகம்" என்கின்றனர். வெள்ளைக்காரர்கள் இந்தியாவுக்கு வருகிறார்களே, அந்தத் தேசச் சீதோஷ்ணத்துக்குத் தகுந்த உடையை அவர்கள் போட்டுக்கொள்ளுகிறார்களா? சீமைக் குளிருக்கு நிஜார், பூட்ஸ் போடுகிறவர்கள் இந்தியாவின் தலை வெடிக்கும் வெப்பத்துக்கும் அதையே தானே போடுகிறார்கள். ஆகவே, நான் என் ஊர் உடையை அணிவதில் நீங்கள் ஆச்சரியப்படுவானேன்?

இந்தியாவிலுள்ள ஏழைகள் இதைத் தவிர வேறு என்ன மாதிரி துணி கட்டிக்கொண் டிருக்கிறார்கள்? அவர்களுடைய பிரதிநிதி யானதால் நானும் அந்த ஆடையே அணிந்துள்ளேன். நான் ஒரு காரியத்துக்காக அனுப்பப்பட் டிருக்கிறேன். யார் என்னை அனுப்பி யிருக்கிறார்களோ அவர்களுக்கு நான் துரோகம் எண்ண முடியாது.

ஆமாம், பெண்களுக்குப் பூரண சமத்துவம் அளிக்கப்பட வேண்டு மென்பதே எனது கோரிக்கை. நான் காணவிருக்கும் இந்தியாவில் அவர்களுக்கு இந்த ஸ்வதந்திரம் கட்டாயமாய்க் கிடைக்கும். என்னுடைய பிரம்மசரிய விரதம் காரணமாக என்னுடன் பல ஸ்திரீகள் வேலை செய்யும்படியான பாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன். ஸ்திரீகள்மீது எனக்கென்னவோ இயற்கையாகவே ஒரு அன்பும் காருண்யமும், அநுதாபமும் இருந்து வருகின்றது. என் தேசத்தில் ஸ்திரீகள் மிகவும் இழிவான நிலையிலிருந்து வருகிறார்கள். இது பெருத்த அநீதிதான். பல நூற்றாண்டுகளாக ஸ்திரீகள் ஆண்களுடன் சமத்துவமாக வேலை செய்து வந்திருக்கின்றார்கள். பெண்கள் சமையல் செய்ய மறுத்துவிட்டால் ஆண்களின் கதி என்ன? பட்டினி கிடக்க வேண்டியதே.

எனக்கு என்ன வேண்டும் தெரியுமா? என்ன நடந்தால் என் மனம் சந்தோஷத்துடன் துள்ளிக் குதிக்கும் தெரியுமா? எல்லா ஆபீஸ்களிலும், உத்தியோகங்களிலும் ஸ்திரீகளுக்கும் இடம் கிடைக்க

வேண்டும். இல்லாவிட்டால் உண்மையான சமத்துவமே கிடையாது. ஆனால் ஸ்திரீகள் தங்களது பாரம்பர்யப் பெருமையாகிய "இல்லரசி" என்ற பெயரைச் சிறிதும் விட்டுவிடக் கூடாது. "பாழே மடக்கொடி இல்லா மனை" என்பதையும் நாமறிய வேண்டும்.

ஸ்திரீகளுக்கு ஆபீஸ்களில் இடம் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் சொல்கையில் அவர்கள் வீட்டு வேலைகளையே கவனிக்க வேண்டியதில்லை என்று சொல்லவில்லை. சமத்துவம் வழங்கப்பட வேண்டு மென்பதற்காகவே நான் அங்ஙனம் கூறினேன். அதன் தத்துவத்தையே யாவரும் கொள்ள வேண்டும். சாதாரணமாக ஆணே சம்பாதிப்பவனா யிருக்க வேண்டும். வீட்டைக் காத்து, குழந்தையை வளர்க்க வேண்டியவள் ஸ்திரீயே.

குழந்தைகளைச் சற்குண சம்பன்னர்களாக வளர்க்கும் பொறுப்பு பெண்ணினுடையதே. சமத்துவம் வேண்டியதுதான். ஆனால் ஸ்திரீகள் வீட்டையும், குழந்தைகளையும், தங்கள் கடமைகளையும் மறக்கக் கூடிய சமத்துவம் எனக்கு வேண்டாம்.

குடும்ப வாழ்க்கையின் மகிமை, அதன் ஒளி, சிறிதும் குறையக் கூடாது. அதனிடமுள்ள புனிதத் தன்மை அழிதல் கூடாது. தேச மக்களின் க்ஷேமம் அதனையே பொறுத்திருக்கின்றது. குடும்ப பாரத்தை வஹித்து நடத்துவதென்பது இந்தியாவில் மதக் கடமையாக இருந்து வருகின்றது. அதனை அழிக்க எவராலும் முடியாது. வீட்டுக்குப் பாதுகாப் பளிக்காத எந்த அரசாங்கமும் இந்தியாவில் உயிர் பெற்றிருக்க முடியாது. இந்தியருக்குக் குடும்பம் பொக்கிஷத்தையும் விட மேலானது. என்னைப் போன்ற ஒரு சிலர் வேண்டுமானால் ஒரு பெரிய காரியத்துக்காக, ஒரு மகத்தான கொள்கைக்காக வீடு, வாசல் எல்லாவற்றையும் விட்டொழித்து, குடும்ப வாழ்க்கையின் இன்பத்தையும் துறந்து, தியாகத்தையும், பிரம்மசர்யத்தையும் கட்டி யணைத்துக்கொண்டு வேலை செய்து வரலாம், ஆயினும் சாதாரண ஜனங்களுக்கு இல் வாழ்க்கையைக் காப்பது அவசியமானது.

## குழந்தைகளும் பெற்றோரும்

சிமையிலே உத்தமமான இலக்ஷியங்க ளமைந்த தொரு கல்லூரியை நடத்தி ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் நேர்மையான பயிற்சி யளித்துவரும் மாண்டிஸோரி என்னும் அம்மையாரைச் சந்தித்த காலை தெய்வீகமான நிர்மல உருவங்களோடு திகழ்ந்த குழந்தைகள் கூட்டத்தில் மகாத்மா கூறியவையும் இங்குக் கவனிக்கத்தக்கன.

"மாது மாண்டிஸோரியே! தாங்கள் சொன்னது வாஸ்தவமே. எனது உடலின் ஒவ்வொரு நாடியிலும், நரம்பிலும் நான் அன்பையே பிணைக்க முயன்று வருகிறேன். ஆண்டவனை நேருக்கு நேர் காண வேண்டுமென நான் ஆத்திரப்படுகின்றேன். ஆண்டவன் சத்திய ரூபமாகவே விளங்குகிறார் என்பது எனது உள்ளக்கிடக்கை. ஆகவேதான் சத்தியத்தை நான் கண்டறிய வேண்டுமானால், என் உயிர் போவதாயினும் அன்பு நெறியையே கடைப்பிடிக்க வேண்டுமென நான் எனது இளம் பிராயத்திலேயே ஓர்ந்தேன். ஏதோ பகவான் எனக்குக் குழந்தைகளையும் கொடுத்து ஆசீர்வதித்தார். அன்பு நெறியைக் குழந்தைகள் மூலமாகச் சுலபமாக அறிந்து, உணரலாமென்பதையும் நான் கண்டுகொண்டேன்.

"குழந்தைகளைக் கெடுத்துக் குட்டிச்சுவ ராக்குபவர் பெற்றோர்கள் தாம். விஷமத்தனத்தோடு குழந்தைகள் பிறப்பதில்லை. இது எனது நம்பிக்கை. குழந்தைகள் பிறப்பதற்கு முன்னும், பிறந்த பின்னரும், வளர்ந்து வரும் பொழுதும், பெற்றோர்கள் ஒழுங்காக நடந்துகொண்டார்களானால், அதாவது ஒழுக்கமான வாழ்க்கையை நடத்துவார்களானால், குழந்தை தனது ஞானபூர்வமாகவே சத்திய வழியில் இறங்கும்; அன்பைப் பற்றிக்கொள்ளும். எனது வாழ்க்கையின் ஆரம்பத்தில் இதை நான் உணர்ந்ததும், என் வாழ்க்கையே மாறிவிட்டது.

"எனது வாழ்க்கை ஒரு பெரும் புயல்காற்றுக் கொப்பாகும். அது எவ்வளவோ மாறுதல்களைக் கண்டுவிட்டது. ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். எவ்வளவு தூரத்துக்கு நான் அன்பை எனது வாழ்க்கையுடன் பிணைத்து, மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் அன்பையே கொண்டாடி வருகிறேனோ அவ்வளவு தூரத்துக்கு நான் மனச் சாந்தியை அனுபவித் திருக்கிறேன். என் சாந்தத்தைக் கண்டு பலர் பொறாமைப் படுகின்றனர். அந்த விலையில்லா மாணிக்கம் எனக்கு எப்படிக் கிடைத்தது என்றும் கேட்கிறார்கள். அன்பினால் தான் சாந்தம் ஏற்பட்டதென்றே கூறுவேன்.

"'குழந்தைகள்! அவற்றிற்கு என்ன தெரியும்!' என்று நாம் அலக்ஷியமாகச் சொல்வதைப் போன்ற பைத்தியக்காரத்தனம் எதுவுமில்லை. அனுபவத்திலிருந்து சொல்கிறேன்! ஆயிரக் கணக்கான குழந்தைகளுடன் பழகிவிட்டுச் சொல்கிறேன்! நம் வாழ்க்கையின் உயர்ந்த பாடங்களை யெல்லாம் நாம் குழந்தைகளிடமிருந்தே கற்றுக்கொள்கிறோம். 'குழந்தைகளின் வாயினின்றே விவேகம் பிறக்கின்றது' என்றார் இயேசு.

"உலகில் சாந்தத்தைப் பரப்புவதற்கு, யுத்த மனப்பான்மையை எதிர்த்து நிற்பதற்கு, நாம் குழந்தைகளையே சரியாகப் பழக்க வேண்டுமென நீங்கள் கூறியது நிரம்பவும் சரி. குழந்தைகள் எப்படிப் பிறக்கின்றனவோ அப்படியே பெரியவர்களாக வளருமானால் உலகில் சண்டை ஏது, சச்சரவேது? அப்பொழுது உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும், அன்பும் சாந்தமுமே நிரம்பிக் கிடக்கும்.

"உங்கள் குழந்தைகளையும், அவர்களுக்கு [illegible]



# செங்குந்த யாத்திரைவாசி

## தாந்தோன்றிப் படலம்

**வீரவா:** சித்திரகுப்த! ஏன், இன்னுமொரு நாட்டாண்மைக்காரரைப் பார்க்கலாமே?

**சித்திர:** செங்குந்த முதல்வ! கருணை கூர்ந்து அதோ பார்ப்பீராக.

அச்சமயம் சந்நிதியி லிருந்த அனைவரும் கொலு மண்டபத்தின் வாயிற் பக்கம் நோக்கினார்கள். யானும் நோக்கினேன். ஒரு கழுதையின் மேல் உட்கார்ந்து கண்ணீரும் கம்பலையுமா யிருந்த ஒரு கருத்த உருவம் தோன்றிற்று. அது அணிந்திருந்த ஆடை மிகவும் வேடிக்கையா யிருந்தது. முதலில் யான் அதை ஒரு கோமாளி வேடமென்றே எண்ணினேன். அதைச் சூழ்ந்து 8 தூதர்கள் சாட்டையேந்திய கையினராய், இமை கொட்டாத சிவந்த கண்ணினராய்க் கோபக்குறி தோன்ற நின்றுகொண்டிருந்தார்கள். அவ் வுருவத்தின் ஆடை முழுதும் பல நிறங்கள் பொருந்திய காகிதத்தாலும், ஆபரணங்கள் அனைத்தும் பனை ஓலையினாலும், மிகுந்த வேலைப்பாடுகள் விளங்குமாறு செய்யப்பட் டிருந்தன. தலைக்குல்லாய் பன்னாடையினால் அமைக்கப்பட்டுச் சுமார் $1\frac{1}{2}$ முழம் உயரமுள்ளதாய் அடியில் அகன்றும் மேலே போகப்போகக் குவிந்தும், முனை கூராகவும் இருந்தது. இத்தகைய காட்சியினைக் கண்டு அனைவரும் கொல்லென்று நகைத்தார்கள்.

**வீரவா:** ஓ! இவரும் ஒரு நாட்டாண்மைக் காரர்தானா? சரி இனி ஆகட்டும்.

**சித்திர:** ஸ்வாமிகளே! இதோ தோன்றுகிறவர் ஐயனூர் நாட்டாண்மைக்காரர். இவருடைய பெயர் தாந்தோன்றி முதலியார். இவர் பரம்பரை நாட்டாண்மைக்காரருமல்ல; செல்வந்தருமல்ல. அன்றாடம் நெசவுத் தொழில் செய்து ஜீவித்து வந்தவர். ஐயனூர் பரம்பரை நாட்டாண்மைக்காரர் குடும்பம் சந்ததியற்றுப் போயிற்று. கடைசி பட்டக்காரர் காலஞ்சென்ற பிறகு ஊரார் ஒரு கூட்டம் சேர்ந்துத் தங்களுக்குள் தகுந்த நற்குண நற்செய்கைகள் வாய்ந்த ஒரு பெரியாரை நாட்டாண்மக்காரராக நியமித்து அவருக்கு ஊரில் நடைபெறும் கல்யாணம் முதலிய விசேஷங்களில் வழக்கமாகக் கொடுக்கப்படும் தாம்பூலத்தோடு மரியாதைக்காக மூன்று தேங்காய்களும் கொடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். இத் தீர்மானம் யாதொரு ஆக்ஷேபனையுமின்றி ஏகமனதாக நிறைவேறிற்று. நடை முறையிலும் அவ்வாறே நடந்து வந்தது. சில மாதங்கள் பொறுத்து இத் தாந்தோன்றி முதலியார் 'இதென்ன நாட்டாண்மைக்காரருக்கு மாத்திரம் மூன்று தேங்காய்கள்! நாமெல்லாம் முட்டாள்களா இதைப் பார்த்துக் கொண்டிருக்க!' என்று அங்குமிங்கும் புகார் செய்ய ஆரம்பித்தார். இது ஊர் முழுதும் பரவிற்று. இவருடைய இயற்கைக் குணத்தை யறிந்த முக்கியஸ்தர்கள் இதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. நாட்டாண்மைக்காரரும் இதை அவ்வளவாக எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் அவருக்குக் கொஞ்சம் மனவருத்தம் மாத்திரம் உண்டு. இதனால் தாந்தோன்றி முதலியார், தாம் பேசுவது நியாயமானதென்றும், அதனால்தான் ஊர் முழுதும் தமக்குப் பதில் கூறத் தைரியமின்றி இருக்கிறதென்றும் எண்ணிக்கொண்டு இவ் விஷயத்தைப்பற்றி ஆங்காங்கு உரத்த குரலில் பேசுவதற்கு ஆரம்பித்தார். உண்மையிலேயே பெருந்தன்மை வாய்ந்த நாட்டாண்மைக்காரர் மனவருத்த முற்று, ஒரு நாள் ஊரைச் சேர்த்து விஷயத்தைச் சொல்லி, 'இத்தகைய ஊரில் எனக்கு நாட்டாண்மைப் பட்டம் பொருந்தாது' என்று கூறி அப் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

ஊரார் தாந்தோன்றி முதலியாரை யழைத்து விசாரித்த போது, அவர் 'நாட்டாண்மைக்காரருக்கு இத்தகைய சிறப்பு மரியாதை கூடவே கூடாது. தாம்பூலம் கொடுப்பதே போதுமானது' என்று வாதித்தார். இதைக் கேட்ட ஊரார் தாந்தோன்றியாரைப் பார்த்து 'அவ்வாறாயின் நீரே அந் நாட்டாண்மைப் பதவியை ஏற்றுக்கொண்டு அதற்குரிய மரியாதையையும் பெற்றுக்கொள்ளும்' என்று சொல்லி நாட்டாண்மைத் தாம்பூலத்தை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டார்கள். உடனே தாந்தோன்றி அண்ணல் மிகுந்த முக

---

(318-வது பக்கத் தொடர்ச்சி.)

அளிக்கும் பயிற்சியையும் பார்க்கையில் இந்தியாவிலுள்ள திக்கற்றுத் தவிக்கும் 'பாப்பர்' குழந்தைகளின்மீது என் மனம் பாய்கின்றது. நீங்கள் அளிக்கும் கல்வியைப் போன்று அவர்களுக்கு என்னால் எப்பொழுது அளிக்க முடியும்? குழந்தைகளின் தன்மையையும், அவைகளின் கற்பனா சக்தியையும் அறிந்து அவற்றிற்குக் கல்வி போதிக்க வல்ல ஆசிரியர்கள் இந்தியாவில் நிரம்ப இல்லையே; என் செய்வது?"

(க. சங்கு.)

மலர்ச்சியோடு அதை எடுத்துக்கொண்டு பட்டக்காரனார். கூட்டம் கலைந்துவிட்டது. பின்னர் ஊரில் ஏற்பட்ட விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுத் தாந்தோன்றி முதலியாரிடம் வழக்கம்போல் வந்து சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இவரோ நன்மை தீமைகளைப் பிரித்தறியும் பகுத்தறி வில்லாதவர். விஷயங்களைக் கூர்ந்துணரும் நுண்ணறிவும், சபையிலிருந்து—ஏன் நாலு பேர் முன்னிலையி லிருந்துங்கூட—பேசும் தைரியமும், திறமையும் ஒரு சிறிதும் இல்லாதவர். பொறாமையும், கோளும், கோழைத் தன்மையும், புறங் கூறலும் நிரம்பப் பெற்றவர். விசேஷ காலங்களில் மாத்திரம் தாமே கூடாதென்று வாதித்த தேங்காய் மரியாதையைப் பெற்றுக் கொள்ள முன்னே போய் உட்காருவார். அதிகாரியாகிய இவரிடத்தில் கொண்டு வரும் வழக்கையும் காதில் போட்டுக்கொண்டதுமில்லை, பைசல் செய்ததுமில்லை. வழக்குக் கொண்டு வருவோரது கண்ணில் அகப்படாமல் எப்படியாவது தப்பித்துக் கொள்வார். சமயத்தில் தலை மறைத்துக்கொள்வதில் கைதேர்ந்தவ ராய்விட்டார். தப்பித் தவறி ஒரு வேளை அவர்கள் கண்ணில் அகப்பட்டாலும் காதும் கண்ணும் இல்லாதவரைப் போல் வெகு வேகமாய்ச் சென்று எங்கேயாவது மறைந்து கொள்வார். வந்தவர்கள் தேடி அலைந்து திரும்பிப் போன பிறகு திரும்பி வந்து சேர்வார். இவ்வளவு தைரியமும் சாமர்த்தியமும் பொருந்திய தலைவரையுடைய ஊர் எக்கதி யாகுமென்பது சொல்லாமலே விளங்கும். அது போக்கிரிகளுக்கும் அயோக்கியர்களுக்கும் ஒரு நல்ல காலமா யிருந்தது. இதனால் 'அச்சமே கீழ்மக்களது ஆசாரம்' என்றபடி பயத்தை முன்னிட்டாவது யோக்கியர்களாக இருந்தவர்களும் அச்சத்திற்கு இடமின்மையால் கெட்டுப்போய்விட்டார்கள். கேட்பார் ஒருவருமில்லை. போக்கிரிகள் இட்டதே சட்ட மாய்விட்டது. பொது விவகாரங்களைப் பற்றியும் காதில் போட்டுக்கொள்ளாது மறைந்துகொள்ளும் இத் தாந்தோன்றியார் எந்த வீட்டிலாவது விசேஷங்கள் நடந்தால் மாத்திரம்—பிறர் அடைய மனம் பொறுதவராயினும்—எங்கிருந்தாலும் தேங்காய் மரியாதைக்காகத் தயாராய் முன்னே வந்து உட்கார்ந்துகொள்வார்.

நாரதர்: முருகவேள் துணைவ! (சித்திர குப்தனைப் பார்த்துக் கையமர்த்திவிட்டு) தருமராஜன் கணக்காயனாகிய சித்திரகுப்த னென்னும் இந் நிபுணன் தஸ்தாவேஜுகளின் உதவி யின்றியே என்னவேனும் பிசகாது விஷயங்களை மிகக் கவனமாய்ச் சொல்லக்கூடியவன் என்பதில் யாதொரு ஐயமுமின்று. அவன் இப்போது சொல்லிக்கொண்டுவரும் விஷயங்கள் யாவும் இங்குக் கொண்டு வரப்பட்டுள்ள சுவடிகளில் காணக்கூடியவைகளே யாகும். ஆனால் விரிவிற்கஞ்சி மிகச் சுருக்கமாகத் தான் சொல்லிக்கொண்டு வருகிறான். அவன் கவனமின்றி விட்டுவிட்டதாக நினைத்துச் சொல்லவரவில்லை. நல்ல சமயத்தில் ஞாபக மூட்டவே முன் வந்தேன்.

சித்திர: முநீந்திரரே! தாங்கள் ஞாபகமூட்ட நினைத்தது கும்பிடு வழக்கைப்பற்றித் தானே. அதை யான் மறந்துவிடவில்லை. வந்துகொண்டிருக்கிறேன். தங்களைப் போன்ற மஹானுபாவர்களுடைய கருணை கடாக்ஷம் அடியேன்மீ திருக்கையில் எனக்கு அத்தகைய ஞாபகக் குறைவு நேராதென்பதே எனது துணிபு. ஆயினும் தக்க சமயத்தில் ஞாபக மூட்டியதைப்பற்றித் தங்களுக்கு என்றும் மறவாத நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பகலவன் பகையை வென்ற பரம புருஷ! ஐயனூர் என்பது ஒரு பெரிய நாட்டிற்குத் தலைநகரமாகும். இந் நாட்டிற்குக் கீழ்ப்படிந்த உள் நாடுகளும், கிராமங்களும் சில உண்டு. இவை யாவும் முன்னோர் கட்டுப்பாட்டின்படி தங்கள் மேல் நாடாகிய ஐயனூருக்கு அடங்கித் தகுந்த மரியாதையும் செய்து வந்தன. முநீந்திரர் கூறியபடி விரிவிற் கஞ்சியே அவரவர்கள் பிரபாவத்தில் இரண்டொன்றை மாதிரிக்குக் காட்டிக்கொண்டே போகிறேன். இவ்விதமாகப் பண்டைய மரியாதை தவறாது நடந்துவந்த கிராமங்களுள் ஒன்றாகிய நாதனூர் என்னும் கிராமத்திலிருந்து ஏதோ ஒரு வழக்கு ஐயனூர் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. ஐயனூராரைத் தங்களுக்கு மேலதிகாரிகளாகக் கருதிவந்த அக் கிராமத்தார் அளவிறந்த தடவை நடந்தார்கள். இத் தாந்தோன்றி யண்ணல் வீட்டிற்கு நடந்த நடைக்குக் கணக்கு வழக்கில்லை. பெரும்பாலும் இவர் அச்சமயங்களில் வீட்டி லிருப்பதில்லை. ஒரு சமயம் தப்பித் தவறி இருந்துவிட்டாலும் இதோ வருகிறேன் என்று சொல்லிக்கொண்டே பின்புறமாகப் போய்விடுவார். அவர்கள் வீட்டை விட்டுப் போகிற வரையில் மறைந்திருப்பார். வந்தவர்கள் ஒவ்வொரு தடவையும் ஐயனூரிலுள்ள மற்ற முக்கியஸ்தர்களையும் பார்க்காமலில்லை. அவர்கள் நாட்டாண்மைக்காரரில்லாமல் ஒரு விவகாரமும் நடைபெறாது என்று ஒரே மாதிரியான பதில் கூறுவார்கள்.

இவ்வாறே பல மாதங்கள் கழிந்தன. நியாயம் தேடும் பொருட்டுத் தங்கள் மேல் நாட்டாரை நாடி வந்தவர்கள் மனஞ் சலிப்புற்றுத் தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்று ஊர்க் கூட்டமொன்று கூட்டி நடந்த விஷயத்தைத் தெரிவித்து அன்று முதல் ஐயனூரைத் தமது மேல்நாடாக மதிக்கக் கூடாதென்றும், அவ்வூராருக்குத் தாம் மேல்நாடு என்ற முறையில் அதுவரையில் செய்து வந்த மரியாதை முதலியவற்றை இனிச் செய்யக் கூடாதென்றும் தீர்மானித்துக்கொண்டார்கள்.

இது நிகழ்ந்த சில மாதங்களுக்குள் ஐயனூரிலுள்ள ஒரு பிள்ளைக்கும் நாதனூரிலுள்ள ஒரு பெண்ணுக்கும் திருமணம் நடத்த ஏற்பாடாயிற்று. இத்தகைய சந்தர்ப்பங்களில் நடக்கும் பண்டைய வழக்கமொன் றுண்டு. அதென்னவெனில் கீழ் நாட்டார் அல்லது கிராமத்தார் மேல் நாட்டிலிருந்து பெண் கொண்டாலும் சரி, கொடுத்தாலும் சரி. இரு பக்கத்தாரும் சம்பந்தம் [illegible]



தில் மேல் நாட்டாரைக் கீழ் நாட்டார் அல்லது கிராமத்தார் முதலில் கும்பிடுதல் வேண்டும். அதன் பின்னரே மேல் நாட்டார் இவர்களைக் கும்பிடுவார்கள். சம அந்தஸ்துள்ள நாட்டாராயின் இரு பக்கத்தாரும் ஒரே சமயத்தில் முன்பின் வித்தியாசமின்றிக் கும்பிடுவார்கள். இந்தப் பண்டைய முறையை நாதனூராரும் இது வரையில் தவறாது அனுசரித்து வந்தார்கள். ஆனால் இந்தத் திருமணத்தின் போது நாதனூரார் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து ஐயனூராரோடு சம்பந்தம் கலக்கிற சமயத்தில் வழக்கப்படி முதலில் கும்பிடாமல் இருந்தார்கள். அதனால் மேல் நாட்டாராகிய ஐயனூராரும் கையெடுக்கவில்லை. இரண்டொரு நிமிஷங்களுக்குப் பிறகு இரு பக்கத்தாருக்கும் நடந்த வாக்குவாதம் கீழ் வருமாறு:—

ஐயனூர் ஆடியபாத முதலியார்: ஏனையா ஏகாம்பர முதலியாரே! ஏன் நிற்கிறீர்கள்? நீங்கள் தானே மேல் நாட்டாராகிய எங்களை முன்னே கும்பிடவேண்டும். நீர் கூடவா மறந்துவிட்டீர்? எத்தனையோ சம்பந்தம் நடத்தி யிருக்கிறீரே. நாங்கள் எதை மறந்தாலும் இதை மாத்திரம் மறக்க மாட்டோம்.

நாதனூர் ஏகாம்பர முதலியார்: மேல் நாடா! அது போய் எத்தனையோ காலமாயிற்றே.

ஐ. ஆடிய: நாடு எங்கே போய்விடும், நாங்களெல்லாம் இருக்கும் போது?

நாதனூர் நாகமணி முதலியார்: ஐயா, நாங்கள் நாட்டை நாடித் தேடித் தேடி 8 மாதங்கள் வரையில் பார்த்தோமே. எங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையே. அது போய் எவ்வளவு காலமாயிற்று. எங்களுக்குத் தெரிந்துவிட்டதே முன்னமே. உங்களுக்கு அது இன்னும் தெரியவில்லையா? 'நல்லவனுக் கடையாளம் சொல்லாமற் போவான்' என்றபடி அது நல்ல நாடு. அதனால்தான் உங்களுக்குச் சொல்லாமற் போய்விட்டது.

(தாந்தோன்றி முதலியார் வாய் திறக்கவில்லை)

ஐ. ஆடிய: இதென்ன அடாவடிப் பேச்சு. இதை யார்தான் ஒப்புக்கொள்வார்கள்? முன்னோர் ஏற்பாட்டை எதிர்த்துப் பேச உங்களுக்கு என்ன அதிகார மிருக்கிறது? மேல் நாடு என்ற விஷயத்தில் உங்களுக்குக் கொஞ்சமேனும் பயமில்லையே. என்ன சிறு பிள்ளைத் தனமாய்ப் பேசுகிறீர்களே!! நீங்கள் முன்னே கும்பிட்டுத்தான் ஆகவேண்டும். எக்நேரமானாலும் உங்கள் பேச்சுச் செல்லாது; கும்பிட்டுத் தான் ஆகவேண்டும்.

நா. ஏகாம்பர முதலியார்: அது ஒருக்காலும் முடியாது. எங்களிடத்தில் பெண் கொள்ளும் நீங்கள் தான் முதலில் எங்களை வணங்கிக் கும்பிடவேண்டும். மேல் நாடு கீழ் நாடு என்பது போய் எந்தக் காலமோ ஆயிற்று. நாங்கள் உங்களை மேல் நாடென்று மதித்துக் கொண்டு வந்த விவகாரத்தை ஏதாவது கவனித்துப் பைசல் செய்தீர்களா? நாங்கள் உங்களை நாடிக் கணக்கு வழக்கில்லாமல் நடந்தபோது எங்களை நீங்கள் யாராவது பொருட்படுத்தினீர்களா? அப்போது மேல் நாட்டார் என்ற மதிப்பையும், யோக்கியதையையும் காப்பாற்றிக்கொண்டீர்களா? பின் எதற்காக நாங்கள் உங்களுக்கு முன் மரியாதை செய்ய வேண்டும்? நீங்கள் முன்னர் மேல் நாட்டாராக நடந்துகொள்ளவில்லை. நாங்கள் உங்களைப் பின்பற்றியே பின்னர்க் கீழ் நாட்டாராக நடந்து கொள்ள மாட்டோ மென்கிறோம். ஆகையால் நீங்களே எங்களை முன் கும்பிடவேண்டும்.

இதே மாதிரியான வாக்குவாதம் வெகு நேரம் நடந்தது. இதனிடையே இரு பக்கத்திலுமுள்ள சில்லறை ஆசாமிகள் பலமான சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நாதனூரார் கேட்பது நியாயமான கேள்வி தானே அதற்குத் தக்க சமாதானம் சொல்ல வேண்டுமே என்று ஐயனூரிலுள்ள ஒரு செங்குந்தருக்காவது புத்தியில் படவில்லை. தாந்தோன்றி முதலியார் அதிகாரத்திற்கு வந்தது முதல் ஐயனூரில் அக்கிரமஸ்தர்கள் அதிகரித்துவிட்டார்கள் என்று முன்னரே காட்டியுள்ளேன். இச் சண்டையினால், பல்லக்கில் வந்த மணமகள் நடுவீதியிலேயே நிற்க நேர்ந்தது. வரவரச் சண்டையும் கூச்சலும் அதிகரித்துக்கொண்டே வந்தன. சண்டை ஆரம்பித்து 3 மணி நேரமாயிற்று. அப்பொழுதும் முடிவுக்கு வந்தபாடில்லை. அவ்வூரிலுள்ள பல இனத்தவரும் வந்து குழுமினார்கள். விஷயத்தைக் கேட்டறிந்த அவர்கள் ஐயனூர்ச் செங்குந்தர்களையே பழிக்க ஆரம்பித்தார்கள். நாதனூரிலிருந்து மணமகளோடு வந்தவர்கள் 28 பேர்களே யாகையால் அவர்கள் குழுமியிருந்த அப் பெருங் கூட்டத்தின் மத்தியிலிருந்து கும்பிடு வழக்கைப் பற்றியே மூச்சைப் பிடித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள்; வேறெதையும் கவனிக்க முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஐயனூரிலுள்ளார் சிலர் இவ் வாக்குவாதத்திற்கு எல்லை காண்பது அரிதென எண்ணித் தந்திரமாக மணமகள் அமர்ந்திருந்த பல்லக்கை மெதுவாகத் திருமண இல்லத்திற்குக் கொண்டுபோய் மணமகளை உள்ளே அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

(தொடரும்)

# இலகு வைத்தியம்

[டாக்டர். கண்ணுசாமி அவர்கள் திருவாரூர்.]

நமது ஜனங்கள் நோய் வாய்ப்பட்டால் நோயின் அவதியினாலும் அறியாமையினாலும் அனுபவமும், நூலாராய்ச்சியும், பதார்த்த குணம் பதார்த்தச் சேர்க்கைகளின் பஞ்சபூத ஐக்யத் தொகுப்புக்கள், மருந்து செய்பாக முறை முதலியவைகளில் அனுபவமுமில்லாதவர்களிடத்தில் கண்ட மருந்துகளைத் தின்று அதன் குணதோஷங்களால் பல்வேறு நூதன நோய்களுக் குள்ளாக்கி வருந்துகிறார்கள். வேறு சிலர் கோபாவேச காரணமாய் விஷ பதார்த்தங்களைத் தின்றுவிட்டுக் கஷ்டப்படுகிறார்கள். இவைகளை முன்னிட்டு ஒவ்வொருவரும் விஷப் பிரதி விஷம் என்ற நாலிரண்டணு விலையுள்ள புத்தகங்களைப் படித்திருப்பது மிக்க உபயோகமாயிருக்கும். ஷை புத்தகம் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கலாம். இதனடியில் கண்டபடி இன்னதைத் தின்று விஷமித்தால் இன்னது முறிவு என்று தெரிந்து கொள்ளலாம்.

எட்டிக்கு நாவல். ஊமத்தைக்கு அரணிவேர். எண்ணெய்க்குப் பெரு மருந்து கியாழம். சுண்ணும்புக்கு மஞ்சள். வாளத்திற்கு வசம்பு சுட்ட கரி, மேதைச் சாணம். மருதோன்றிக்குத் தான்றிக்காய். எருக்கம்பாலுக்கு எள்ளும் சர்க்கரையும். அபினிக்கு நெய்யும் வெங்காயமும். தில்லம்பாலுக்குக் கோவைச்சாறு. நெல் வேருக்கு எருக்கிலைச் சாறு. என்ணெண்ணெய்க்குச் சுரையிலை. தேங்காய்க்குப் பச்சரிசி வெல்லம். நிலக்கடலைக்கு வெல்லம். நெய் தேனுக்கு வெந்த கரிச்சாம்பல். பலாச் சுளைக்கு நெய். பாலாடைக்குப் புளித்த மோர். கோதுமைக்கு மிளகாய், மிளகு, பால், நெய். கஞ்சாவுக்குச் சுக்கு, எலுமிச்சம் பழச்சாறு, வாழைப்பட்டைச் சாறு. புகையிலைக்கு அகத்தியிலை. குடத்துக்கு எலுமிச்சம் பழச்சாறு, காசுகட்டிமோர். சிவனார் கிழங்குக்குச் சுக்கு. சதுரக்கள்ளிப் பாலுக்கு ஆவாரையிலை. குண்டுமணி பருப்புக்குப் படிகாரம். மகிழம் பிஞ்சுக்கு, உத்தாமணிவேர். சுண்ணும்பு கொடிக்கள்ளிப் பாலுக்குக் கோவைச்சாறு. கழுதை வண்டோட்டுக்கு அவரையிலை, சீரகம். அரைக்கீரை ரஸத்திற்குச் சங்கஞ்சாறு, அவுரிவேர், சுரைக்குடுக்கை சுட்டகரி. வீரத்துக்குச் சிறுநெருஞ்சில் சாறு. கோழி முட்டை, அவுரிவேர், நெய்ச்சிட்டி வேர்ச் சாறு, தென்னங் கள்ளு. பூரத்திற்கு அவுரி, பாகலிலை. தாளகத்துக்கு ஆவாரம்பூ, அவுரிவேர், வெட்டிவேர், சீரகம், மாதுளை விதை, தென்னங் குரும்பை. செந்தகத்திற்கு ஆவாரம் வேர், அவுரி பருத்தியிலை, சிறுநாகப்பூ, இளநீர், தாமரை விதை. மிருதார்சிங்கிக்குப், புங்கம்வேர். மயில்துத்தத்துக்கு எலுமிச்சம் பழம், இஞ்சி, தேன், சர்க்கரை. உப்புக்கு மேனிச் சாறு. செம்பின் களிம்புக்கு நெல்லிக்காய், எலுமிச்சம் பழச் சாறு, புளித்த மோர். கொடிவேலிக்குக் கோரைக்கிழங்கு, பேய்ப்பீர்க்கு. இடு மருந்துக்குப் பூஷணிக்காய், அவுரிவேர். இரத்த பாஷாணத்திற்குப் பேராத்தைக் கியாழம், வெந்தயம், மரக்கட்டை சுட்டகரி, பொரிகாரம், அவுரிவேர். பாஷாணத்துக்கு மிளகு, சிறுகீரை, துளசி, பொன்னாங்காணி. மற்றும் பல ரஸவர்க்க பற்ப செந்தூரங்கள் தின்று விஷமித்தால் பருத்திக்காயின் சாறு, பழச்சாறு, ஆவின்பால், முருங்கை ஈர்க்கு, ஆவாரம்பட்டை, வெங்காயம் சேர்ந்த குடிநீர். மாடுகள் செப்பு நெரிஞ்சிலைத் தின்று விஷமித்தால் ஓமம் அகத்திப்பட்டை மிளகு அரைத்துக் கொடுக்கவும். எல்லா விஷங்களையும் அவுரி முரித்துவிடும். (தொடரும்)

## சில இலகுவான முறைகள்

1. துத்திவேரை இடித்து ஆறுமணி நேரம் வென்னீரில் ஊற வைத்துக் கியாழமாகக் காய்ச்சி வடித்துச் சர்க்கரை சேர்த்து ஷர்பத்து செய்து சாப்பிட்டு வந்தால் நாட்பட்ட இருமலைப் போக்கும். மூலக்ஷயம், மூலக்கொதிப்பா லுண்டாகும் இருமல் நீங்கும். நீர்க்சுருக்கு குணமாகும்.

2. வில்வப் பழத்தை இடித்துக் கியாழத்துடன் சர்க்கரை சேர்த்துப் பாகு செய்து சாப்பிட்டு வந்தால் அஜீரண பேதி மலச்சிக்கல் முதலியவை குணமாகும். ஷை காயை இப்படிச் செய்து கொடுத்தால் சீதபேதி மூலக்கிராணி அதிசார பேதி குணமாகும்.


3. சதகுப்பை கியாழத்தையாவது ஷை தீநீரையாவது 15-முதல் 30-60 துளிகள் கொடுத்தால் குழந்தைகளின் மாந்த நோய் குணமாகும்.

4. சூரத்தாவரை, கொத்துமல்லி விதை, சுக்கு, சோம்பு இவைகளை இடித்துக் கியாழம் செய்து பால் சர்க்கரை சேர்த்துக் காபிக்குப் பதிலாக ஒரு நாள் மட்டும் காலையில் சாப்பிட்டால் சுகபேதியாகும்.

5. சூரத்தாவரை புளி இஞ்சி பச்சைக்கொத்துமல்லி சர்க்கரை எலுமிச்சந்தோல் அல்லது பழச்சாறு சேர்த்துத் தொகையல் செய்து இராத்திரி ஆகாரத்தில் சேர்த்துச் சாப்பிட்டால் காலையில் மல சுத்தியாகும் பித்த சமனமாகும்.

6. துத்தி இலையைப் புளி சேர்க்காமல் சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் மூலச்சூடு குணமாகும்.






குறும்பன்:—கோவிந்தா, என்ன விசேஷம் பத்திரிகையில்?

கோவிந்தன் :—'தி ஸ்மைலிங் லெப்டனென்ட்' (The Smiling Lieutenant) என்னும் புகைப்படக் காட்சிக்குப் படம் தயாரிக்கப்பட்ட பொழுது கன்னி க்ளாடெட் கோல்பெர்ட் என்பவளை மாரிஸ் செவாலியர் என்பவர் 3 மணி நேரத்தில் 134 தடவை முத்தாடினாராம்.

குறும்பன்:—இன்னும் அவள் கன்னியாகத்தானிருக்கிறாளென நினைக்கிறேன்.

* *

உபாத்தியாயர்:—எல்லாப் பாடங்களையும் நன்றாகப் படித்துக்கொண்டு வந்தாயா?

கண்ணன்:—எல்லாவற்றையும் நன்றாகப் படித்தேன் சார். ஆனால் ஒன்றையும் கொண்டுவரவில்லை.

* *

நண்பன்:—மலையாளம் ஜில்லாவில் எப்பொழுதும் மழை பெய்துகொண்டேயிருக்குமாமே.

புலவன்:—அங்கிருப்பவரெல்லாம் பத்தினிகள் போலும்.

நண்:—அதென்ன அப்படிச் சொன்னீர்?

புலவன்:—'கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' யல்லவா?

* *

உபாத்தியாயர் : போடா தடியா உனக்குப் படிப்பே வாராது. உன்னை எவன் பெற்றானோ தெரியவில்லை.

பையன் : எங்கள் அப்பா கூட இப்படித் தான் திட்டினார் சார்.

உபா : என்ன வென்று திட்டினார் ?

பை : 'உனக்கு எந்த மடையன் பாடஞ்சொல்லிக் கொடுக்கிறானோ தெரியவில்லை' என்றார்.

* *

கணவன் : கமலா, நீ ஒரு பெருங் கொள்ளைக்காரி.

மனைவி : ஐயோ, என் பாவமா! நான் எதைக் கொள்ளையடித்தேன்?

கணவன் : என் மனதைத்தான்.

* *

பண்டிதர் : போடா மூனியா, உனக்கென்ன தெரியும்? படிப்பு வாசனைகூடத் தெரியாது.

பாமரன் : என்ன சாமி அப்பிடி சொல்றீங்களே. அந்தப் பெரிய பள்ளிக்கூடம் எங்க ஊட்டுக்குப் பக்கத்தில்தானே இருக்குது. பள்ளிக்கூடத்துப் பசங்களெல்லா எங்க ஊட்டுப் பக்கமா தானே போராங்க? எனக்கு என்ன மூக்கில்லையா?

* *

அப்பன் : (கந்தல் கந்தலான புஸ்தகத்தைப் பார்த்து) என்னடா இது? புஸ்தகமா, குப்பையா?

மகன் : தெரிகிறதா இப்பொழுது என் கெட்டிக்காரத் தனம்? அன்றென்னவோ "படிச்சிக் கிழிச்சிடப் போறையா" என்றீரே. ஒரு எடாவது பாக்கிவிட்டேனா பாருங்கள்.

* *

உபாத்தியாயர் : வகுப்பில் உபாத்தியாயர் இருக்கும்போது பேசினாலும் பரவாயில்லை. இல்லாத பொழுதுதான் நிசப்தமா யிருக்கவேண்டும். (பிள்ளைகளெல்லாம் "ஓ"வென்று கத்தினார்கள்.)

உபா : என்னடா இது?

பிள்ளைகள் : சார் இப்பொழுது எல்லாவற்றையும் சேர்த்துக் கத்திவிட்டோம். நீங்கள் இல்லாதபோது கப் சுப்பென்று இருக்கிறோம் சார்.

* *

ஒருவன் : ஐயா இந்த மாம்பழம் நன்றாயிருக்குமா ?

கடைக்காரன்: தின்று பார்த்துப் பணம் தாருங்கள்.

ஒரு : (தின்று பார்த்துவிட்டு) நன்றாயில்லையே; புளிக்கிறதே.

கடை : தின்று பார்த்தாய்விட்ட தல்லவா ? பணத்தைக் கொடுத்துவிடும்.

* *

எஜமான் : பெரிய சனியனாய்ப் போச்சு! டிசம்பர் 15—ந் தேதி முதல் கார்டு கவருகள் இரட்டை விலையாம்.

வேலையாள் : அதனாலென்ன சாமி கஷ்டம்? நம்ம கிட்டதா பணமிருக்குதே. முன்னையே நெறைய நெறைய கட்டு கட்டா வாங்கியார்ந்து வச்சிகினா போவுது.

* *

எஜமான் : அடே தடியா நீ மாடு மேய்க்கத்தான் உதவுவாய். குழந்தையை வைத்திருக்க நீ லாயக்கல்ல.

வேலையாள் : இரண்டுக்கும் வித்தியாசமேயில்லை சுவாமி.

# விருந்தோம்பல்

[திரு. மா. ப. தியாகராஜன் அவர்கள்]

விருந்தினர்களை உபசரித்தல் மக்கட் தொகுதியுள் அமைந்த யாவருக்கும் இன்றியமையாததே. ஆயினும், தனக்கென ஒன்றுமின்றித் திரியும் உண்மைத் துறவிகளுக்கு விருந்தோம்பல் சாத்தியமானதன்று. விருந்தோம்பலுக்கென அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் வாய்ப்பதும் அருமை. அவர்களிடம் வரும் விருந்தினர் மனச் சாந்திக்காக வருவரே யொழிய பசிப்பிணி தீர்த்துக்கொள்ள வாரார். ஏகதேசமாய்ச் சிலர் வரின் விருந்தோம்பல் துறையில் அவர்களை உபசரிக்கா தொழியினும், ஜீவனிடத்தில் சமரச உணர்ச்சி பெற்றவர்களாதலால் தம்மிடத்து உணவிருப்பின் வந்தவர்களுக்குக் கொடுத்தல் துறவிகளது கடனாகும். இல்வாழ்வானுக்கோ விருந்தோம்பல் ஒரு முக்கிய கடனாகும்.

விருந்தினர்கள், பண்டு அறிந்தமையாற் குறித்து வந்தாரும், அறியாமையாற் குறியாது வந்தாரும் என இருவகைப்படுவர். விருந்தினர் என வந்தவர்கள் யாவராயினும் அவர்களை உபசரித்தல் இல்வாழ்வானுக் கழகாம். விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்றலும், இன்சொல் கூறித் தன்னில்லத் தமர்த்தலும், அமர்ந்தபின் வேண்டுவன புரிதலும் விருந்தோம்பல் முறையாகும். அன்புடைமையும் இனியவை கூறலும் விருந்தோம்பலுக் கின்றியமையாதன என்பதை உணர்த்துமான்றோ பொய்யாமொழிப் புலவராகிய நாயனாரும் தாமியற்றிய தமிழ் வேதத்தில் அன்புடைமை இனியவை கூறல் என்னும் அதிகாரங்களை விருந்தோம்பல் என்பதற்கு முன்னும் பின்னுமாக அமைத்துள்ளார்? உலகிலுள்ள புஷ்பங்களில் யாவற்றிலும் மெல்லியதாகிய அனிச்சம்பூ யாரேனும் அதை முகர்ந்தவுடன் வாடிவிடும். விருந்தினர் வதன மலரோ கடுமுகமாகிய சுடுகை பட்ட மாத்திரத்தில் குழைந்துவிடும். அம் மென்மலர் வனப்புடன் நிமிர்ந்து நறுமணம் வீசற்கு ஏதுக்களாயுள்ளவை குளிர்ந்த நோக்கெனும் தென்றல் விளங்காற்றும், இனிய உபசரிப்பென்னும் கதிரவனது பூங்கிரணங்களுமாம். இவ்விரண்டும் தவழும் இல்லமே இல்லமெனப்படும் பெற்றியுடைத்து.

இல்லாளை விலக்கி இல்லாள் மட்டும் விருந்து போற்றுதல் சக்தியை நீத்து உடம்பியங்குதலையொக்கும்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

என்றதனால், ஒரு குடும்பத்தில் இல்லாள் நற்குணமுடையவளா யில்லாதிருப்பின் அக் குடும்பத்தில் இல்லற தருமமே தலைகாணாது ஒழியும். ஆக, இல்லற தருமங்களுள் முக்கியமான விருந்தோம்பலைப் பேண இல்லாளிடத்தில் மனைமாட்சி வேண்டற்பாலது. விருந்தோம்பலுக்குப் பணம் மிக வேண்டுவதில்லை; குணமே மிகவும் முக்கியமானது. மலர் முகமும் இன்சொல்லும் உள்ளன்பு மிருப்பின் விருந்தினரை விருப்பமுடன் உபசரித்தல் இயலாத காரியமன்று. இருளால் தவித்து, மழையால் நனைந்து, குளிரால் நடுங்கி, பசியால் வருந்தி நள்ளிரவில் வந்த விருந்தினற்கு வீட்டின் கூரையால் தீ மூட்டிய அடுப்பில் முற்பகல் விதைத்த நெல்லைப் பதப்படுத்திக் கீரையையும் சமைத்து இன் அடிசில் ஊட்டிய இளையான்குடி மாற நாயனாரது விருந்தோம்பிய பெருமை பணத்தினாலோ? வந்த விருந்தாளராகிய அண்ணலாரிடம் அவர் கொண்ட அன்பும், ஆர்வமும், தம் நாயகியின் ஒத்துழைப்பு மன்றோ அவரை இரவென்றும் மழையென்றும் பாராது வயலில் புதைந்து கிடந்த நெற்களைப் பொருக்கிக் கொண்டுவரச் செய்தன. ஆக, நல்லில்லாளும் உள்ளன்பும் மலர் முகமும் இன்சொல்லும் விருந்தோம்பலாகிய இல்லற தருமத்திற்கு இன்றியமையாதனவாகும்.

"விருந்திலாச் சோறு மருந்து"

என்னும் பண்டைய வாக்கியமும்,

"மருந்தேயாயினும் விருந்தோடுண்"

என்னும் நீதிவாக்கியமும் உலகில் வழங்கி வருவதைக் காண்கிறோம். அவைகள் அவ் வில்லற தருமத்தின் பெருமையை விளக்கவே வழங்குகின்றன என்று உணரல் வேண்டும். அதுவேயன்றி,

"தென்புலத்தார், தெய்வம் விருந்து ஒக்கல் [தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை"

என்னும் திருக்குறளின் கருத்தை உள்ளூற ஆழ்ந்து நோக்குமிடத்து, தென்புலத்தாரும், தெய்வமும் கட்புலனாகாமையாலும், தான் தற்பயன் குறித்தமையாலும் விருந்து பிரத்தியக்ஷமெனவும், தொடர்பு பற்றும் தற்பயனும் நீங்கிய தெனவும் பெறப்படுகின்றன. அச் சிறப்புத் தோன்றவே நாயனாரும் அதை ஐவகை அறன் கட்கும் நடுவண் வைத்துப் பாடிப் போந்தார்.

அத் தருமத்தை வழாது நடாத்திவரும் தம்பதிகளும் இம்மையில் இலக்குமி கடாக்ஷத்துடன் இல்லறத்தில் பெறவேண்டிய பேறுகளை யடைந்து பலரும் போற்றப் புண்ணிய சிலர்களாய்ச் சுகமுடன் இருப்பர் என்பது திண்ணம். மறுமையிலும் அவர்கள் "வானத்தவர்க்கு நல்விருந்தினரே" யாவர்.

தற்காலத்து இல்லறத்தார் பெரும்பாலோர் விருந்தோம்பல் துறையிற் கொண்டுள்ள முறை மிகவும் வருந்தத்தக்கதா யிருக்கிறது. பெருமை

(இதன் தொடர்ச்சியை 325-ம் பக்கம் பார்க்க)

# காந்தியார் படலம்

எட்டு லக்ஷ ரூபாய் செலவழிக்கப்பட்டது. பெரிய பெரிய அறிஞர்களெல்லாம் ஆயிரக் கணக்கான மைல்களுக்குக் கப்பால் அழைத்துச் செல்லப்பட்டனர். பத்திரிகைகளி லெல்லாம் மகாநாட்டுச் சமாசாரமே நிறைந்து கிடந்தது. நாட்டின் எந்த மூலையிலும் மகாநாட்டுப் பேச்சே காதை யடைத்தது. பாமரர் முதல் பண்டிதர் வரை அனைவரும் வாய் திறந்து காத்திருந்தனர். இவ்வளவு ஆடம்பரமும் எப்படி முடிந்தது? மகாநாடு ஒரு பெரிய வட்டம் போட்டுவிட்டது. வட்ட மேஜையை எத்தனை தடவை சுற்றிவந்தாலும் புறப்பட்ட விடத்தில் தானே யிருக்கவேண்டும்?

பிரதம மந்திரி வெளியிட்ட அறிக்கை அவரது வாய்ச் சாமர்த்தியத்தைக் காட்டுகின்றது. அவர் வெகு நயப்பாகவே பேசியிருக்கிறார். முடிவென்ன? மகாநாட்டால் கண்ட பலனென்ன? சென்ற ஜனவரி மாதம் நாம் எந்த நிலையி லிருந்தோமோ அதே நிலையில்தான் இப்பொழுதும் அசையாதிருக்கிறோம். அப்பொழுது வெளியிடப்பட்ட அறிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் மீளவும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்கள். முன்பு தொழிற் கட்சி மட்டும் அதை ஆதரித்தது. இப்பொழுது எல்லாக் கக்ஷிகளும் அதை ஆதரிக்கின்றன. இந்தியர்கள் வேண்டும் ஆட்சிமுறை யின்னதென்பதை பிரிட்டிஷார் இந்தக் கூட்டத்தால் அறிந்துகொண்டார்களாயினும் அது சீக்கிரத்தில் முடிவதற்குத் தடையாகவுள்ள பல விஷயங்களையும் ஆலோசிக்க இந்தியாவிலேயே இம் மகாநாட்டுக்குக் காரியக் கமிட்டி நியமிக்கப் போகிறார்களாம். இந்தியப் பிரதிநிதிகள் மட்டும், பொறுப்புடைய மத்திய சர்காரும், ராணுவம்; செல்வம், வெளி நாட்டுச் சம்பந்தம் முதலியவற்றில் சுதந்தரமும் இல்லாத எந்த அரசியலையும் ஏற்றெடுத்தும் பார்க்க முடியாதென ஏகோபித்துக் கூறிவிட்டார்கள். பிரிட்டிஷ் பிரதம மந்திரி கூறுவதைக் கவனித்தால் இந்த நிலை விரைவில் ஏற்படுமோ வென்னும் சந்தேக மேற்படுகிறது. இந்த மகாநாட்டு அறிக்கையில் இன்னும் இரண்டு விஷயங்கள்தான் பாக்கி: சிந்துவும் எல்லைப்புறப் பிரதேசமும் இரண்டு தனி கவர்னர்களால் இனி ஆளப்படுமாம். இவ்வாறு முடிந்தது வட்டமேஜை மகாநாட்டின் இரண்டாவது கூட்டம். ராஜரீக பாஷையில் மகாநாடு ஒத்தி வைக்கப்பட் டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியர்களுள் பெரும்பாலோர் மிகவும் அதிருப்தி யடைந்துள்ளனர்.

முடிவு என்னவா யிருந்தாலும் சரி, இந்தக் கூட்டத்தால் ஒரு பெரிய நன்மை விளைந்திருக்கிறது. பரமாத்மனைப் போல நமது உள்ளங்களை யெல்லாம் தம்மகத்தே கொண்டு விளங்கும் நமது மகாத்மா தமது இருதயத்தை பிரிட்டிஷாருக்குத் தெளிவாகத் திறந்து காட்டிவிட்டார். நமக்கு வேண்டிய தின்னதென்றும், அதில் அணுவளவேனும் குறைந்தாலும் நாம் எவ்வளவு அதிருப்தி யடைவோ மென்றும், அதனால் என்ன விளையு மென்றும் அவர் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். அவ்வப்போது அவர் செய்த பிரசங்கங்களாலும், கிருபர்களிடம் கூறிய மொழிகளாலும் நமது நிலையை எடுத்துக் காட்டியுள்ளார். இது மட்டுமா? மேனாட்டு மக்களிற் பெருந் தொகையினரது உள்ளங்களைக் கொள்ளைகொண்டு அவர்க ளிதயங்களிலே ஒருவித அபிமானத்தையும் விளைக்கச்செய்துள்ளார். எது எப்படி யிருப்பினும், சாத்வீகப் போரின் பலத்தைத் தெளிவுபடுத்தித் தமது ஆன்ம சக்தியாலும் அன்பின் திறத்தாலும் சுதந்திர விதையினை நமது மகாத்மா விதைத்துள்ளா ரென்பது திண்ணம். அது இன்னும் எத்தனை நாட்களிற் தளிர்த்துச் செழித்துப் பலன்தரும் என்பதே கேள்வி. ஆனால், அதற்கு நாம் ஒற்றுமை யென்னும் நீரை எவ்வளவு இறைக்கின்றோமோ சாத்வீக மென்னும் எருவை எவ்வளவு இடுகின்றோமோ, தேசாபிமானம் என்னும் வேலியால் அதனை எவ்வளவு கனிவாகப் பாதுகாக்கின்றோமோ அவ்வளவு துரிதமாகவே அது செழித்துப் பலன் தரும்.

வட்டமேஜை மகாநாடு என்ன கதி யாகும் என்பதை மகாத்மா முன்னமே அறிந்திருந்தாரென அவரது மொழிகள் காட்டுகின்றன.

இந்தியாவின் நிலைமையையும், இந்தியர்களது மனப் பான்மையையும், அவர்களது கோரிக்கை

(324-வது பக்கத் தொடர்ச்சி)

நாடியும், டம்பமெனும் தீய குணத்தின் வயப்பட்டும் பெரும்பாலும் விருந்தோம்பல் தற்காலத்தில் நடைபெறுகிறது. ஏழை மக்களை உதாசினம் செய்து செல்வந்தர்களையே விருந்தினராகக் கொண்டு போற்றுதல் திருவள்ளுவர் பெருமைபடக் கூறிய விருந்தோம்பலுக்கு மாறுபட்டதேயாகும். திருவள்ளுவனார் கூறிய விருந்தோம்பலும், இளையான்குடிமாற நாயனார் இயற்றிக் காட்டிய விருந்தோம்பலும் நம் செங்குந்த உலகிலும், தாய் நாட்டிலும் பெரிதும் நிலவுமாக!

களையும், அவை நிறைவேறுவிடின் என்ன விளையும் என்பதையும், மகாநாடு வீணுயின் இந்தியர் எவ்வாறு நடந்துகொள்வர் என்பதையும் பற்றி அவர் சமயா சமயங்களில் கூறியுள்ளவற்றைக் கவனிப்போம்.

லண்டன் பொருளாதாரக் கலாசாலை மாணவர் கூட்டத்தில், "இந்தியாவுக்கு விடுதலையை மீட்டுத் தருவதில் நான் தோற்றால் எனது இந்திய மக்களை மீண்டும் சட்ட மறுப்புக்கு அழைப்பேன். இப்போராட்டத்தில் பத்து லக்ஷம் மக்களைப் பலியிடவும் தயாராயிருக்கிறேன்" என்றார்.

* *

லண்டனில் இந்திய மாணவர் யூனியனில்:— "ஆங்கிலேயருக்கு கிரேட் பிரிட்டனிலிருந்து கிடைக்கும் சுதந்தரத்தையே நான் இந்தியாவில் விரும்புகிறேன். எனக்கு ஒன்றும் கிடைக்காமற் போகலாம். ஆனால் அடுத்த போராட்டம் தொடங்குகையில், அதாவது மறுமுறை நாங்கள் கஷ்டங்களை ஏற்க ஆரம்பிக்கையில், இப்பொழுது விதைத்துள்ள விதை நற்பயன் தந்து, இந்தத் தேச ஜனங்கள் உணர்ச்சி பெறுவதன் பயனாக கஷ்டப்படும் தேசத்தாரோடு உங்களுடைய மந்திரிகள் ராஜி செய்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென நம்புகிறேன்."

* *

மற்றொரு சமயம்:—"எங்கள் சுய மரியாதையை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது.........பிரிட்டிஷ் மந்திரிகள் எனது உரிமையை அங்கீகரிக்காது அடிமை நுகத்தடி இன்னும் எங்கள் கழுத்தை இறுத்த வேண்டுமென்பாராயின் நாங்கள் மீண்டுமொரு முறை தியாக அக்னியில் குதிப்போம்."

* *

ஐக்கிய ஆட்சிக் கமிட்டியில்:—"பூரண பொறுப்பை இந்தியாவின் கைக்கு மாற்றிவிடவேண்டும், அதாவது இராணுவம், வெளிநாட்டுச் சம்பந்தம் இவைகளிற் பூரண அதிகாரமிருத்தல் வேண்டும் என்பதே காங்கிரஸின் லட்சியம்.........வெளி விவகாரங்களில் பரிபூரண உரிமை வேண்டுமென்கிறேன். இதை நடத்த நமக்குச் சக்தியுண்டென நம்புகிறேன். வெளி நாட்டாரோடும் உள்ளிருப்பவரோடும் சமாதானம் செய்துகொள்ள எங்களுக்குத் திறமையுண்டு."

* *

கேம்பிரிட்ஜில்:— "...பிரிட்டிஷார் இந்தியா மீதும் இந்தியரது திறமையிலும் என்று நம்பிக்கை வைக்கின்றனரோ, அன்றுதான் உண்மையான பொறுப்பாட்சி ஏற்படும்."

* *

கேம்பிரிட்ஜில் மற்றொரு சமயம்—"...'இந்தியாவைக் காத்துக்கொள்ள இந்தியருக்குத் திறமையில்லை. அதனால் பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் அங்கு இருந்தே தீரவேண்டும்' என்று கூறப்படின் நாங்கள்—ஆண்டவன் விருப்பம் அதுவாயின்—மீண்டும் தியாக அக்னியில் மூழ்க வேண்டியதுதான். மற்றவர்களது இரத்தம் ஆறாகப் பெருகியோடுமென நான் கூறவேயில்லை. ஏனென்றால் பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டுள்ள கக்ஷி மடிந்து வருகிறது. ஆனால் எங்களுதிரத்தையே நாங்கள் சிந்தி, அது கங்கைபோல் பெருக்கெடுத் தோடவும் செய்வோம் என்றுதான் சொன்னேன். இம்முறையில் நாங்களே எங்களைப் பலி பீடத்தில் அர்ப்பணம் செய்துகொள்கிறோம். இது நாங்கள் மனப்பூர்வமாகச் செய்யும் காரியம். அவசிமாயின் இத்தகைய இரத்த வெள்ளத்தில் மூழ்குவதும் இந்தியாவுக்கு நல்லதே. உங்கள் பிடியில் அகப்பட்டு அவமானத்துடன் சாவதைவிட நான் கூறியபடி வீர மரண மடைவதை நான் ஒரு பிரமாதமாக மதியேன்."

* *

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து ஆவேசம் பொங்கி எழுந்ததால்:—

"நான் வேண்டுவது இங்கே இப்போது கிடைக்காதென்பதை நானறிவேன். அதைக் கொடுக்க ஒரு ஆங்கிலேயராவது தயாராயில்லையென்றும் தெரிந்துகொண்டேன். ஆகவே இனி நான் செய்ய வேண்டியதென்ன? எனது ஜன்ம பூமிக்குத் திரும்பி மற்றொரு முறை எனது தேச மக்களைத் தியாகத்திற் கழைக்க வேண்டியதுதான்.

"மகாண சுய ஆட்சி என்னும் வார்த்தையும் காற்றில் பறக்கவிடப்பட்டது. அது நான் எண்ணியுள்ள மகாண சுய ஆட்சியாயின், அந்தக் கனியைச் சற்றுத் தொட்டு ருசி பார்க்கலாமென எண்ணினேன். ஆனால் அதுவும் நானெண்ணியதல்லவெனத் தெரிந்துவிட்டது. அதனால் என்னைத் தனியாக விட்டுவிடும்படி எனது நண்பரிடம் கூறிவிட்டேன். எனது தேச நலனை விற்க முடியாதென்றும் சொல்லிவிட்டேன்.

"சகல பொறுப்புக்களுடனும், இந்தியாவின் நன்மைக்கான பாதுகாப்புக்களுடனும் கூடிய சமஷ்டி அரசியலைப்பற்றி வாதிக்கவும், அதை வாங்கிச் செல்லவுமே ராஜி ஒப்பந்தத்துடன் நான் இங்கு வந்தேன். ஆனால் இந்தியாவில் அடக்குமுறை ஏற்பட்டதைத் தவிர வேறொன்றும் மகாநாட்டாற் கிடைக்கவில்லை. அடக்குமுறை எப்பொழுதும் நன்மையே செய்திருப்பதால் அதை நான் பொருட்படுத்தவில்லை. ஒரே வருத்தம்தான் என் உள்ளத்தை வாட்டுகின்றது. பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்கலாமென் நான் கொண்டிருந்த ஒரே எண்ணத்திலும் இப்பொழுது இடிவிழுந்துவிட்டது. இனி நான் மீளவும் உறுதியான ஒத்துழையாமையாளனாகவும், சாத்வீக சட்ட மறுப்புக்காரனாகவுமே மாறவேண்டும். இந்தியாவின் மீது எத்தகைய விமானங்களானாலும் பீரங்கி வண்டிகளானாலும் தாண்டவமாடட்டும். நானென்னவோ இந்தியாவின் கோடிக் கணக்கான மக்கட்கு இனி ஒத்துழையாமையையும் சட்ட மறுப்பையுமே மீண்டும் போதிக்க வேண்டும்."



வில் மீண்டும் கடுமையான போர் தொடங்கும் போற் றோன்றுகிறது. ஜனங்கள் போருக்கு முற்றிலும் சித்தமா யிருக்கிறார்கள். எப்போது அனுமதி கிடைக்குமென்றே அவர்கள் காத்திருக்கிறார்கள்."

* *

மகாநாட்டில் அறிவுறுத்தல்:—"நான் சொல்வதற்காக இல்லாவிடினும், தெய்வத்துக்காவது அஞ்சி நடவுங்கள். எலும்பும் தோலுமாய் நான் இதோ நிற்கிறேன்; வயதோ 62-க்கு மேலாகிவிட்டது. எனக்கொரு சந்தர்ப்பம் அளித்துத்தான் பாருங்களேன். உங்கள் மனதில் எனக்கும் என்னைப் பிரதிநிதியாக அனுப்பியுள்ள காங்கிரஸுக்கும் கொஞ்சம் இடமளியுங்கள். என்னை நீங்கள் சிறிது நம்புவதாகத் தோன்றுகிறது; ஆனால் காங்கிரஸ் ஸ்தாபனத்தை நம்பவில்லை. காங்கிரஸுக்கு முன் நான் எவ்வளவு? காங்கிரஸ் எனக்களித்த அதிகாரப்படியே நான் நடக்கிறேன்.

"சுதந்தரத்தின் தத்துவத்தை நீங்கள் அங்கீகரியாத வரை ராஜி பேசுவது இயலாததே. 35 கோடி மக்கள் சுதந்தரம் பெறுதற்கு வாள், துப்பாக்கி, விஷக்காற்று, வெடி குண்டு, எதன் துணையையும் நாடவேண்டியதில்லை. மனவுறுதி கொண்டால் சுதந்தரம் தானாகவே கிடைத்துவிடும். அதில்தான் இந்தியர் இப்பொழுது பழகி வருகின்றனர்.

"காங்கிரஸ் உரிமையில் நான் அணுவளவும் விட்டுக்கொடுக்க மாட்டேன்; சமஷ்டிக் கமிட்டியில் பேசியுள்ள வார்த்தைகளில் ஒன்றையும் மீட்க மாட்டேன், ஆயினும் ராஜியாகப் போக நான் இன்னமும் தயார்; என்முன் சமர்ப்பிக்கப்படும் திட்டங்களைப் பரிசீலனை செய்யவும் தயார். எத்தகைய படையுமின்றியே போட்டி அரசாங்கத்தை நடத்தக் காங்கிரஸுக்குத் திறமை யுண்டென்பதை உணருங்கள்."

* *

பொழுது விடியு முன்பு'—டிஸம்பர் மாதம் முதல் தேதி வட்டமேஜை முடிவெல்லாம் வெட்ட வெளிச்ச மாய்விட்டது. அதற்குச் சற்று முன்பு மகாத்மாவும் தமது எச்சரிக்கையை வெளிப்படுத்திவிட்டார்.

"இந்தியா முழுமைக்கும் காங்கிரஸ் ஒன்றே உண்மையான பிரதிநிதித்துவ சபையாகும். அது சகல மைனாரிடிகளுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறது. போட்டிச் சர்க்காரை காங்கிரஸ் நடத்துவதாக அதன் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். புரட்சி உணர்ச்சியை அது குறிக்கிறதென்பது உண்மையே. சமாதான வார்த்தைகள்மூலம் பிரிட்டன் இணங்குவது பிரிட்டனின் மதிப்பை அதிகரிக்கும். புட்சிக்காரர்களை நானோ காங்கிரஸோ ஆதரிக்கவில்லை. தேச பக்திக்காகக் கல்கத்தா மேயர் பெரிய நஷ்ட ஈடு கொடுத்துள்ளார். சட்ட மறுப்பு மூலம் பிரமாதமான கஷ்டங்களுக்கு இந்தியாவின் கோடிக் கணக்கான ஆண், பெண், [illegible] ஆளாக்காது தடுக்கக் கௌரவமான நான் மன்றாடிப் பாடுபட்டுப் பார்ப்பேன். சட்ட மறுப்பொன்று தான் வழியென் றேற்பட்டாலோ அதையே சந்தோஷமாய்க் கைக்கொள்வேன். எந்தப் பெயரால் அழைப்பினும் சரி, நான்வேண்டுவது உண்மைச் சுயேச்சையே. நான் வந்துள்ளது சிநேக பாவத்துட னிருக்கவேண்டுமெனக் கெஞ்சிக் கேட்கவே யன்றி இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமுள்ள சம்பந்தத்தைத் துணிக்க அல்ல. ஆனால் அச் சம்பந்தம் விடுதலையையே அடிப்படையாக உடைய நட்பு முறையி லிருத்தல் வேண்டும். பிரஸ்தாப "பாதுகாப்புக்கள்" இந்தியாவை அடிமையி லாழ்த்துவதாகவே இருக்கும். சில 'பாதுகாப்பு'க்களோ இந்தியாவை நசுக்கிப் பிழிவனவா யுள்ளன. 'பாதுகாப்புக்கள்' இந்தியாவின் நன்மைக்காக விருக்குமெனக் காங்கிரஸுக்கு உறுதி மொழியளித்துள்ளனர். இந்தியாவிலோ அன்றி இங்கிலாந்திலோ அதிக்கிரமமாகச் சுகம் அனுபவித்து வரும் இனங்கள் அடியோடு ஒழிய வேண்டும். ஒற்றுமை அதிக மேற்பட்டிருக்கிறதென்று ஸ்ரீமான்கள் சாப்ருவும் ஜெயகாரும் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். உண்மை விஷயங்கள் பற்றி நமக்குள் அபிப்பிராய பேத மேற்படவில்லை. மிகவும் சிக்கிரமை யளிக்கும் பிரச்னைகள் இருக்கின்றன வென்பதை நான் அறியாமலில்லை, எனினும் நான் சமரச மேற்படுத்தி விடலாமென நம்பி யிருக்கிறேன். சட்ட மறுப்பைத்தான் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்பது என் விருப்பமல்ல. தற்போது நிலவும் ராஜியை, நிரந்தர சமாதானமாக மாற்றிவிட வேண்டுமென்பது எனது பேரவா. யாவற்றிற்கும் நம்பிக்கையே அவசியம். காங்கிரஸ் என்னைவிட மகத்தானது. மைனாரிட்டி பிரச்னையில் சமரச மேற்படாத வரை இந்தியாவில் சுயராஜ்ய மேற்படுவதற்கில்லை. ஆனால் சமரசம் ஏற்படுத்தி விடலாமென்றே நான் நம்புகிறேன். அந்நிய ஆட்சி இருக்கும் வரை இவ்விஷயத்தில் சமரச மேற்படுவது துர்லபம். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திற்கு முன் இந்தியாவில் இவ்வித பிரச்னையே இல்லை. தற்போதும் கிராமாந்தரங்களில் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாகச் சகோதரர்கள் போல் சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். சமஸ்தானப் பிரஜைகளுக்கு மூலாதார உரிமை வழங்குவதன்றிச் சமஸ்தானங்களில் பிரதிநிதி ஆட்சி முறையை மன்னர்கள் புகுத்துவார்களென நம்பி யிருக்கிறேன். ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்தின் அரசியல் திட்டப்படி மன்னராக இருப்பதுபோல் இந்திய மன்னர்களும் சமஸ்தானங்களில் விளங்க வேண்டுமென நான் விரும்புகிறேன். காங்கிரஸ் விருப்பப்படிச் செய்ய முடியுமாயின், எல்லைப்புற மாகாணத்திற்கு உடனே மாகாண சுயாட்சி அளித்துவிடும். அனுமதியளிப்பின், நான் பூரணமாக ஒத்துழைக்கச் சித்தமா யிருக்கிறேன். என்பால் மரியாதையும் பொறுமையும் காட்டியதற்காக பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் சகல பிரதிநிதிகளுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன் பல்லாயிரக் கணக்கானவர்களது மேலான நட்புடன் இந்தியா திரும்புகிறேன்."

வட்டமேஜைக் கூட்டத்தின் முடிவில் மகாத்மா வந்தனோபசாரமாகக் கூறிய மொழிகளே எல்லாவற்றினும் ருசிகரமானவை. அன்பு ததும்பும் தூய மனத்தையும் ஆழ்ந்த கருத்தையும் வெளிப்படுத்தும் அப் பிரசங்கம் வருமாறு :—

"பிரதம மந்திரி ஓய்வு சாய்வின்றி உழைத்தார். அதோடு பண்டித மாளவியா, ஸ்ரீமான் சாஸ்திரி இவர்களையும், என்னையும் போன்ற கிழவர்களிடமும் அவர் கடுமையாக வேலை வாங்கிவிட்டார். அதற்காக அவருக்கு வந்தனம் செலுத்த வேண்டும்.

"உங்களுடைய அறிக்கையைப்பற்றி யான் இப்பொழுதொன்றும் கூறமுடியாது. அதை வார்த்தை வார்த்தையாகப் படித்து ஊன்றி ஆராய்ந்து அதன் உட்பொருளை உணரவேண்டும். ஒரு முறையல்ல, இரு முறையல்ல, மும்முறையு மல்ல, பல முறைகள் வாசித்த பின் தான் என் கருத்தை வெளியிடுவேன். அதன் பிறகு நாமிருதரத்தாரும் அவரவர் வழியே செல்ல வேண்டியது தான் என்று நான் முடிவு கட்டினாலும் கூட நீங்கள் எனது மனமார்ந்த வந்தனத்துக் குரிமை யுடையவராவீர்கள்.

"என்ன செய்யலாம்? சில சந்தர்ப்பங்களில் இரத்த பாசமுடைய அண்ணன் தம்பிமாரும் பிரிந்து தத்தம் வழியே செல்ல நேர்ந்துவிடுகிறது. ஆனால் அவர்களது சச்சரவின் முடிவில், அவர்களது வேற்றுமைகள் நிவர்த்தி யாகையில், தாங்கள் ஒருவருக் கொருவர் துவேஷம் காட்டிக்கொள்ளவில்லை யென்றும், ஒரு கண்ணிய புருஷனையும் யுத்த வீரனையும் போலவே நடந்துகொண்டதாகவும் அவர்கள் சொல்லிக்கொள்வராயின், அதுவே மிக உசிதமானது. இந்த அத்தியாய முடிவில் நானும் எனது தேசத்தாரும் அவ்வாறே நடந்துகொண் டிருப்பதாய்க் கூறி, பிரதம மந்திரியாகிய நீங்களும் உங்களது தேசத்தாரும் அந்த விதமாகவே நடந்துகொண் டிருப்பதாகவும் நான் சொல்லக் கூடுமாயின் நாம் நல்ல விதமாகவே பிரிந்ததாகச் சொல்வேன்.

"என் வழி எதுவா யிருக்குமென நானறியேன். அது எவ்வளவு துன்பம் நிறைந்ததாயினும் பாதகமில்லை. உங்கள் வழிக்கு நேர் முரணான வழியில் நான் செல்ல நேரிட்டாலும் கூட எனது மனப்பூர்வமான வந்தனத்தைப் பெற நீங்கள் உரியவராவீர்கள்."

* *

அடிகளார் அவ்வப்போது கூறி வந்த மொழிகளும் வந்தனோபசாரமாகக் கூறியவையும் பிரதம மந்திரியின் மனத்தில் எவ்வாறு ஊடுருவிப் பாய்ந்து அவ ரிதயத்தைப் பிணித்தன என்பதை அவரது முடிவுரையும் செயல்களும் காட்டுகின்றன. வந்தனத்துக்கு வந்தனமாக அவர் கூறியதாவது:—

'நான் பொது வாழ்வினின்றும் விலகிக்கொள்கையில் இந்தியாவுக்குத் திருப்தியளிக்கக் கூடிய வகையில் அதற்கும் பிரிட்டனுக்குமொரு ராஜி ஏற்பட்டுவிடின் நான் ஆனந்தக்களிப் பெய்துவேன். அன்பும், நேசபாவமும் ததும்பும் மகாத்மாவின் மொழிகட்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் நான் அவருடன் சண்டை பிடிக்க வேண்டியிருக்கிறது. அது என்ன தெரியுமா? அவர் கிழவரா, அல்லது நான் கிழவனா என்பதுதான். வயதில் மகாத்மா காந்திக்கு நான் இளையவன்தான். தமது பேச்சில் அவர் தம்மைக் கிழவர் என்று சொல்லிக்கொண் டுள்ளார். மாதக் கணக்காக இரவு பகலெனப் பாராதுழைத்த அவரா கிழவர்? நேற்றிரவு அவர் பேசியது ஒரு இளங் குமரன் பேச்சைப் போலவன்றோ இருந்தது? அப்போது நாற்காலியி லுட்கார்ந்திருந்த நானே கிழவன். வட்டமேஜையின் ரிகார்டுகளைப் புரட்டிப் பார்த்தால் எனக்கு அந்திய காலம் நெருங்கிவிட்டதென்பது தெரியவரும். "இதென்ன தொல்லை, ஊணுறக்கமின்றி உட்கார்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறதே" என்று சொல்லாத பிரதிநிதி யாராவது உண்டென்றால், அவர் இதோ உட்கார்ந்திருக்கும் வாலிபர் (மகாத்மா காந்தி) தாம்' தலைமை வகித்த கிழவனாகிய என்னை வாலிபராகிய நீங்கள் (மகாத்மா) இரவு 2-30 மணி வரை படுக்கைக்குப் போகாதவாறு செய்துவிட்டீர்கள்'.

இப் பிரசங்கத்தி னிறுதியில் பிரதம மந்திரி காந்திஜியை 'எனதருமை மகாத்மாவே' எனக் கனிவோடழைத்தார்.

மகாநாட்டின் கடைசிக் காட்சி வெகு ருசிகரமானது. மாக்டொனல்டு சிறிது நேரம் நிசப்தமாய் நின்றாராம். தலைவர் மணியை மேஜைமீது தட்டினாராம். பிறகு மகாநாடு ஒத்திவைக்கப்பட் டிருப்பதாக மந்திரி அறிவித்தார். சில விநாடிகள் சபை முழுதும் மௌனத்திலாழ்ந்திருந்தது. திடீரென்று மாக்டொனல்ட் காந்திஜி அமர்ந்திருந்த இடத்திற்கோடி அவரைத் தமது கரங்களால் அன்போடு தழுவிக்கொண்டாராம். இருவரது கண்களும் நேராகச் சந்தித்து ஒன்றையொன்று உள் நோக்கினவாம். இருவரும் எதிர்காலத்தைப் பற்றித் தாழ்ந்த குரலில் சிறிது பேசினராம்.


* *

மகாநாட்டின் முடிவைக் கண்டபின் மகாத்மாவின் மொழிகள்:—

"என் மனத்தைக் கலக்குவது பிரதம மந்திரியின் அறிக்கையுமல்ல, வட்டமேஜையின் முடிவுமல்ல; இந்தியாவிற் தற்போது நிகழ்ந்து வரும் சம்பவங்களே. வங்காளத்தி லேற்பட்டுள்ள நிலைமை எதிர்காலத்தில் நிகழ விருக்கும் ஏதோ பிரமாதமான சம்பவத்தைக் குறிக்கின்றது. புரட்சி இயக்கத்தையும் அதனா லுண்டாகும் பயங்கரமான சம்பவங்களையும் தடுக்கச் சர்க்காருக்கு ஏராளமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன; ஒரு அவசரச் சட்டமும் பிறந்திருக்கிறது. சர்க்காருக்குக் கிலி பிடித்திருக்கிறதென்றே கூறவேண்டும்.

"பயங்கரச் சம்பவங்களை நானும் வெறுக்கிறேன். ஆனால் எறும்பை நசுக்கத் துப்பாக்கியா? என் கையில் அதிகாரமிருந்தால் சாதாரண சட்டத்தாலேயே இவ்வியக்கத்தை எளிதில் [illegible] வேன்.






கார்டு கவர்களின் விலையேற்றம்.

1932-ம௵ டிசம்பர்௴ 15-ந் தேதி முதல் உள்நாட்டுத் தபால் தந்தி, மணி ஆர்டர் இவற்றின் விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. $2\frac{1}{2}$ தோலாவுக்கு அதிகப்படாத எடையுள்ள கடிதங்களுக்கு ஒன்றே காலணா. (0—1—3). அதற்கு மேல் ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவுக்கும் 0—1—3 அதிகம். தபால் கார்டின் விலை 9 தம்பிடி. ரிப்ளைகார்ட் $1\frac{1}{2}$ அணா. போதுமான ஸ்டாம்பு ஒட்டப்படாத கடிதங்கள் குறிப்பிட்ட விலாசத்திற் சேர்க்கப்படாமல் கிழித்தெறியப்படும். தந்தி மணியார்டர்களுக்கு முன்னைய விகிதத்துக்கு மேல் 2 அணா வீதம் அதிகமாகச் செலுத்த வேண்டும்.

* *

அமெரிக்காவில் தற்போது 3,000 பெண்கள் பிளான் வரைவதில் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்; பெண் கல்லூரித் தலைவிகளாகவும் 10,000-க்கு மேற்பட்ட பெண்க ளிருக்கின்றனர். 2,000 பெண் நியாயாதிபதிகளும், சுமார் 5,000 பெண் லாயர்களும் இருக்கின்றனர். 4,000-க்கு மேற்பட்ட பெண்கள் பாங்குகளில் உயர்ந்த உத்தியோகங்கள் வகிக்கின்றனர். ஆயிரக் கணக்கான பேர் டாக்டர்களாகவும், நர்சுகளாகவும், பாதிரிமாராகவும் இருக்கின்றனர்.

நமது நாட்டிலோ! வித்தை யெங்கே? தேர்ச்சி யெங்கே? அடுப்பைக் கட்டிக்கொண்டழுவதற்கும் மாமியார் மருமகள் சண்டைக்குமே காலம் போதவில்லையே!

* *

## கலியுகத் துரோபதிகள்

இமயமலையின் பின்புறச் சாரலிலுள்ள திபேத்தில் ஒரு பெண்ணுக்குப் பல புருஷர் இருக்கும் வழக்கம் காணப்படுகிறது. அங்குள்ள குடிகளுள் ஒரு குடும்பத்தில் மூத்த மகன் மணக்கும் பெண்ணே அவனது சகோதரர்களுக் கெல்லாம் மட்டுமன்றி அவர்களது தகப்பனுக்கும் மனைவியாகிறாளாம். ஒரு விதவையை ஒருவன் மணஞ் செய்துகொண்டால், அவளுக்கு முன்னமேயுள்ள பெண்களும் அவனுக்கு மனைவிக ளாகின்றனராம். இவ் வழக்கத்தினை மைசூர் மகாராஜா நேரிற் கண்டாராம்.

இதுகண்டு, பஞ்சபாண்டவர் திபேத்திலிருந்து வந்தவர் தானோ எனச் சிலர் ஐயப்படுகின்றனர்.

* *

வெஸுவியஸ் மலைக்கு 30 மைல் தூரத்திலுள்ள கார்ப்பீனா ஏரியிலுள்ள நீர் ஒரு நாளைக்குப் பல முறை திடீரென மறைகிறதாம். நீரெல்லாம் வற்றிக் கட்டாந்தரை காண்கிறதாம். பிறகு பூமியின் கீழ்ப் பலவித அதிர்ச்சிகளோடு நீர் மீண்டும் பொங்கிக் கொண்டு வெளிப்படுகிறதாம். அவ்வாறு நீர் மேலே வரும்போது பனி யுண்டாகிறதாம். ஏரி நிறம்பினவுடன் பனி விலகுகிறதாம்.

(328-வது பக்கத் தொடர்ச்சி)

"மேலும், நோயை நீக்குவதினும் அதன் ஆதாரத்தைநீக்குவது சிறந்ததல்லவா? இந்த இயக்கத்துக்கும், வங்க வாலிபர் விருப்பத்துடன் கழுத்தை நீட்டி உயிரை அர்ப்பணம் செய்ய முன் வருவதற்கும் காரணமென்ன? சுதந்தரத்துக்காகவே அவர்கள் உயிரைப் பலியிடுகின்றனர். சுதந்தரம் கிடைத்துவிட்டதானால் இவ் வியக்கமும் மறைந்துபோம். தேச மக்களது சுதந்தரத் தாகத்தைத் தணித்தாலொழிய பயங்கர இயக்கம் ஒழியப் போகிறதில்லை.

"பிரதம மந்திரியின் அறிக்கையைப்பற்றி இப்பொழுது ஒன்றும் கூறுவதற்கில்லை. இந்தியாவுக்குச் சென்று காங்கிரஸ் நிர்வாக சபையுடன் கலந்[illegible] பின்னரே ஏதாவது சொல்ல முடி[illegible] வேற்றப்படுமாயின் தேசிய தோரணையில் அதுவே சட்டமறுப்பைப் பிறப்பித்தாலும் பிறப்பிக்கும். துரைத்தனத்தார் எப்படித் தங்களாயுதங்களில் குண்டைக் கெட்டித்துக்கொண்டு தயாரா யிருக்கின்றனரோ அப்படியே காங்கிரஸும் அஹிம்சை வழியில் தயாரா யிருக்க வேண்டும்."

* *

மகாநாடு முடிந்தபின் அடிகளார் பிரான்ஸ் இடலி முதலிய தேசங்களிலுள்ள ரோமேன் ரோலண்ட், முஸோலினி முதலிய பெரியார்களிடம் அளவளாவிவிட்டு 14-12-31-இல் இடலியிலுள்ள ப்ரிண்டிஸி என்னுமிடத்தில் தாய்நாடு திரும்பக் கப்பலேறிவிட்டார்.

தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாட்டுத் தலைவர்

## திரு. K. N. சுப்பிரமணிய முதலியார், B. A. அவர்கள் சரித்திரச் சுருக்கம்

தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள உயர் திருவாளர் K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக் குறிச்சியில் 1890-ஆம் ௵ டிசம்பர்௴ 12௳ பிறந்தவர். இவரது தந்தையாரும், செங்குந்தர் தலைவரும், ஜவுளி வியாபாரியுமாகிய திரு. நாராயண முதலியார் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில் தர்மகர்த்தாவாயிருந்ததோடு, கடவுள் பக்தியும், சைவாபிமானமும் உடையவராயும், உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசாத உத்தமராயும் விளங்கியவர். திரு. நாராயணசாமி முதலியார் தமது ஏக புத்திரராகிய உயர் திரு. சுப்பிரமணிய முதலியாரிடத்து வைத்திருந்த அன்பின் மிகுதியால் அவரைக் கல்லிடைக் குறிச்சி ஆங்கில பாடசாலையில் சேர்த்துக் கல்வி பயில்வித்தார். இவர் தான் கல்லிடைக் குறிச்சியில் முதல் முதலாக ஆங்கிலம் கற்க ஆரம்பித்த செங்குந்தப் பிள்ளை. பின்னர் சென்னை கிறிஸ்தவ கலாசாலையில் பி. ஏ. வகுப்பு படித்து 1914-ஆம் ஆண்டு பரீக்ஷையில் தேறினார். கல்லிடைக் குறிச்சி செங்குந்தர்களுக்குள்ளே இவர் தான் முதல் முதல் பி. ஏ. பட்டம் பெற்றவர். இவர் ஐந்தாவது வகுப்பிலிருந்தே சம்ஸ்கிருதத்தை இரண்டாவது பாஷையாகக் கற்றுவந்த படியால், இவர் பி. ஏ. வகுப்பில் படித்துத் தேறிய பாடங்களுள் சமஸ்கிருத பாஷையும் ஒன்றாகும். இப்பாஷையில் இவருக்கு ஆழ்ந்த ஞானமுண்டு. வாசித்து வருங் காலத்திலேயே வகுப்புப் பிள்ளைகளுள் இவர் மிகுந்த புத்திசாலி யென்றும், நற்குணமுடையவரென்றும், உபாத்தியாயர்களால் நன்கு மதிக்கப் பெற்று வந்தார்.

1924௵ முதல் 1916௵ வரையில் திருநெல்வேலி சி. எம். எஸ். காலேஜில் சயன்ஸ் உதவி ஆசிரியராக இருந்து, பின்னர்ச் சட்டத்தில் தேர்ச்சி பெற விருப்பங்கொண்டு 1917௵ சென்னைச் சட்ட கலாசாலையில் வாசித்து முதல் கிரேட் பிளீடர் பரீக்ஷையில் வெகு திறமையோடு தேறி, அதே வருஷம் நவம்பர் மாதத்திலிருந்து அம்பாசமுத்திரத்தில் ஒரு பிரபல வக்கீலாக இருந்து வருகிறார்.

அம்பாசமுத்திரம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர், ஸ்ரீ சங்கரலிங்க தேவஸ்தானங்களின் நிர்வாக சம்பந்தமாக நடந்த ஸ்கீம் சூட்டுகளின் தீர்ப்புப் பிரகாரம் நமது முதலியார் அவர்கள் அவற்றின் ரிசீவராக 1920௵ ஜனவரி௴ நியமிக்கப்பெற்று இரு கக்ஷிக்காரர்களும் மனஸ்தாபம் ஒழிந்து ஒற்றுமையுற்ற வரையில் அப் பதவியை வகித்து வந்தார். வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் தலைவராக 1923௵ த்திலிருந்து தொடர்ச்சியாக ஆறு வருஷ காலம் இருந்துவந்தார். ஷை சங்கமானது திருநெல்வேலியில் வக்கீலாக இருந்த செங்குந்த திலகர் திரு. V. A. பூமிநாத முதலியார் அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்று இன்றுவரை மிகுந்த ஊக்கத்தோடு இடைவிடாது நமது குல முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறது. இச்சங்கமே சென்னை மாகாணத்திலுள்ள செங்குந்தர் சங்கங்களுக்குள்ளே மிகப் பழமையானது. நமது குல முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டு வந்த திரு. பூமிநாத முதலியார் அவர்கள் 1923௵ விண்குடியேறியது நம் குலம் செய்த துர்ப்பாக்கியமேயாம்.

தென்காசியில் 1920-ஆம்௵ ஸ்தாபிக்கப்பெற்ற செங்குந்தர் பாங்கியில் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 1923-ஆம்௵ பங்குதாரராகச் சேர்ந்து, அது முதல் அப்பாங்கியின் டைரெக்டர்களுள் ஒருவராக இருந்துவருவதன்றி, இரண்டு மூன்று தடவைகளில் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று இன்னும் அப்பதவியை வகித்து வருகிறார்.

இந்து தேவஸ்தான பரிபாலன சட்டம் (Hindu Religious Endowment Act) அமுலுக்கு வந்த நாள் முதல் ஸ்ரீ காசிவிஸ்வநாதர், ஸ்ரீ திருமூலநாத சுவாமி, ஸ்ரீவீரமார்த்தாண்டேஸ்வரர் முதலிய தேவஸ்தானங்களுக்குக் கூட்டுத் தர்மகர்த்தாக நியமிக்கப் பெற்றுச் சில வருஷங்கள் அதைத் திறமையுடன் நிர்வகித்துப் பின்னர் ஏற்பட்ட சில குடும்ப அசந்தர்ப்பங்களால் ராஜினாமா செய்துவிட்டனர்.

திரு முதலியார் அவர்கள் தமது வக்கீல் வேலையோடு பல பொது வேலைகளையும் பார்த்து வருவதனால் இவருக்கு ஒழிவு நேரம் கிடைப்பது மிகவும் அருமை. என்றாலும், இவரைப் போல் செங்குந்த மித்திரனை ஒவ்வொரு மாதமும் தவறாது ஆதிமுதல் அந்தம் வரையில் ஒரு எழுத்துக்கூட விடாமல் படித்து அதிற் கண்டுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடியவர்களைக் காண்பது மிகவும் அரிது. இவருக்கு முன் பின் பரிச்சிய முள்ளவர்கள் இல்லாத சென்னையில் இவர் சட்டக் கலாசாலையில் வாசித்து வந்த காலத்தில், சென்னைத் திருமயிலாப்பூர் சண்முகனடியார் சங்கத்தின் ஆண்டு விழாபோன்ற செங்குந்தர் பொதுக் கூட்டங்கள் கூடுவதைப் பத்திரிகை வாயிலாக அறிந்து அக்கூட்டங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் விஷயங்களை ஆவலோடு கவனிப்பது இவரது வழக்கம். மேலே கூறியவற்றால் இவருக்குச் செங்குந்த குல முன்னேற்றத்தில் எவ்வளவு ஆர்வமிருக்கிற தென்பது சொல்லாமலே விளங்கும். நிரம்பிய உலக அனுபவமும் விஷயங்களை ஆழ்ந்து யோசித்துச் சரியான முடிவுகட்டும் போராற்றலு முடையவர். கிராஹிய சக்தியும் தாரண சக்தியும் நிரம்பப் பெற்றிருப்பதன்றிப் பயனில கூறாமை, வீண்காலம் கழிக்காமை, பொறை, வாய்மை, தெய்வபக்தி, குலாபிமானம் முதலிய அரிய குணங்கள் அமையப் பெற்றவர். 'பொன்னினும் போற்றுக பொழுதெனும் பொருளை' என்பது இவரது பெருங்கொள்கைகளுள் ஒன்றாகும். இத்தகைய பெரியார் நமது 3-வது மகாநாட்டிற்குத் தலைவராக அமைந்தது மிகப் பொருத்தமான தென்றே சொல்லவேண்டும்.



தென்னிந்திய செங்குந்த வாலிபர் மூன்றாவது மகாநாட்டுத் தலைவர்

## உயர் திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., B.L. சரித்திரக் குறிப்பு

உயர் திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., B.L. திருநெல்வேலி ஜில்லா வீரவநல்லூரில் மிகுந்த செல்வாக்குள்ள செங்குந்த குடும்பமொன்றில் 1902-ஆம் ௵ அக்டோபர்௴ பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சுப்பிரமணிய முதலியார்; தாயார் பெயர் முத்தம்மாள்.

இவர் இளமைப் பருவத்தில் வீரவநல்லூர் மிடில் ஸ்கூலிலும் பின்னர்த் திருநெல்வேலி சி. எம். எஸ். காலேஜிலும் வாசித்தார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கிணங்க இவர் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவராக நின்று தவறாமல் முதல் பரிசு பெற்று வந்தார். இவர் ஆங்கிலக் கல்வியில் பயில்வதற்குக் காரணபூதரா யிருந்தவர் இவரது சிறிய தந்தையாராகிய ஆவுடைய முதலியாரே யாவர். சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் பி. ஏ. வகுப்புப் படித்துத் தேர்ச்சியடைந்து, பின்னர்ச் சென்னைச் சட்ட கலாசாலையில் படித்து 1928-ஆம் வருஷத்தில் பி. எல். பட்டம் பெற்று அவ்வருட முதற்கொண்டு திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டில் வக்கீலாக இருந்து வருகிறார்.

ஏனையோரைப்போல் கல்லூரியில் படித்த படிப்போடு நில்லாமல், கல்லூரியை விட்ட பிறகு வான சாஸ்திரம், சோதிடம், முதலியவற்றிலும் பயின்று மிகுந்த தேர்ச்சி யடைந்திருக்கிறார். நமது 'மித்திரன்' நான்காம் தொகுதியில் வானசாஸ்திர ஆராய்ச்சியைப்பற்றிய இவரது வியாசங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதை அன்பர்கள் அறிவர். அவையே அச்சாத்திரத்தில் இவர் எவ்வளவு விற்பனரென்பதையும் எவ்வளவு ஊக்கத்தோடு ஆழ்ந்து ஆய்ந்துள்ளாரென்பதையும் நன்கு விளக்குகின்றன. கலாசாலை வகுப்பில் படித்த காலத்தில் இவர் சர்வ கலாசாலை இராணுவப்படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சியும் பெற்றுள்ளார். துப்பாக்கிப் பயிற்சியில் இவர் மிகவும் கைதேர்ந்தவர் என்பது இவர் பெற்றுள்ள விசேஷப் பரிசுகளால் நன்கு விளங்கும்.

வேட்டைக்குச் சென்ற கண்ணப்ப நாயனார் திருக்காளத்தி மலை யேறுங்கால், 'நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை யேறத் தாமும், பேணு தத்துவங்க ளென்னும் பெருகு சோபான மேறி' என்று நாணனாகிய தமது தோழனும், மலைமேலே திச் சிவபிரானிடத்துச் செலுத்த இருந்த பேரன்பும் முன்னே செல்ல நாயனார் பின்னே சென்றார் என்னும் பொருள்படச் சேக்கிழார் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது போலக், குலாபிமானம் முன்னே தோன்ற நமது முதலியார் அவர்கள் அதன் பின்னே தோன்றினார் என்றே சொல்ல வேண்டும். அதாவது, குலாபிமானம் இவரது விசேஷப் பிறவிக் குணங்களுள் ஒன்றென்றே சொல்லலாம். இவர் சென்ற 10 வருஷங்களாகத் திருநெல்வேலி ஜில்லாவில் நம்மவர் வதியும் கிராமங்கள் தோறும் சென்று பிரசாரம் செய்தும், சங்கங்கள் நிறுவியும், நம்மவர்களிடையே கிளர்ச்சியையுண்டாக்கி, ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் வளர்க்க அரும்பாடு பட்டு வருகின்றார். நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகச் சேலம், கோயம்புத்தூர், மலையாளம் முதலிய ஜில்லாக்களில் குல முன்னேற்றம் கருதிப் பிரசாரம் செய்துள்ளார். முதலியார் அவர்கள் குலாபிமானத்தோடு ஆழ்ந்த கருத்தும், வாய்மை, பொறை, இன்சொல் முதலிய நற்குணங்களும், நிரம்பப் பெற்றவர்.

திரு. முதலியார் அவர்கள் பிறப்பிடமாகிய வீரவநல்லூர்ச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்திற்குப் பல வழிகளிலும் உதவி புரிந்து வருவதோடு அச்சங்கத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். ஈண்டு இச் சங்கத்தைப்பற்றியும், அதன் ஸ்தாபகரைப்பற்றியும் ஒரு சிறிது கூறவேண்டியது அவசியமென்றே தோன்றுகிறது. செங்குந்த சிரோமணியாக விளங்கிய காலஞ்சென்ற திருநெல்வேலி பிரபல வக்கீல் வ. பி. பூமிநாத முதலியார் அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற பல சங்கங்களுள் இவ் வீரவநல்லூர் சங்கமும் ஒன்றாகும். இது 1917-ஆம் வருஷத்தில் ஸ்தாபிக்கப் பெற்று இன்றுவரை இடைவிடாது ஊக்கத்துடன் குலத்தொண்டாற்றி வருவதோடு, ஆண்டு விழாக்களை ஜில்லா மகாநாட்டு முறையில் சிறப்புடன் நடத்தி வருகின்றது. இது, அப்போதைக் கப்போது தோன்றி மறைந்து போகும் பல சங்கங்களைப்போ லல்லாமல் சென்ற 14 வருடங்களாக இடைவிடாது உழைத்து வரும் சங்கமாகும். திருநெல்வேலி ஜில்லாவிலேயே செங்குந்த மக்களிடைக் குலாபிமான முதலிய சிறந்த குணங்களைப் பரப்பி, அறிவுச்சுடர் கொளுத்திக் குலத்தீபம் போல் விளங்குவது இச் சங்கமொன்றே. இச் சங்கத்தின் உழைப்பின் பயனாகப் புலால் மறுத்தல், சைவாசாரம் முதலியவற்றை இவ்வூரில் பெரும்பாலோர் மேற்கொண் டொழுகி வருகின்றனர். தன்னந்தனியரா யிருந்து தமக்கிருந்த வேலைகளிடையே குலத்தொண்டையும் மேற்கொண்டு திருநெல்வேலி ஜில்லாவில் சீர்திருத்த வேலை செய்து வந்த பூமிநாத முதலியார் அவர்கள் இளமையிலேயே மண்ணுலக வாழ்க்கையைத் துறந்தது நமது துர்ப்பாக்கிய மென்றே சொல்லவேண்டும். இப்போது அவர் இருப்பாராயின் நமது இயக்கத்திற்குப் பெருந்துணையாயுதவுவார் என்பது திண்ணம்.

## காஞ்சிபுரம் நகர சபைத் தலைவருக்குத் தேநீர் விருந்து

இந்நகர் செங்குந்த மகாஜன சங்கத்தினர் தங்கள் சங்கத்தலைவர் முனிசிபல் சேர்மனாகத் தேர்ச்சி பெற்றமைக்குப் பெரிய தேநீர் விருந்தொன்று நடத்தினர். விருந்திற்குச் சென்னைத் தலைச் சங்கப் பிரதிநிதிகளான திரு. V. இரத்தின முதலியார். B.A.,B.L., திரு. தி. அ. சண்முக முதலியார், அவர்களும் M. K. ரெட்டியார், இந்தியா பத்திரிகை ஆசிரியர் ஜெ. எஸ். கண்ணப்பர், மதுராந்தகம் தாலூக் போர்டு தலைவர் நாராயணசாமி ரெட்டியார், ரிட்டயர்டு டிப்டி கலெக்டர் A. ராஜா பாதர் முதலியார், ரிட்டயர்டு தாசில்தார் ஆறுமுக முதலியார், வரதர் கோவில் ஷிரீவர் சோமசுந்தர ஐயர், அரக்கோணம் அரங்கசாமி ஐயங்கார், பச்சையப்பன் ஐஸ்கூல் தலைமை ஆசிரியர். A வரதாச்சாரியார், சங்கீத வித்வான் K சுப்பிரமணிய பிள்ளை முதலிய பெரியோர்களும் வேறு பிரபலஸ்தர்களும் கௌன்சிலர்களும் வந்திருந்தனர். எல்லோருக்கும் இனிய சிற்றுண்டி வழங்கப்பட்ட பின் பெரிய பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு இந்நகர் ஜில்லா முனிசீப் A. வெங்கடேச ராமைய ரவர்கள் தலைமை வகித்தனர். சுமார் பத்தாயிரம் மக்கள் விஜயஞ் செய்திருந்தனர். கடவுள் வணக்கத்துக்குப் பின் நகர சபைத் தலைவருக்குச் செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகத் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுத்து வந்திருந்த எல்லாப் பிரபலஸ்தர்களுக்கும் பூமாலைகள் சூட்டினார்.

பிறகு "இந்தியா" பத்திரிகை ஆசிரியர் திரு. ஜே. எஸ். கண்ணப்பரவர்கள் நண்பர் என்ற முறையில் நீண்ட சொற்பொழி வாற்றினார். செங்குந்த வாலிபர் சங்கத்தினர் சார்பாகத் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களும், சென்னைத் தென்னிந்திய மகாஜன சங்கத்தின் சார்பாகத் திரு. V. இரத்தின முதலியார் B.A.,B.L. அவர்களும், செங்குந்தர் சார்பாகத் திரு. தி. அ. சண்முக முதலியாரவர்களும் சொற்பொழி வாற்றினார்கள். பின் தலைச் சங்கத்திலிருந்து வந்த ரோஜாப்பூ மாலையைத் திரு. முதலியாரவர்களுக்குத் திரு. V. இரத்தின முதலியார் அவர்கள் சமர்ப்பித்தார்கள். வக்கீல் திரு. A. அனந்தாச்சாரியார் டாக்டர் சீனிவாசையர் முதலிய பலரும் திரு. முதலியாரவர்களைப் புகழ்ந்து சொற்பொழி வாற்றினார்கள். முனிசிபல் சேர்மன் திருவாளர் M. சாமிநாத முதலியாரவர்கள் கரகோஷத்தினிடையே எழுந்து காஞ்சிச் செங்குந்த மகாஜன சங்கத்தார் தேநீர் விருந்தின் மூலம் வாழ்த்துப் பத்திரம் கொடுத்துத் தம்மைக் கௌரவப்படுத்தினமைக்கு வந்தன மளிப்பதாகவும், தாம் 1921-ம் வருடம் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம் ஜெனரல் பண்டில் 3 அணா 9 பை இருப்பு இருந்ததாகவும், இவ்வருடம் மைனஸ் 4500 ரூபாய் இருப்பதாகவும் எடுத்துக் கூறிக் கௌன்சிலர்களையும் பொது ஜனங்களையும் தம்முடன் ஒத்துழைத்து நிருவாகத்தை நடத்த உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திரு. அக்கிராசனர் வெங்கடராம ஐயர் முடிவுரையாகச் சிறிது நேரம் பேசியானதும் இருப்பாப்புலியூர், வக்கீல் P. இரத்தினசாபதி முதலியார் B.A.,B.L. அவர்களும், சென்னை M. சண்முகசுந்தர முதலியார் M.A.L.T. அவர்களும், திரு. M. A. கனகசபை முதலியாரவர்களும் எழுதியிருந்த பாராட்டுக் கடிதங்கள் படிக்கப்பெற்றன.

பின் திரு. K. வச்சிரவேல் முதலியார் B. A. அவர்களால், காஞ்சிச் செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகத் தலைவரவர்களுக்கும், முதலியாரவர்களுக்கும், வந்திருந்த பிரபலஸ்தர்களுக்கும் மகா ஜனங்களுக்கும் வந்தனம் கூறப்பெற்றது. தேனீர் விருந்து கொண்டாட்ட விழா இரவு 7½ மணிக்கு இனிது நிறைவேறியது.

பின் சேர்மன் திரு. முதலியாரவர்கள் ஊர் வலமாக வாத்திய கோஷங்களுடனும் வாணவேடிக்கைகளுடனும் முனிசிபல் ஆபீசிற்கு அழைத்துச் செல்லப்பெற்றார்.

---

## காஞ்சிபுரம் செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்ம நிதிச் சீட்டு

வெளியூர்களுக் கனுப்பிய புத்தகங்கள் இன்னும் சரியாய் விற்று வந்து சேராமையாலும், இதுவரையும் சேர்ந்த தொகை மிகக் குறைவா யிருப்பதாலும் இச்சீட்டுக் குலுக்குந் தேதி புரட்டாசிமீ 25உயிலிருந்து தைமீ 11உக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சீட்டுப் புத்தகம் வேண்டுவோர் C. அருணாசல முதலியார், 71, புதுப்பாளையத் தெரு பிள்ளையார்பாளையம் காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இனி எக்காரணம் கொண்டும் குலுக்குந் தேதி ஒத்திவைக்கப்பட மாட்டாது.

இங்ஙனம்

S. லக்ஷ்மண முதலியார்,
C. அருணாசல முதலியார்.



# கிளர்ச்சி

## சென்னை ஜில்லா

### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்

5-12-31 அன்று திரு. S. A. ஸ்ரீராம் B. A., அவர்கள் தலைமையிற் கூடிய கூட்டத்தில் ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் M. A., L. T., அவர்கள் சங்கத் தலைவராகவும், திருவாளர்கள் ஜெ. தங்கவேல் B. A., C. நடராஜ முதலியார் B. A., இருவரும் காரியதரிசிகளாகவும், தலைச்சங்கப் பொதுக் கூட்டத்துக்குப் பிரதிநிதிகளாக இம்மூவரோடு திரு. S. A. ஸ்ரீராம் முதலியார் B. A., திரு. S. வேலாயுத முதலியார் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வைந்து பேரோடு திருவாளர்கள் K. அண்ணாமலை முதலியார், T. ராமசாமி முதலியார், D. சம்பந்த முதலியார், M. ராமலிங்க முதலியார், C. குமாரசாமி முதலியார் ஆகிய ஐவரும் மகாநாட்டுப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்

ஷை சங்கத்தின் ஐந்தாவது பொதுக் கூட்டம் இவ்வருடம் அக்டோபர் மாதம் 11-ம் தேதி சங்க வாசகசாலையில் காலை 8-30 மணிக்குக் கூடியது. கூட்டம் துவக்கப்படுமுன் திரு. மா. ப. தியாகராஜ முதலியார் அவர்கள் தலைமையில் திரு. கு. விநாயக முதலியார் அவர்கள் B. A. B. L., அட்வகேட், "கிராம சீர்திருத்தம்" என்பதைப்பற்றி ஆங்கிலத்தில் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு சு. குழந்தைவேலு முதலியார் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சங்கத் தலைவரும், தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஏனைய அங்கத்தினர்களை மேற்படி பொதுக் கூட்டத்தின் தொடர்ச்சியாக 30-11-31-ல் நடைபெற்ற கூட்டத்தில் தேர்ந்தெடுத்தனர். ஆக, இவ்வருடத்திற்குக் கீழ்கண்ட அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

S. குழந்தைவேலு முதலியார் தலைவர்; M. சரவண முதலியார் உபதலைவர்; M. P. தியாகராஜ முதலியார், M. சுந்தரவடிவேல் முதலியார் காரியதரிசிகள்; M. சம்பந்த முதலியார் பொக்கிஷதாரர்; A. இராமசாமி முதலியார், P. C. பாலசுப்பிரமணிய முதலியார் நிருவாகசபை அங்கத்தினர்கள்.

'செங்குந்த மித்திரனை இச்சங்கத்துக்கு இலவசமாக உதவும் பத்திரிகாசிரியருக்கு இக்கூட்டம் நன்றி செலுத்துகிறது' என்னும் தீர்மானமும் ஷை கூட்டத்தில் நிறைவேறியது.

## செங்கல்பட்டு ஜில்லா

### காஞ்சிபுரம் செங்குந்த வாலிபர் சங்கம்

[illegible] சித்திரை மாதம் செங்குந்த மகாநிதி அமைச்சரும் எலெக்ட்ரிகல் என்ஜினியருமான திருவாளர் மா. பா. கந்தசாமி முதலியார் B. A. B. E., அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்ற செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் செங்குந்த வாலிபர் சங்கம் என்ற பெயரோடு பல அரிய நோக்கங்களைக் கொண்டு ஷை சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் பல அன்பர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்து வருகிறார்கள்.

15-6-31-ல் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைவர், திரு. ஆ. மு. வேலாயுத முதலியார் அவர்கள் துணைத்தலைவர், திரு. D. C. கந்தசாமி முதலியார் அவர்கள் காரியதரிசி, திரு. எ. சுப்பராய முதலியார் அவர்கள் உதவிக்காரியதரிசி, திரு. தி. பச்சையப்ப முதலியார் அவர்கள் பொக்கிஷதாரர், திருவாளர்கள் எ. பொன்னுசாமி முதலியார், தா. மு. ஷண்முக முதலியார், ச. ஆனந்த முதலியார், வ. ராஜகோபால் முதலியார், ம. கெ. குப்புசாமிமுதலியார், ச. வேலு காளத்தி முதலியார் ஆகியோர் இதர அங்கத்தினர்கள்.

9-11-31-ந் தேதி மாலை 6 மணிக்கு விளக்கொளிப் பெருமாள் வீதியில், திருவாளர் க. வஜ்ஜிரவேலு முதலியார் B.A., அவர்கள் தலைமையில் கூடிய செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், D. C. கந்தசாமி முதலியார், வீ. திருஞான சம்பந்த முதலியார் ஆகியோர் தேச முன்னேற்றத்தில் செங்குந்தர்களின் நிலை எவ்வாறு இருக்கிற தென்பதைப்பற்றிப் பேசினார்கள்.

பின்பு பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் இந்நகர் முனிசிபல் தேர்தலில் திருவாளர்கள் எம். சாமிநாத முதலியார், எம். கெங்காதர முதலியார் ஆகியவர்கள் வெற்றி பெற்றதற்காக இச்சங்கமானது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது என்னும் தீர்மானத்தைக் கொண்டுவர, அது ஏகமனதாக நிறைவேறியது.

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் இரவு சுமார் 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

### ஐயங்கார் பாளையம் தெரு செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம்

14-11-31 மாலை 6½ மணிக்கு ஸ்ரீ பணாமணீஸ்வரர் ஆலயத்தில் திருவாளர். M. அன்னப்ப முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கத்துக்கும், தலைவர் முன்னுரைக்கும் பிறகு, திருவாளர்கள். த, சோமசுந்தரம், மு. நாகப்பன், மு. மாணிக்கம். M. கோவிந்

திரர் கடமை, சண்டேசுர நாயனர் புராணம், வாயில் காப்போர் குசேலரைத் தடுத்தல் முதலியவைகளைப் பற்றிச் சொற்பெருக்குகள் நிகழ்த்தினர்கள். பிறகு திரு. மா. த. சாமிநாத முதலியாரவர்கள், காஞ்சீபுரம் நகரபரிபாலன சபையின் தலைவராயமர்ந்ததற்கு இச்சங்கம் பெருமகிழ்ச்சி யடைகிறது என்னும் தீர்மானம் நிறைவேறியது.

ஷை ஆலயத்தில் 21-11-31 மாலை $6\frac{1}{2}$ மணிக்குத் திரு. A. பெருமாள் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில், கடவுள் வணக்கம் பாடப்பெற்றதும் தலைவர் முன்னுரைக்குப் பிறகு, பெரியாரைத் துணைக்கொள், உண்மையின் உயர்வு, தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டாம், நமது முன்னேற்றம் முதலியவைகளைப்பற்றி முறையே திருவாளர்கள் T. பூங்காவனம், மு. நாகப்பன், K. கந்தசாமி, M. கோவிந்தராஜன் அவர்கள் பேசிய பிறகு திரு. R. வீரபத்திரன் அவர்கள் "அனுசரிக்க வேண்டிய விதிகள்" என்பதைப்பற்றி நீண்டதோர் உபந்நியாசம் செய்தார். தலைவர் பின்னுரையின் பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது நிறைவேறியது.

ஷை சங்க ஆதரவில் 22-11-31 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஷை ஆலயத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் திரு. R. வீரபத்திரன் அவர்கள் தலைமை வகித்தார். கடவுள் வணக்கத்துக்கும் தலைவர் முன்னுரைக்கும் பிறகு, நட்பு எனும் விடயத்தைப்பற்றித் திரு. M. கோவிந்தராஜன் அவர்கள் பேசிய பிறகு திரு. A. பெருமாள் அவர்கள் "விடாமுயற்சி" என்பதைப்பற்றியும் அதற்கு உதாரணமாக, துருவ சரித்திரத்தைப்பற்றியும் நீண்டதோர் உபந்நியாசம் செய்தார். தலைவர் தம் முடிவுரையில், சிநேகத்தின் அவசியத்தைப்பற்றியும் விடாமுயற்சியின் மேன்மையைப்பற்றியும் சொற்பெருக்கு நிகழ்த்திய பிறகு, வந்தனோபசாரத்துடன் இரவு $8\frac{3}{4}$-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## வட ஆற்காடு ஜில்லா

### ஸ்ரீ சுந்தர விநாயகர் செங்குந்தர் சங்கம்

### கலவை

9-12-31 காலை 6 மணிக்குத் தலைவர் அ. சு. சின்னசாமி முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் தலைவர் முன்னுரையில் தலைச் சங்கம் 3-வது மகாநாட்டு விஷயமாக அனுப்பியுள்ள சட்ட திட்டங்களைக் குறித்துப் பேசினர். கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிய பின் 8-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

(1) நமது மூன்ருவது மகாநாட்டிற்கு நமது சங்கத்திலிருந்து வரவேற்பு அங்கத்தினராக திரு. Y. கானத்தி முதலியாரவர்களையும், பிரதிநிதிகளாக திரு. தலைவர் அ. சு. சின்னசாமி முதலியாரையும், S. அருணகிரி முதலியாரையும், த. கோ. முருகேச முதலியாரையும், எ. முனிசாமி முதலியாரையும், ஒ. நா. குப்புசாமி முதலியாரையும் அனுப்ப வேண்டும்.

(2) நம் குலத்தின் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கவர்ன்மெண்டார் பஞ்சுக்கும் சாயங்களுக்கும் வரி விதித்திருப்பதால் தற்சமயம் நூல் விலைகள் உயர்ந்துகொண்டே போவதாலும் ஆனல் நமது ஆடைகள் விலை குறைந்து கொண்டே வருவதாலும் தற்கால வியாபாரச் சீர் கேட்டினல் வறுமை வாய்ப்பட்டு மிகவும் நலிந்திருக்கும் நமது குலத்தின் வறுமை மேலிடுகிறது. இந்தக் குறையைத் தீர்க்குமாறு சர்க்காரோடு ஏற்பாடுகள் செய்யத் தலைச் சங்கத்தையும் மகாநாட்டையும் வேண்டுகிறது.

### குருவராஜபேட்டை ஷண்முகாநந்த போதுஜன சங்கம்

20-11-31ல் சுமார் 2 மணிக்கு வட ஆற்காடு ஜில்லா அரக்கோணம் தாலூகா செய்பேடு கிராமம் பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்ட்டு எலக்ஷன் ஷை தாலூகா பிராஞ்சி பிர்கா ம-ா-ா-ஸ்ரீ ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்கள் முன்னிலையில் குருவராஜப் பேட்டையில் நடந்தேறியது. ஷை கூட்டத்தில் திருவாளர் பெ. முனிசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். பொது நல நோக்கமும் தியாகமும் மிகுந்தவரும், குருவராஜப் பேட்டை செங்குந்த வாலிபர் சங்கத் தலைவருமான திருவாளர் குட்டி சிதம்பர முதலியார் அவர்கள் பிரெசிடெண்டாக எல்லா மெம்பர்களாலும் ஏகமனதாய்ப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்.

### முள்ளிப்பட்டு

### செல்வ விநாயகர் செங்குந்தர் சங்கம்

9-11-31 அன்று உபதலைவர் உயர் திரு செ. நா. நடேச முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இவ்வூர் ஏழைச் செங்குந்த குலப்பிள்ளைகளுக்காக அரைச் சம்பளத்திற்கு ஆரணி தாசில்தாரவர்களிடம் சர்டிபிகேட்டு வாங்கிக்கொடுத்துச் சுமார் 4-5 மாதங்களாகியும் இதுவரை அதற்குத் தக்க பதில் தெரியவில்லை. எனவே, தயவுசெய்து ஷை விஷயமாய்க் கவனித்துப் பதில் தெரியப்படுத்தும்படி ஆரணி B.H.S தலைமை ஆசிரியரை இச்சங்கம் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

2. இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள இரகுநாதபுரம் கள்ளுக்கடையில் பொதுவாக ஊராரும் சிறப்பாகச் செங்குந்தர்களும் மழை ஆற்று வெள்ளம் முதலிய தடைகளைப் பொருட்படுத்தாது தேச சேவையை முன்னிட்டுச் சாத்வீக மறியல் செய்வதை இச்சங்கம் பாராட்டுகிறது.

3. மித்திரனுக்கும் ஆசிரியர்க்கும் வாழ்த்து.

9-12 31 அன்று திருவாளர் புதுவை க. சோமசுந்தர முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் மூன்ருவது மகாநாட்டிற்குச் செல்ல வேண்டியவர் [illegible]



வேண்டிய கட்டணத்தையும் பற்றிக் காரியதரிசி கூறினர் ஷையூர் போர்டு பாடசாலை உதவி ஆசிரியர் உயர் திரு. K. அண்ணுசாமி பிள்ளை என்பவரால் மகாநாடு கூடுவதன் நோக்கமும், அடையும் பயனும் விளக்கிக் கூறப்பட்டன. தலைவர் முடிவுரையாக, வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

### தீர்மானங்கள்

அடியில் கண்ட மூவரை மகாநாட்டுப் பிரதிநிதிகளாக அவர்கள் சொந்தச் செலவில் செல்லும்படி தேர்ந்தெடுக்கப்பட்டது.

சங்கக் காரியதரிசி திரு. அரு. ந. சுந்தர முதலியார்; துணைக்காரியதரிசி திரு. பு. சு. குப்புசாமி முதலியார்; அங்கத்தினரான P. R. தியாகராஜன் ஆகிய மூவரும் மகாநாட்டுப் பிரதிநிதிகளாகச் சொந்தச் செலவில் செல்லவேண்டும். சங்கக் கட்டணத் தொகை நேரே செலுத்தப்படும்.

இவ்வூரில் சுமார் மூன்று வருட காலமாக தாலூக் போர்டு பாடசாலைப் பொதுக்கட்டிடத்தில் நடந்து வந்தது. இடம் போதாமல் பாடசாலை வருந்திக் கொண்டிருக்கும் நிலைமையில் இவ்வூர் புதுவை வீட்டார் அவர்கள் சொந்த இடத்தில் பிள்ளைகளுக்குக் காற்ரோட்டமும் விசாலமும் உடைய கட்டிடத்தைக்கட்டி உதவியதற்கு இச்சங்கம் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறது.

## தென்னுற்காடு ஜில்லா

### பண்ருட்டி முத்துக்கிருஷ்ணபுரம்

16-10-31-ல் சங்கப் பிரசாரகர் தமிழ்ப்புலவர் குமரகுரு முதலியார் ஷை யூருக்கு வர, திரு. மொ. அண்ணுமலை முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் பிரசாரகர் சண்முகனுதயமும் வீரவாகு தேவர் விஜயமும், மனிதர் கடமை முதலிய பல விஷயங்களைப்பற்றிப் பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. உலக முற்போக்கை யறிந்து நாமும் அடுத்த ஆண்டிலாவது இவ்வூரில் செங்குந்தர் வாலிபர் சங்கம் ஒன்று நிறுவி 5 ரூ. கட்டணம் செலுத்தி அதனைத் தலைச் சங்கத்தோடு இணைக்க வேண்டும்.

2 நமது பிள்ளைகளைப் (இருபாலாரையும்) பாடசாலைகளுக்குக் கட்டாயம் அனுப்ப வேண்டும்.

3. ஜீவகாருண்யத்தின் பாதுகாப்பாக இனிச் செங்குந்த ரெவரும் புலாலுண்ண லாகாது. உண்போர் விலக்கப்படுவர்.

4. ஆண் பெண் இருபாலாரும் கதரை நூற்றும் நெய்தும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

5. மது வருந்துவோர் அபராதம் விதிக்கப்படுவர். அதைக் கண்டு சொல்வோர் போற்றப்படுவர்.

6. இவ்வூரிலுள்ள நமது மரபினர் இனி நடக்கும் திருமணம் முதலிய சடங்குகளில் குறைந்தது அதனைத் தலைவர். மொ. அண்ணுமலை முதலியார் மூலம் அனுப்ப வேண்டும்.

### குறிஞ்சிபாடி விழற் பள்ளம்

31-10-31 இரவு 8 மணிக்குச் சித்தி விநாயகப் பெருமான் திருச் சந்நிதான முன்னர், திரு. அ. ரெ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் ஆதரவிற் கூடிய கூட்டத்தில் தலைச்சங்கப் பிரசாரகர், திரு. குமரகுரு முதலியார் "வீரவாகு தேவர் விஜயமும், வள்ளியம்மைத் திருமணமும், என்பதுபற்றி நீண்ட சொற்பொழி வாற்ற, சங்கஸ்தாபனம், மித்திரனை ஆதரித்தல், ஆண் பெண் அவசியக் கல்வி, சீவகாருண்ய வொழுக்கம், ஈகையின் இன்பம், கள்ளுண்ணுமை, கத்தரை ஆதரித்தல், வியாபார ஒற்றுமை, செல்வப்பேறு என்பனபற்றித் தீர்மானங்கள் நிறைவேறின. சுமார் 1-30 மணிக்குக் கூட்டம் நிறைவேறியது.

### சிதம்பரம் செங்குந்தர் கழகம்

29-11-31 மாலை 6 மணிக்குச் சிதம்பரம் செங்குந்த பிள்ளையார் கோயில் தெருவிலிருக்கும் பெண் பாடசாலையில் சென்னை உயர்திருவாளர். A. K. பரந்தாம முதலியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் முன்னுரைக்குப் பின் திரு. அ. முத்தையமுதலியார் அவர்கள் 'கழகத்தின் நோக்கம்' என்பது பற்றியும் திரு. K. முருகேச முதலியார் அவர்கள் 'சமூகமுன்னேற்றம்' என்பது பற்றியும் தலைவர் அவர்கள் இந்திய மக்களது தொழில் நிலையையும் அதனை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய வழிகளைப் பற்றியும் இக்கழகத்தின் சார்பாக செங்குந்தர் இரவு பாடசாலை யொன்று நியமனஞ் செய்து அதில் நமது மக்களுக்குத் தமிழ்ப் பாக்களையும் பூகோளம் சயின்ஸ் கணிதம் முதலியவற்றையும் போதிக்கவேண்டும் என்பது பற்றியும் சுமார் 2 மணி நேரம் மிகவும் அழகாகப் பேசிய பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் சுமார் 10 மணிக்கு இனிது முடிவு பெற்றது.

## சேலம் ஜில்லா

### அம்மாபேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்

பிரஜோற்பத்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 7-ம் நாள் ஆதிவாரம் இரவு $7\frac{1}{2}$ மணிக்கு ஸ்ரீமான் S. மாணிக்க முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஸ்ரீமான் A. நாகலிங்க முதலியார், M. P. பொங்கியா முதலியார், P. அர்த்தனரி முதலியார், A. தியாகராஜ முதலியார், மாரிமுத்து முதலியார், R. A. அங்கப்ப முதலியார், இன்னும் மற்ற மெம்பர்களும் கல்வி என்ற விஷயத்தைப்பற்றி விமரிசையாகப் பேசினர். ஸ்ரீமான்கள் M. P. பொங்கியா முதலியார், கந்தசாமி முதலியார், சின்ன முத்துடையார், மாரிமுத்து முதலியார், P. அர்த்தனரி முதலியார், நைனுஜல முதலியார், A. நாகலிங்க முதலியார், முதலியோர் செல்வம் என்பதுபற்றிப் பேசினர். அக்ராசனர் முடிவுரைக்குப்பின் $9\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் இனி

## மஹாத்மா காந்தி தேசீய வாலிபர் சங்கம்
### அம்மாபேட்டை

21-11-31 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி மடாலயத்தில் தலைவர் திரு. ச். கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் 21-வது கூட்டம் கூடிற்று. தேசீய வணக்கத்துக்கும் தலைவர் முன்னுரைக்கும் பின் திரு. அ. மாரிமுத்து முதலியார் திரு. மு. சுப்ரமண்ய முதலியார் திரு. சொ. ப. கந்தசாமி முதலியார் திரு. வி. மாணிக்க முதலியார் திரு. ஆ. மாரிமுத்து முதலியார் திரு. ப. கந்தசாமி முதலியார் ஆகியோர் முறையே பொறுமை என்னும் விஷயத்தைப் பற்றியும் மகாத்மாவின் கொள்கைகளைப் பற்றியும் கதரின் பெருமையைப் பற்றியும் நீண்ட நேரம் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு $8\frac{1}{2}$ மணிக்கு முடிவு பெற்றது.

28-11-31 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஷை மடாலயத்தில் திரு. ச. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் 22-வது கூட்டம் கூடிற்று. அவ்வமயம் திரு. செ. க. ஆ. மாரிமுத்து முதலியார் ஆகாரத்தைப் பற்றியும திரு. S. பழனியப்ப முதலியார் வாலிபர் கடமைகளைப்பற்றியும் திரு. பொ. சு. சண்முக முதலியார் திரு. டி. ஆர். அருணசல முதலியார் திரு. S. பழனியாண்டி முதலியார் ஆகியோர் பழைய கால பழக்க வழக்கங்களைப்பற்றியும் தற்கால நாகரீகத்தைப்பற்றியும் நீண்ட நேரம் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் $8\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது.

---

## கோவை ஜில்லா
### காரமடை செங்குந்த வாலிபர் சங்கம்

17-11-31 அன்று மாலை 8 மணிக்குச் செங்குந்த விநாயக ராலயத்தில், செங்குந்த வாலிபர் சங்கத் திறப்பு விழா N. ஸ்ரீசாமராஜா கந்தசாமி முதலியாரின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அச்சமயம் கீழ்க்கண்ட அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர் திரு. A. கொண்டப்ப முதலியார்; உபதலைவர் திரு. M. காச்சிமுத்து முதலியார்; காரியதரிசிகள் திரு. A. பழனியப்பன், திரு. S. ரங்கசாமி; பொதுக் காரியதரிசியும் பொருட்காப்பாளரும் N. S. கந்தசாமி முதலியார்.

இதர அங்கத்தினர்கள் K. ராமசாமி முதலியார், M. அர்த்தநாரி முதலியார், சிவக்கொழுந்து முதலியார், சென்னியப்ப முதலியார், அ. பழனியப்ப முதலியார், N. ரங்கசாமி முதலியார், S. அண்ணாசாமி முதலியார், சின்னநஞ்சப்ப முதலியார்.

ஷை சங்கத்தின் 2-வது கூட்டம் 11-11-31௨ மாலை 8 மணிக்கு விநாயக ராலயத்தில் திருவாளர் A. சாமிநாத முதலியார் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் அ. பழனியப்பனும் மா. காச்சிமுத்தும் முறையே ஒற்றுமை, கல்வி என்பவை பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவர் தம் முடிவுரையில் சங்கத்தின் [illegible] என்பவைபற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். வந்தனோபசாரத்துடனும் இச்சங்கம் காமாக்ஷியம்மன் கிருபையால் மென்மேலும் விருத்தியடைய வேண்டுமென்னும் பிரார்த்தனையுடனும் கூட்டம் இனிது முடிந்தது.

1. தலைச் சங்கத்துடன் நமது கிளைச்சங்கத்தை இணைக்க ரூ. 5 அனுப்ப வேண்டுமெனவும், 2. இச்சங்கம் மாதம் இருமுறை கூட வேண்டுமெனவும், 3. மெம்பர்கள் பிரதி மாதம் 1 அணா சந்தா செலுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### ஈரோடு செங்குந்த வாலிபர் சங்கம்

1-12-31௨ நடந்த வாலிபர்கள் பொதுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி 4-12-31 ௨ நடந்த பொதுக் கூட்டத்தில் ஷை சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. திருவாளர்கள் A. ராமசாமி முதலியார் தலைவராகவும், G. காவேரி முதலியார் உபதலைவராகவும், K. V. குருசாமி முதலியார் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

9-12-31 ௨ சங்கத் தலைவர் திருவாளர் A. ராமசாமி முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் நம்மவரும் கல்வியும் என்பதைப் பற்றித் திரு. ப. தங்கவேலும், நம்மவர் ஒற்றுமை என்பதைப் பற்றி திரு. மு. சீனிவாசனும் நீண்ட சொற்பொழிவுகள் ஆற்றிய பின்னர் நிர்வாக சபை மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிவுரையாக சங்கத்தின் அமைப்பைப் பற்றி விரிவான சொற்பொழி வாற்றிய பின்னர்க் கூட்டம் இரவு 11 மணிக்கு இனிது கலைந்தது.

## மதுரை ஜில்லா
### செங்குந்த இளைஞர் சங்கம்

29-11-31 அன்று மாலை $7\frac{1}{2}$ மணிக்குச் சங்க மண்டபத்தில் உபதலைவர் திருவாளர் பி. ரா. முத்துக்கருப்ப முதலியார் தலைமையின்கீழ்க் கூடிய பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

தலைச்சங்கத்தின் நான்காவது பொதுக் கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. ஈா. ப. பழனிக்குமாரு முதலியார் காரியதரிசிகள் செ. வீ. கணபதி முதலியார் க. சண்முகவேல் முதலியார் மற்றும் சி. பொன்னம்பல முதலியார் பி. ரா. முத்துக்கருப்ப முதலியார் ஆகிய ஐவரும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2. சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் தேர்தல்களில் வெற்றி பெற்ற செங்குந்தர்களான காஞ்சிபுரம் ம. த. சாமிநாத முதலியார், வைதீசுவரன் பேட்டை ரத்தினவேல் முதலியார், அருணாசல முதலியார், சடையப்ப முதலியார், துரைசாமி முதலியார் சேலம் எஸ். பி. பொன்னுசாமி முதலியார் நாகை கா. சா. நல்லமுத்து முதலியார் திருநெல்வேலி எஸ். பழனியாண்டி முதலியார் இவர்கட்கு இச்சங்கம் தனது சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

3. தலைச்சங்கத்தோடு [illegible]

---



## இராமனுதபுரம் ஜில்லா
### தேவகோட்டை செங்குந்தர்
### அபிவிருத்தி வாசகசாலைத் திறப்புவிழா

26-10-31 ஐப்பசித் திங்கள் 10-ம் நாள் செங்குந்தர் ஸ்ரீஷண்முகநாதன் புதியபஜனை மடாலயத்தில் இதுகாறும் நடந்துவந்த செங்குந்தர் அபிவிருத்தி வாசகசாலையை ஸ்ரீ குருகானந்தர் வைத்திய சாலை அதிபராகிய சைவத்திருவாளர் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் திறந்து வைத்துக் கல்வியின் பெருமை ஆசிரியர் மகிமை போதனுமுறை சங்க முன்னேற்றம் என்பவை பற்றியும் ஷை வாசகசாலை ஆசிரியர் திரு. கே. கோவிந்த நாயரவர்கள் சுகாதாரம், பூகோளம், மாணவர் கடமை என்னும் விஷயம் பற்றியும் பேசியபின் ஷை வாசகசாலை மாணவர்களால் தேவாரம் திருப்புகழ் கோஷத்துடன் இனிது நிறைவேறியது.

11-11-31அன்று செங்குந்தர் அபிவிருத்தி வாசகசாலையில் திருவாளர் நாக. மு. கருப்பையா முதலியாரவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் ஷை வாசகசாலை ஆசிரியர் திரு. கே. கோவிந்த நாயரவர்கள் ஒழுக்கம், உதவி ஆசிரியர் திரு. சுப அய்யம்பெருமாள் முதலியாரவர்கள் பெண்கல்வி, திரு. அதி. மு. ராமசாமி முதலியாரவர்கள் தமிழ் நாட்டு நிலைமை, வாணியம், திரு. சொ. நா. காளிமுத்து முதலியாரவர்கள் கந்த விரதம் திரு. நாக. வீரப்ப முதலியாரவர்கள் கல்வி, திரு. நாக. மு. சுப்பய்யா முதலியாரவர்கள் கூட்டுறவு, வியாபாரம், திரு. பெரி. செல்லையா முதலியாரவர்கள் சமூக முன்னேற்றம், திரு. S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியாரவர்கள் வாலிபர் முன்னேற்றம் சங்கத்தின் பெருமை என்பவைபற்றிப் பேசிய பின் சபை இனிது நிறைவெய்தியது.

23-11-31 அன்று திரு. S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் திரு. கே. கோவிந்த நாயரவர்கள் அறனும் அன்பும் திரு. சித. நடராஜமுதலியாரவர்கள் கார்த்திகை விரதம், கல்வி, திரு. நாக. மு. சுப்பய்யா முதலியாரவர்கள் கக்ஷிகளும் ஒற்றுமையும் திரு. அரிமு. ராமசாமி முதலியாரவர்கள் தொழிற்பகுதி, திரு. நாத. வீரப்பமுதலியாரவர்கள் வாலிபர் முன்னேற்றம். சங்கத்தின் சீர்திருத்தம், திரு. சுப. அய்யம் பெருமாள் முதலியாரவர்கள் ஒற்றுமை, ஆரு. சித்திர புத்தர முதலியாரவர்கள் கைத்தொழில் என்னும் விஷயம் பற்றிப் பேசியபின் தலைவர்கள் ஷை விஷயங்களைப் பின்பற்றியும் நமது சென்னை மூன்றாவது மகாநாட்டுக்குப் பிரதிநிதி தேர்ந்தெடுக்கவும் கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கம் ஸ்தாபிக்கவும் வேண்டுமெனத் தீர்மானிக்க இரவு 11 மணிக்குச் சபை இனிது நிறைவெய்தியது.

### மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கப் புதிய கட்டடத் திறப்பு விழா

30-11-31௨ காலை 7-30-மணிக்குக் குறித்த நன்னேரத்தில் சங்கத்தின் புஸ்தகங்கள் படங்கள் முதலிய சாமான்களைப் புதிய கட்டடத்தில் கொண்டு வந்து வைத்துத் தூபதீப வணக்கம் செய்து சர்க்கரை தாம்பூலம் வழங்கிய பின் மாலை 7-மணிக்குச் சங்கத்தலைவர் ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா முதலியாரவர்களைப் பூமாலை சூட்டி மேளதாளத்தோடு வரவேற்று அவர்களது திருக்கரத்தால் புதிய சங்கக் கட்டடத்தைத் திறந்து வைத்ததும் ஜெயகோஷ முழக்கத்துடன் அவர்களது தலைமையின் கீழ்க் கூட்டம் ஆரம்பித்தது. கடவுள் வணக்கத்துக்குப்பின் காரியதரிசி திரு. முனியப்ப முதலியார் அவர்கள் திறப்புவிழா வைபவத்தைப்பற்றி விரிவாகச் சொற்பெருக்கு நிகழ்த்தினார். பின்னர் திருமதி கமலாட்சி, தனலட்சுமி, முனியாயி, ரெத்னம்பாள் என்னும் மாணவிகளால் பெண்கல்வி பெண்கள் முன்னேற்றம், என்பவை பற்றிச் சம்பாஷணையும் உபந்யாஸமும் நடந்தன. பிறகு திரு. கதிமு. எம். வீராசாமி நாயுடுகாரவர்கள் சங்கமுன்னேற்றத்தைப் பற்றியும் திரு. ஜோஸப் அவர்கள் கல்வியும் ஒற்றுமையும் என்பது பற்றியும், பிரசங்கம் செய்தார்கள், தலைவரவர்கள் முடிவுரையானதும் காரியதரிசியவர்கள் போர்டுபள்ளி மாணவிகளுக்கு முதலில் நன்றிகூறி தலைவரவர்கள் நன்கொடையாக, ஒவ்வொரு குழந்தைக்கும் நோட்டுப் புஸ்தகம் பென்சில் சற்கண்டு இவைகள் பரிசளித்தார். இச்சங்கப் புதிய கட்டடத்தைச் சுமார் 600 ரூ. செலவில் அதிக முயற்சியுடன் உடல் நலங் கருதாது உழைத்துத் திறப்புவிழா வைபத்திற் கேதுவாய் நிர்மாணித்த இச்சங்கத்தின் மூலபுருஷராகிய உயர்திருவாளர் நா. சு. கு. நாகசுந்தர முதலியாரவர்களுக்கு மிகமிக நன்றியும் இக்கட்டடவேலையைத் துரிதமாய் முடித்த தச்சர், கொல்லத்துக்காரர் முதலியோருக்கு நன்றிகூறி வஸ்திரமும் வழங்கப்பட்ட பின் வந்தனோபசாரத்துடன் 11-மணிக்குக் கூட்டம் இன்னிசையுடன் கலைவுற்றது.

---

## மலபார் ஜில்லா பாலப்புரம்
### செங்குந்தர் சங்கம்

6-12-31-இல் திரு. M. ராமன் முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் சங்க உத்தியோகஸ்தரும் மகாநாட்டுக்கும் தலைசங்கப் பொதுக் கூட்டத்துக்கும் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைச்சங்கத்திற்குக் கட்டண ரூபாய் அனுப்பவும், மலபார் ஏழைமாணவர்க்கு உபகாரச்சம்பள முதவக் கல்வி நிதியை வேண்டவும், நம்மவர் கிராமங்களிற் சிறப்பாகத் தாய்ப் பாஷையைப் பரப்ப முயற்சிக்கவும் தீர்மானங்கள் நிறைவேறின.